DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1375 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 12, 2022

# "கொலையாளி" கோட்டாபாய நேற்று வியாழன் இரவு தாய்லாந்தின் டான் மியூயாங் விமான நிலையத்தில் தனது மனைவியுடன் இறங்கினார்



கடந்த மாதம் இலங்கையில் இடம்பெற்ற அரசுக்கும் நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்த கோட்டாபாய இராஜபக்சவுக்கும் எதிரான போராட்டங்களில் இருந்து தப்பி ஓடிய கோத்தபய ராஜபக்ச, ஜூலை நடுப்பகுதியில் இருந்து அவர் தங்கியிருந்த சிங்கப்பூரில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு நேற்று இரவு வியாழக்கிழமை இரவு தாய்லாந்து சென்றடைந்தார் என்ற நம்பகமான செய்தி வெளியாகியுள்ளது.

தாய்லாந்து நாட்டின் தொலைக்காட்சி சேவைகள், ராஜபக்சவும் அவரது மனைவி என்று நம்பப்படும் ஒரு பெண்ணையும் பாங்காக்கின் டான் மியூயாங் விமான நிலையத்தில் உள்ள விஜபி மண்டபத்திற்கு வெளியே லிமோசினுக்கு அழைத்துச் செல்வதை தமது முக்கிய செய்திகளாகக் காட்டின, பின்னர் அந்த தம்பதியை வெளியிடப்படாத இடத்திற்குச் சென்றதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன

தாய்லாந்தில் உள்ள அதிகாரிகள் புதன் கிழமையன்று, அவரை தாய்லாந்துக்குள் நுழைய அனுமதிக்குமாறு இலங்கை அரசாங்கத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும், எனவே அவர் தற்காலிகமாக தாய்லாந்தில் தங்க அனுமதிக்கப்படுவார் என்றும் அதிகாரிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

# இன்று வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகும் மூன்று நாள் தொடர் இசைப் பெருவிழா 'கோடையில் ஒரு இசை மழை'





உலகத்தமிழ் ஒலிபரப்பாளர் பி. எச் அப்துல் ஹமீது அவர்களின் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 12 ம் திகதி மாலை 8100 **Steeles Ave East , MARKHAM MEADOW** திறந்த வெளி அரங்கில் நடைபெறஉள்ளதுடன் இந்த வாரம் வெள்ளி , சனி , ஞாயிறு 3 தினங்களும் கலை நிகழ்ச்சிகள் , வர்த்தக சாவடிகள் என இந்த விழா கோலாகலமாக நடைபெற உள்ளது

இதில் கலந்து கொள்வதற்காக இலங்கை , இந்திய , ஐரோப்பிய கலைஞர்கள் இங்கு வருகை தந்திருப்பதுடன் கனடிய தமிழ்க் கலைஞர்களும் இணைந்து சிறப்பிக்க உள்ளனர், 3 தினங்களும் அனுமதி இலவசம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

இங்கே காணப்படும் படங்களில் இந்த விழாவில் கலந்து கொள்ளவென பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் பிரபல ஈழத்துக் கலைஞர்கள் தயா மற்றும் குணா ஆகியோர் விழான நிலையத்தில் ஐபிசி புகழ் எஸ். கே. ராஜன் அவர்களால் வரவேற்கப்பெறுவதையும் நேற்று மாலை ஸ்காபுறோவில் இடம் பெற்ற சந்திப்பொன்றில் நண்பர்களோடு காணப்படுவதையும் பார்க்கலாம்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கிகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Help Wanted

**Indoor shopping mall looking for full time maintenance employees.
More than 40 hrs weekly.**

**Call: 647-218-3698**

### Be Your Own Boss

Markham / McNicoll

Units for sale at
Majestic City Mall.
Very busy Tamil mall.
Corner 2 units together for sale.
Possible for men/ladies salon or any other business.

call FILONA:
(647) 606-1009

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### லஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**

**647-961-6886**

### மொன்றியாலில் உணவகத்தில் வேலை வாய்ப்பு

மொன்றியாலில் உள்ள கனடிய உணவகத்தில் வேலை வாய்ப்பக்கள் உண்டு. தகுந்த சம்பளம் வழங்கப்பெறும். காலை நேர உணவு தயாரித்தல் மற்றும் ஏனைய உணவக பணிகள் செய்ய வேண்டும். தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:
1-450-774-3541

### COMPUTER REPAIR

**Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.**

**VARUNAN: 416-894-6244**

# LOOKING FOR YOUR *Dream House?*



**Call SEYON CHANDRAKUMAR**

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2022

Powered by

MAHAANS +1 (647) 704-4597
5635 Finch Ave E
Unit# 5, Toronto, ON
M1B 5K9, Canada

16 வது ஆண்டில்

## கனடா உதயன் சர்வதேச விருது விழா

Presented by

VIBRANT HOSPITALITY GROUP
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com

உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள

**உதயன் விருதுகளின் பட்டியல்**

- UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD
- UTHAYAN LEADERSHIP AWARD
- UTHAYAN YOUTH ICON AWARD
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-SRI LANKA
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-TAMIL NADU
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-MALAYSIA

**Saturday October 15th, 2022 at 6.00 pm**

விருது வழங்கலும் இராசப்போசன விருந்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இவ்விழா நடைபெறும் மண்டபம்

**Kennedy Convention Centre**
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)

For More Information,
call 416 732 1608, or 647 762 9512

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# "பயம்" கலந்த விழிகளுடன் விமானத்திலிருந்து தாய்லாந்துத் தரையில் கால்பதித்த கோட்டாபாய தம்பதி

"கொலை வெறி", "பதவி வெறி"அத்துடன் "பண வெறி" ஆகியவற்றுக்கு அடிமையாகி திடீரென தேசத்தின் தலைவனாகத் தோன்றி. தான் தோன்றித் தனமாக ஆட்சியை நடத்திய கோட்டாபாய என்னும் இனக்கொலையாளியை அவரது இனம் சார்ந்த சிந்தனையாளர்கள் இணைந்து நாட்டை விட்டு துரத்தியடித்தனர்.

மாங்கனித் தீவாம் இலங்கையின் ஆட்சி பீடத்தில சகோதரர்கள் சகிதம் அமர்ந்திருந்து. மக்கள் நலன் பார்க்காமல் மமதையுடன் ஆட்சி செய்த ராஜபக்ச சகோதரர்களில் மூத்தவராக விளங்கிய கோட்டாபாயவின் "கொட்டத்தை" அடக்கினார்கள் தென்னிலங்கையின் வீரப் புதல்வர்களும் புதல்விகளும்.. அவர்களில் பல்கலைக் கழக மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

அடக்கப்பட்டு வாழ்ந்து வந்த அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களாய் தலைநகரின் வீதிகளிலே கோசங்களி எழுப்பிய வண்ணம் கொடிகளைப் பிடித்த வண்ணம் பவனி வந்தார்கள். அவர்கள் கைகளில் சிங்கக் கொடிகள்" பறந்து கொண்டிருந்தாலும் அவர்கள் இனவாதிகளாக தமிழ் மற்றும் இஸ்லாமிய கிறிஸ்தவ மக்களுக்குத் தெரியவில்லை. இனங்களுக்கிடையில் உள்ள குரோதங்களைக் களைந்து விட்டு மத ஐக்கியம் பேணும் மக்களாக வாழ வேண்டும் என்ற தலையாய கோசம் அவர்கள் வாய்களிலிருந்து வெளிப்பட்டுக்கொண்டிருந்தது.

இவ்வாறான ஆர்ப்பாட்டம் செய்த அந்த தென்னிலங்கைப் போராளிகளின் எதிர்ப்புக்களை தாங்கிக் கொள்ள இயலாமல் தனது அட்டகாசமான ஜனாதிபதி மாளிகையையிலிருந்து தப்பி ஓடினார்கள். கோத்தாபாயவும் அவரது மனைவியும். பதவியை இராஜினாமாச் செய்தாலும் பகட்டான இராஜதந்திரி என்ற அந்தஸ்த்து மிகுந்த கடவுச் சீட்டுடன் கோட்டாபாய தம்பதி முதலில் சிங்கப்பூர் நாட்டில் கால்பதித்தார்களா. அரசின் பாதுகாப்பும் வசதிகளும் கிட்டின அவர்களுக்கு.

சிங்கப்பூர் தேசமானது முன்னேற்றமான கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் நாடாக விளங்கினாலும் தங்கள் வர்க்க நேசத்தை காட்டும் வகையில். தனது சொந்த நாட்டு மக்களையே இனப்படுகொலை செய்த ஒரு கொலையாளியயு அதுவும். இலங்கை என்னும் வளமிக்க தேசத்தை " வங்குரோத்து" நிலைக்கு கொண்டு சென்று. தான் கொள்ளையடித்த கோடிகள் ரூபாய்களை டாலர்களாக மாற்றி உலகையே ஏமாற்றிய ஒரு மோசக்காரனுக்கு" தங்கள் நாடுகளில் அடைக்கலம் கொடுக்க அந்த சில நாடுகள் தயாராக இருந்ததற்கு காரணம், ஆளும் வர்க்கத்தவராகிய கோட்டாபாயவை நிராகரித்து விடக் கூடாது என்ற ஒன்றே ஆகும்.

இவ்வாறான நிலையில் தான் தங்கியிருந்த சிங்கப்பூர் நாட்டில், தங்கியிருக்கக் கூடிய சில மாதங்கள் கழிய தற்போது. தாய்லாந்து நாட்டில் சில மாதங்களுக்கு தஞ்சம் புகுந்து கொள்ள வேண்டிய ஒரு "கட்டாயம்" கோட்டாபாயவிற்கும் அவரது மனைவிக்கும் தோன்றியுள்ளது. கொரூர கொலைவெறி கொண்ட கோட்டாபாய தம்பதி தாய்லாந்து விமான நிலையத்தில் கால் பதித்து "பயம் கலந்த விழிகளுடன் செல்வதைப் பார்த்து நாம் ஒன்றைத் தீர்மானிக்கலாம். இலங்கையின் இனவாத சிங்களக் கட்சிகள் இரண்டையும் தென்னிலங்கை மக்களோடு இணைந்து அவர்களை "வீட்டுக்கு" அனுப்ப பாதிக்கப்ப்ட்ட அனைவராலும் முடியும் என்றே நாம் நம்பலாம்.

"கொலையாளி" கோட்டாபாயவை ஆதரிக்கும் அவர் சார்ந்த நாடுகளும் சகாக்களும் போன்று ஈழத்தமிழர்களாகிய நாம் தென்னிலயில் தொடர்ச்சியாக தோன்றியிருக்கும் அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு எமது வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவை வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கின்றோம்.

# 'கொலையாளி' கோட்டாபாய நேற்று வியாழன் இரவு தாய்லாந்தின் டான் மியூயாங் விமான நிலையத்தில் தனது மனைவியுடன் இறங்கினார்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான்-ஓச்சா, இது குறித்து தாய்லாந்தின் செய்தி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் முன்னாள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவின் உத்தேசித்துள்ள பயணம் குறித்து தாம் அறிந்திருப்பதாகவும், முன்னாள் ஜனாதிபதி மூன்றாவது நாட்டில் தஞ்சம் கோரி வருவதால் மனிதாபிமான காரணங்களுக்காக அனுமதி அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். தாய்லாந்தில் இருக்கும் போது ராஜபக்ச அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார் என தான் உறுதியளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கோட்டாபாய ராஜபக்ச தனது பயணத் திட்டம் குறித்து பகிரங்கமாக கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. கடந்த மாதம் இலங்கையிலிருந்து தப்பிச் சென்ற அவர், முதலில் இலங்கை இராணுவ விமானத்தில் அண்டை நாடான மாலத்தீவுக்குச் சென்று பின்னர் சிங்கப்பூருக்குச் சென்றார், அங்கு அவரது விசா வியாழக்கிழமை காலாவதியானது.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தீர்வுகளை கோரி இலங்கையில் பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகள் இடது சாரி இயக்கங்கள் ஆகியன பல மாதங்களாக பாரிய வீதிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இலங்கையின் தலைநகரான கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகளை ஆக்கிரமித்துள்ள எதிர்ப்பாளர்கள், மருந்துகள், உணவு மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறைக்கு வழிவகுத்த பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ச குடும்பத்தின் தவறான நிர்வாகம் மற்றும் ஊழலைக் குற்றம் சாட்டுகின்றனர

தாய்லாந்து வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் டனி சங்கராட் புதன்கிழமை கூறுகையில், தாய்லாந்தில் கோட்டாபாய ராஜபக்ச தங்கவிருப்பது தற்காலிகமானது, பயணத்தை நோக்கமாகக் கொண்டது.

அரசியல் தஞ்சம் கோரப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி ராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருப்பதால், அவர் விசா இன்றி 90 நாட்கள் தங்க அனுமதிக்கப்படுவார் என தெரிவித்துள்ளார்.

இலங்கை நாட்டின் பொருளாதாரத்தை தவறாக நிர்வகித்ததற்காக விமர்சிக்கப்படுவதோடு, 2009 இல் முடிவடைந்த இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது அவர் பாதுகாப்பு செயலாளராக இருந்து போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக மனித உரிமைக் குழுக்களால் கோட்டாபாய ராஜபக்ச மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதும் அவரை தாய்லாந்து அரசாங்கம் கைது செய்ய வேண்டும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உட்பட பல சர்வதேச தமிழர் அமைப்புக்கள் உலக நாடுகளையும் குறிப்பாக தாய்லாந்து அரசாங்கத்தையும் வற்புறுத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவில் இருந்து மடு மாதா ஆலயம் நோக்கி பாத யாத்திரையாக செல்லும் பக்தர்கள்!



மடுமாத ஆலயத்தின் ஆவணி திருவிழா வரும் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தின் பல் பாகங்களில் இருந்தும் இன மத பேதமின்றி மடு திருத்தலம் நோக்கிய பக்தர்களின் நடைபயணம் இன்றைய தினம் பாண்டியன்குளம் நட்டன்கண்டல் பகுதியை வந்தடைந்துள்ளது .

எதிர்வரும் 15 ஆம் திகித மடு அன்னையின் ஆவணி திருவிழா நடைபெறவுள்ள நிலையில் வடக்கில் உள்ள மாவட்டங்களில் இருந்து மக்கள் பாதாயாத்திரையாக செல்கின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு,இரணைப்பாலை வற்றாப்பளை பகுதிகளில் இருந்து கட்டம் கட்டமாக மக்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவுசெய்ய நடைபயணம் மேற்றகொண்டு வருகின்றார்கள்.

இதேவேளை யாழ்ப்பாணம் கரவெட்டி, துன்னாலை சதாசகாய மாதா ஆலயத்திலிருந்து நேற்று முன்தினம் நடைபயணம் மேற்கொண்டிருந்த பக்தர்கள் இன்று காலை நட்டாங்கண்டல் பகுதியை வந்தடைந்துள்ளனர்

கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்திருந்த கொரோனா காரணமாக கடந்த ஆண்டு 13 ஆம் திகதிக்கு பின்னர் ஆலயத்திற்கு செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் இவ்வருடம் அதிகளவான மக்கள் நேர்த்தி கடன்களை நிறைவுசெய்ய கட்டம் கட்டமாக நடைபயணம் மேற்கொண்டுள்ளதாக பக்தர்கள் தெரிவித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த பக்த்தர்கள் முல்லைத்தீவு-மன்னார் எல்லை கிராம பாதையான பாண்டியன்குளம் , நட்டாங்கண்டல்,பாலம்பிட்டி சென்று அங்கிருந்து மடுவிற்கு செல்வதாக தெரிவித்துள்ளார்கள்.

# சுருவில் மக்கள் ஒன்றியம் நடாத்தும் வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டிகளும் – 2022

**சுருவில் மக்கள் ஒன்றியம் நடாத்தும் வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும், விளையாட்டுப்போட்டியும் எதிர்வரும் ஆவணி மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (14-08-2022) Colonel Denfor (73 Colonel Denforth rail Toronto On M1C 1P8) Area 4 பூங்காவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று காலை 10 மணிக்கு ஆரப்பிக்கப்படுவதோடு பல போட்டிகளும் நடைபெறும். அன்றைய தினம் சுருவில் மக்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கின்றோம்.**

**தொடர்புகளுக்கு:**
**தி. பிரபாகரன் (தலைவர்) 647 622 6679**
**உமா ரூபன் (செயலாளர்) 416 617 4671**

உலக செய்திகள் World News

# தாய்லாந்திடம் தஞ்சம் கோரும் கோட்டபாய

## கோட்டாபயவின் வருகை தொடர்பாக தாய்லாந்து வெளியிட்ட தகவல்

*கோட்டாபயவின் அடுத்த பயணம் ஆரம்பம்!*
*செல்லவுள்ள நாடு தொடர்பில் வெளிவந்துள்ள தகவல்*



தாய்லாந்துக்கு விஜயம் செய்ய இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சு இன்று தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிக்கு அரசியல் தஞ்சம் கோரும் எண்ணம் இல்லை என தாய்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் Tanee Sangrat தெரிவித்துள்ளார்.

இராஜதந்திர கடவுச்சீட்டின் கீழ், கோட்டாபய ராஜபக்சவை 90 நாட்கள் தங்கியிருக்கும் நோக்கில் உள்நுழைய அனுமதிப்பதில் தாய்லாந்திற்கு எந்தப் பிரச்சினையையும் Tanee Sangrat குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ எப்போது வருவார் என்று தாய்லாந்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தகவல் வெளியிடவில்லை. (நன்றி: தமிழ்வின்) (இந்த ஒழுங்குகளை ரணில் அரசாங்கம் செய்வதாக ஒரு செய்தியுமுண்டு.)

பிற்குறிப்பு:

கோட்டபாய தனது பன்னிரண்டு வருடங்களுக்கு மேலான கொடுங்கோல் ஆட்சியில் தமிழரை நாடு நாடாக ஓட ஓட விரட்டினார். இன்று அந்தக்கர்ம வினை அவரையே நாடு நாடாக ஓட ஓட விரட்டுகிறது. தமிழரை அணைக்க பல நாடுகள் முன்வந்தன. ஆனால் கோதாவை ஏற்க உலகில் எந்த நாடும் முன்வரவில்லை. இனிமேலாவது இலங்கை ஆட்சியாளர்கள் புத்த பகவான் கூறிய அறவழியில் நடப்பார்கள் என எதிர்பார்ப்போம்.

**- விக்டர்**

# கோத்தபாய எங்கு சென்றாலும் நீதிக்கான போராட்டம் தொடரும்!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

இனப்படுகொலையாளியும், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியுமாகிய கோத்தபாய இராஜபக்ச எந்த நாட்டுக்கு சென்றாலும், உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் அவரை கைது செய்யக் கோரும் நீதிக்கான போராட்டம் தொடரும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.

இரவோடு இரவாக நாட்டை விட்டு வெளியேறி மாலைதீவூடாக சிங்கப்பூரில் சென்று, அங்கிருந்து தற்போது தாய்லாந்துக்கு செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் நா.தமிழீழ அரசாங்கம் இதனை தெரிவித்துள்ளது.

சிங்கப்பூர் சட்டமா அதிபரை நோக்கி முன்னெடுக்கப்பட்டிருந்த கையெழுத்துப் போராட்டம், தாய்லாந்து சட்டமா அதிபரை நோக்கியதாக மாற்றம் செய்யப்படுவதோடு, முன்னராக பெறப்பட்ட கையொப்பங்கள் நீதிக்கான நோக்கத்தின் அடிப்படையில் இதனோடு இணைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இந்த http://tgte-us.org/ இணையப்பக்கத்துக்கு சென்று (தொடுப்பு : https://tgte-us.org/?page_id=4340) இலகுவாக ஒப்பமிட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, நீதிக்கான போராட்டத்தில் அனைவரையும் பங்கெடுக்குமாறு கோரியுள்ளது.

இனப்படுகொலை, மானிடத்திற்கெதிரான குற்றம் மற்றும் போர்க் குற்றங்களைப் புரிந்ததற்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் உள்ளதாக ஐக்கிய நாடுகள் அறிக்கைகள் கூறியுள்ளன. 1948ம் ஆண்டு இன அழிப்புச் சட்டத்தின் கீழும், 1949ம் ஆண்டு ஜெனீவாச் சட்டங்களின் கீழும் மற்றும் 1977ம் ஆண்டு Additional protocol 1 இன் கீழும் சர்வதேச சட்டங்களின் கீழ் கையெழுத்துப் போராட்டத்தின் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.




Thailand Urged to Arrest Visiting Former Sri Lankan President Gothabaya for Tamil Genocide: TGTE

# சொப்கா பீல் குடும்பமன்றம் ஒன்று கூடல் - 2022

## உணவு வங்கிக்கு உணவு சேகரித்துக் கொடுக்கும் வழக்கம் சொப்கா மன்றத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது

**குரு அரவிந்தன்**



**பீ**ல் பகுதியில் உள்ள சொப்கா குடும்ப மன்ற ஒன்று கூடல் சென்ற ஞாயிற்றுக்கிழமை 07-08-2022 மிசசாகா கொம்யூனிட்டி சென்ரர் பூங்காவில் இடம் பெற்றது. புலம் பெயர்ந்து வந்த இங்குள்ள இளம் தலைமுறையினரின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு இயங்கிவரும் இந்த சொப்கா மன்றம், ஒன்று கூடலின் போது மிசசாகா உணவு வங்கிக்காகவும் உணவுப் பொருட்களைச் சேகரித்தது குறிப்பிடத் தக்கது. அங்கத்தவர்கள் மனமுவந்து உணவுப் பொருட்களை கொண்டு வந்து சேகரித்தனர். உணவு வங்கிக்கு உணவு சேகரித்துக் கொடுக்கும் இந்த வழக்கம் பல வருடங்களாகத் தொடர்ந்தும் சொப்கா மன்றத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதைவிட சொப்கா மன்றம் பூங்கா துப்பரவாக்கல், இரத்ததானம், முதியோருக்கான வகுப்புகள், மாணவர்களுக்கான சங்கீத, தமிழ் வகுப்புகள், வாராவாரம் முதியோர் ஒன்றுகூடல்கள், முதியோர், இளையோருக்கான பயிற்சிப் பட்டறைகள், முத்தமிழ் விழா, பொங்கல் விழா, முதியோருக்கான ஓய்வூதிய சேவை போன்ற தன்னார்வத் தொண்டு சேவைகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. கோவிட்-19 காலத்தில் முதியோருக்குத் தேவையான தொண்டு சேவையைச் சொப்கா குடும்ப மன்ற இளையோர் செய்து கொடுத்தது பாராட்டுக்குரியது. இதைவிட சிறுகதைப் பயிற்சிப் பட்டறை மூலம் பயிற்சிபெற்று, மன்ற அங்கத்தவர்களான பெண் எழுத்தாளர்கள் 16 பேர் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து "நீங்காத நினைவுகள்" என்ற பெயரில் கனடா பெண் எழுத்தாளர்களில் முதலாவது சிறுகதைத் தொகுப்பாக வெளிவந்து சாதனை படைத்திருந்தது. மற்றும் இளையோரால் சமயற்கலை பற்றிய உணவு வகைகளை எப்படிச் சமைப்பது என்பது போன்ற விபரங்கள் அடங்கிய மின்நூல் ஒன்றும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. கோவிட்-19 காரணமாக வீட்டுக்குள் அடைந்து கிடந்தவர்களுக்கு இது புத்துணர்வு தரும் ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது. இந்த ஒன்று கூடலின் போது பங்கு பற்றிய அங்கத்தவர்களுக்குக் காலை உணவும், மதிய உணவும் வழங்கப்பட்டது. சிறுவர், சிறுமிகள் மிகவும் உற்சாகத்தோடு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றினார்கள். பெரியோருக்கான சொல்தேடல் போட்டியும், இன்னும் பல நிகழ்ச்சிகளும் தொடர்ந்து இடம் பெற்றன. விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்குச் சிறப்பு விருந்தினர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை 5 மணியளவில் இனிதே நிறைவு பெற்ற இந்த ஒன்றுகூடல், சிறப்பாக அமைவதற்குச் சொப்கா நிர்வாகசபை அங்கத்தவர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருந்தனர்.








# இந்தியா எனத் தெரிவித்து இலங்கை எல்லையில் இறக்கிவிடப்பட்ட அகதிகள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

திருகோணமலையில் இருந்து தமிழ்நாட்டிற்குச் சென்றவர்களை இலங்கை எல்லையில் இறக்கிவிட்டு படகு ஓட்டி தப்பிச் சென்றுள்ளார்.

திருகோணமலை மற்றும் வவுனியாவைச் சேர்ந்த 13 பேர் மன்னார் ஊடாக தமிழகம் தப்பிச் சென்றுள்ளனர். இவ்வாறு படகு மூலம. தமிழகம் செல்ல முற்பட்டவர்களை ஏற்றிச் சென்ற படகு ஓட்டி தலைமன்னார் இராமேஸ்வரம் இடையே உள்ள 6ஆவது தீடையில் இறக்கி விட்டுள்ளார்.

இலங்கை இந்தியாவின் இடையே உள்ள 11 தீடைகளில் 6 தீடை இலங்கை எல்லையிலும் 5 தீடை இந்திய எல்லையிலும் உள்ளது. இதனால் 6 ஆவது தீடையில் நின்றவர்களை இன்று காலை மன்னார் கடற்படையினர் சென்று ஏற்றி வந்துள்ளதோடு மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.



# IMHO-USA, Ratnam Foundation-UK அமைப்புக்களின் நிதிப்பங்களிப்பில் பூநகரி பிரதேச 1000 முன்பருவ பள்ளிச் சிறார்களுக்கான போசாக்குணவு வழங்கும் செயல்திட்டம்



தற்போது நாட்டில் நிலவும் மிக மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக முன்பள்ளிச் சிறார்களில் பெரும்பாலானோர் போசாக்கு இன்றி பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களது வரவும் முன்பள்ளிகளில் குறைந்து செல்கின்றது என்ற ஆதங்கம் பலராலும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டான சூழ்நிலையை கருத்தில் கொண்டு கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைவாக பூநகரி பிரதேசத்திலுள்ள 51 முன்பள்ளிகளில் பயின்று வரும் 1000 சிறார்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் செயற்பாடு மேற்படி IMHO-USA மற்றும் Ratnam Foundation-UK அமைப்புக்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் வழங்கப்படவேண்டிய உணவு பற்றிய அறிவுறுத்தல்கள் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்பள்ளிக்கு பொறுப்பான உதவிக்கல்வி பணிப்பாளரினால் வழங்கப்பட்டுள்ளது. நெத்தலி, மரக்கறி வகைகள், முட்டை மற்றும் தானியங்கள் சேர்ந்ததான சாதம் அத்தோடு பசும்பால்,பழவகைகளையும் சேர்க்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப வைபவம் இம்மாதம் 3ஆம் திகதி அடைக்கல அன்னை (பூநகரி நகரம்) மற்றும் மழலைகள் (வட பூநகரி) முன்பள்ளிகளில் சம்பிரதாய பூர்வமாக IMHO அமைப்பின் வதிவிட பணிப்பாளர் திரு. சு.கிருஷ்ணகுமார் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் முன்பருவ பிள்ளை பிரிவு உதவிக்கல்விபணிப்பாளர் திரு. க.யுவராசா, அருட்தந்தை அஜித் துலக்சன் அடிகளார், பூநகரி பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் இணைப்பாளர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டிருந்தனர். போசாக்கு உணவின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வும் பெற்றோருக்கு வழங்கப்பட்டது.

இறுதியில் IMHO-USA அமைப்பின் தலைவர் வைத்திய கலாநிதி திருமதி. ராஜம் தெய்வேந்திரம் மற்றும் Ratnam Foundation-UK அமைப்பின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான கலாநிதி திரு. இரத்தினம் நித்தியானந்தன் போன்றோரது அர்ப்பணிப்பானதும் மனித நேயம் மிக்க அனைத்து செயல்பாடுகளுக்கும் மனப்பூர்வமான நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.







# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை கைது செய்ய கோரி கையொழுத்து வேட்டை ஆரம்பிப்பு

சிங்கப்பூரில் தஞ்சமடைந்துள்ள இலங்கையின முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை சிங்கப்பூர் அரசு கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வலியுறுத்தி தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை கையெழுத்து போராட்டம் சனிக்கிழமை (06) யாழ் நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபிக்கு முன்னால் ஆரம்பித்து வைத்தனர்.

எமது தாய் மண்ணில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட 2009 இனவழிப்பின் உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றின் சூத்திரதாரியாவார் இந்த இனப்படுகொலையாளனை கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்வதோடு எமக்கான நீதியை பெற்று தருமாறு கோருவதோடு சிங்கப்பூரில் தஞ்சம் அடைந்திருக்கும் இந்த கொடுங்கோலனை சிங்கப்பூர் அரசு கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வலியுறுத்தி உலகளாவிய ரீதியில் கையெழுத்து போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

எனவே இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக தமிழ்த்தேசிய பண்பாட்டுபேரவை நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபிக்கு முன்னாள் இந்த கையொழுத்து போராட்டத்தை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த கையொழுத்து போராட்டம் தாயகத்தில் ஒவ்வொரு பிரதேசமாக ஒவ்வொரு நாளும் இடம்பெறும் எனவே இந்த போராட்டத்தில் தாகத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனின் கடமை என நினைத்து வேற்றுமைகளை மறந்து ஒரே இலட்சியத்திற்காக ஒன்றுபட்டு கையெழுத்திட அழைக்கின்றோம் என தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை தலைவர் எஸ். நிசாந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.



**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**



# மாந்தை கிழக்கும் மற்றும் துணுக்காய் பிரதேச செயலக ஊழியர்கள் கவயீர்ப்பு போராட்டம்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் அலுவலக தேவைக்கு வைக்கப்பட்டிருந்த எரிபொருளை புதுக்குடியிருப்பு பொலிஸார் எடுத்துச்சென்று பிரதேச செயலாளருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமையை கண்டித்து துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கிலும் பிரதேச செயலக ஊழியர்கள் இன்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை நிர்வாக சேவை சங்கம் பிரதேச செயலகங்களில் முன்னெடுக்கும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலக ஊழியர்களும் இன்று சுமார் 2 மணி நேரம் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது அலுவலக பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சோதி நகர் கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்ற இலவச நடமாடும் மருத்துவ முகாம்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையிலும், போக்குவரத்து வசதியின்மையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு மடு பிரதேச செயலாளர் பிரில் சனிக்கிழமை (6) காலை முதல் இலவச நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் வாசிப்பு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சோதி நகர் கிராம அலுவலர் பிரிவில் (6) சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நடமாடும் மருத்துவ முகாம், வைத்திய கலாநிதி எல்மர் எட்வேட், சமூக சேவகர் இ.எட்வின் அமல்ராஜ் மற்றும் புலம் பெயர் தமிழ் உறவுகளின் நிதி மற்றும் பங்களிப்புடன் இடம் பெற்றது.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சோதி நகர் கிராம பொது மண்டபத்தில் இடம் பெற்ற நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் வாசிப்பு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் பூமலந்தான், சோதி நகர், மடு றோட், சின்னப்பட்டிவிருச்சான் ஆகிய கிராமங்களில் இருந்து நூற்றுக்கணக்கான மக்கள் வருகை தந்து இலவச மருத்துவ சேவையை பெற்றுக் கொண்டதுடன் தேவையானவர்கள் வாசிப்பு மூக்குக்கண்ணாடி களையும் பெற்றுக்கொண்டனர்.

குறித்த நடமாடும் மருத்துவ முகாமில் கிராம அலுவலர் மற்றும் வைத்தியர்கள் கலந்து கொண்டிருந்ததோடு நாட்டில் மீண்டும் "கொரோனா" தொற்று அதிகரித்து காணப்படும் நிலையில் உரிய சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.





# தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனை விசாரணைக்காக 4 ஆம் மாடிக்கு அழைப்பு



தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரனை எதிர்வரும் 15 ஆம் திகதி விசாரணைக்கு 4 ஆம் மாடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் புதன்கிழமை (10) மன்னார் பொலிஸ் ஊடாக குறித்த அழைப்புக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு அலுவலகத்தில் விசாரணைக்கு சமூகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த பெப்பிரவரி மாதம் 18 ஆம் திகதியும் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு தொடர்ந்து சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் விசாரணை என்கிற போர்வையில் அச்சுறுத்தும் செயற்பாட்டில் அரசு முன்னெடுத்து வருகின்றமை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி யான சூழ்நிலையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் விசாரணை என்கிற போர்வையில் அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றமை சமூக ரீதியில் விசனத்தை ஏற்படுத்தும் செயல்பாடாக உள்ளதாக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

இந்தியா செய்திகள்
India News

# கீழடி அகழாய்வை அமர்நாத் இராமகிருட்டிணனிடம் ஒப்படைக்கவேண்டும்

## தமிழக முதல்வருக்கு பழ. நெடுமாறன் வேண்டுகோள்



கீழடியில் 8ஆம் கட்ட அகழாய்வுக்குச் சரியான இடத்தை தேர்வு செய்து நடத்தவில்லை என இந்தியத் தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் இராமகிருட்டிணன் கூறியிருப்பது அனைவருக்கும் அதிர்ச்சியளித்துள்ளது.

1924ஆம் ஆண்டு சிந்துவெளி நாகரிக அகழாய்வுக்குப் பிறகு இந்திய வரலாற்றில் மிகப்பெரிய மாற்றத்தினை கீழடி அகழாய்வு ஏற்படுத்தியது. இந்த அகழாய்வை மேற்கொண்ட அமர்நாத் இராமகிருட்டிணன் அவர்களே இவ்வாறு கூறியுள்ளதை தமிழக முதல்வர் தனது கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

கீழடிப் பகுதியில் 110 ஏக்கரில் தொல்லியல் மேடு அமைந்துள்ளது. அதில் ஒரு சிறு பகுதியை மட்டுமே அமர்நாத் இராமகிருட்டிணன் குழுவினர் அகழாய்வு செய்து, தமிழரின் நாகரிகம் கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பதை கண்டறிந்தனர். எனவே அந்த 110 ஏக்கரிலும் தொடர்ந்து அகழாய்வு நடத்தப்பட்டால் மேலும் பல வரலாற்றுத் தொன்மையான தடயங்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

கீழடியில் முதன்முதல் அகழாய்வு செய்து தமிழரின் மிகத் தொன்மையான வரலாற்றுச் சுவடுகளை உலகிற்கு வெளிப்படுத்திய அமர்நாத் இராமகிருட்டிணன் அவர்கள் தற்போது ஒன்றிய அரசில் பணியாற்றுகிறார். அவரை தமிழகத் தொல்லாய்வுத் துறைக்கு அனுப்பும்படி ஒன்றிய அரசிடம் கேட்டுப்பெற்று கீழடி அகழாய்வில் அவரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என தமிழக முதல்வரை வேண்டிக்கொள்கிறேன்.

அன்புள்ள,

பழ. நெடுமாறன் - தலைவர்.

# அந்தமான் தமிழர் சங்கத்தில் இனிய நந்தவனம் இலக்கியச்சந்திப்பு



தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியின் இலக்கிய அடையாளமாக வெளிவந்து கொண்டிருக்கும் இனிய நந்தவனம் மாத இதழின் ஏற்பாட்டில் பல்வேறு இலக்கியச் சந்திப்பு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இச்சந்திப்பில் இலக்கிய ஆளுமைகளுக்கும் சமுகே சேவகர்களுக்கும் விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது அந்த வகையில் 05/08/2022 அந்தமான் தமிழர் சங்கத்தில் இனிய நந்தவனம் ஏற்பாடு செய்த இலக்கியச்சந்திப்பு சிறப்பாக நடைபெற்றது.

அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் எல். மூர்த்தி தலைமையில் செயலாளர் வே. காளிதாஸ், நந்தவனம் இதழாசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் முனிலையில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த கல்வெட்டு ஆய்வாளர் அறம் கிருஷ்ண அவர்களுக்கு "ஆய்வுச் செம்மல்" விருதும் சமுகசேவகர் குகன் லோகநாயகன் ஆவர்களுக்கு "சேவைச்செம்மல்" விருதும் எழுத்தாளர்கள்.

என். சண்முகம், அ.க. இராசு, லோகசந்திரபிரபு, நரசிம்மன், ராஜ்குமார், ம.திருவள்ளுவர், ரா.ஜனார்தனன், கோ. வெங்கடேசன், ஆகியோருக்கு "இலக்கியச்சுடர்" விருதும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு தலைமையேற்ற அந்தமான் தமிழர் சங்கத்தலைவர் விருதாளர்களை வாழ்த்திப் பேசும்போது "தமிழ்நாட்டிலிருந்து நந்தவனம் சந்திரசேகரன் தலைமையில் ஆண்டுக்கு இரண்டு மூன்று முறையாவது எழுத்தாளர்களையும் பல இலக்கிய ஆளுமைகளை தமிழர் சங்கத்துக்கு அழைத்து வந்து இப்படி ஒரு இலக்கிய சந்திப்பு நிகழ்த்துவது எங்களுக்கு பெருமையாக இருக்கிறது. இதன்மூலம் அந்தமான் தமிழர்களும் தமிழ் ஆர்வத்து வளர்த்துக் கொள்ளவும் தொடர்ந்து தமிழ்ப்பணிகளை செய்ய வேண்டும் என்ற உந்துதலையும் தருவதோடு நமது தமிழர்களின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் மேம்படுத்திக்கொள்ள உதவியாகவும் இருக்கிறது" என்று குறிப்பிட்டர்.

மேலும் நிகழ்வில் அந்தமான் தமிழர் சங்கத் துணைச் செயலாளர் சோழன் சுதாகரன், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அந்தமான் ரோட்டரி சங்கத் தலைவர் தினேசு, போஜராசன் ஆகியோர் கலந்துகொண்டனர் எழுத்தாளர் தாங்கள் எழுதிய நூல்களா தமிழர் சங்கநூலகத்திற்கு வழங்கினர் நிறைவாக விருதாளர்கள் சார்பில் அறம் கிருஷ்ணன் ஏற்புரையாற்றி அவருக்கும் நன்றி தெரிவித்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சிங்கள அரசின் கபட நோக்கத்துக்கு கூட்டமைப்பின் எம்பிகள் துணைபுரிவதாகவே அமைந்துள்ளது

## காணாமல் ஆக்கப்பட்ட ஈழத்தமிழரின் உறவினர்




சிங்கள இனவழிப்பு ஒற்றையாட்சி அரசுடன் பேச்சை நடத்தியமை மீண்டும் சர்வதேச சமூகத்திற்கு காலத்தைக் கடத்தும் சிங்கள அரசாங்கத்தின் கபட நோக்கத்துக்கு கூட்டமைப்பின் எம்பிகள் துணைபுரிவதாகவே அமைந்துள்ளது என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத்தமிழரின் உறவினர் அமைப்பின் ஊடகபேச்சாளர் தமிழினி மாலவன் தெரிவித்துள்ளார். யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற செய்தியார் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், ஈழத்தமிழர் மீது மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு குற்றங்கள் மனித இனத்துக்கெதிரான குற்றங்களுக்கு காரணமானவர்களோடு பேச்சை நடத்தியமை சிறிலங்கா ஒற்றை ஆட்சி அரசை பலப்படுத்தி, கூட்டமைப்பின் கதிரை அரசியலுக்கு வெள்ளை அடிக்கும் செயலாகவே நாம் பாக்கின்றோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, என்பதுதான் ஈழத்தமிழரின் கோரிக்கையாகும். இவை தொடர்பில் சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சை நடத்துவற்கான ஆணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஈழத்தமிழர் ஒருபோதும் வழங்கவில்லை.

இலங்கை அரசு உள்ளுர் பொறிமுறையின் மூலமாகத் தீர்வு காணப்படும் என தொடர்ந்து தெரிவித்து வரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனுடன் பேச்சுக்களை நடத்தியமை சர்வதேச விசாரணையில் இருந்து இலங்கை அரசை பிணை எடுக்கும் சதி முயற்சியாக நாம் பாக்கின்றோம். சர்வதேச விசாரணையில் இருந்து தப்பித்துக்கொள்ள சிங்கள இனவழிப்பு அரசு ஒவ்வொரு ஐ.நா அமர்வையும் சமாளிக்க கூட்டமைப்பின் கதிரை அரசியலை சந்தர்ப்பமாக பயன்படுத்தி வருகின்றது.

கடந்தகாலத்தில் தைப்பொங்கல், தீபாவளி புதுவருடம் ஒவ்வொன்றின்போதும் நம்பிக்கைகள் எல்லாம் காற்றோடு பறந்த அனுபங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பாடமாகப் படித்திருப்பதாகத் தெரியவில்லை.

இனவழிப்பு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஒரு போதும் கொலையாழிகள் தீர்வைத் தரப்போவதில்லை. மீண்டும் மீண்டும் அதில் நம்பிக்கை வைத்துச் செயற்படுவது சிறீலங்கா அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் கூட்டமைப்பைக் கொண்டு செல்வதற்கே வழிவகுக்கும்.

அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப்பரவலாக்கல் என்பன தொடர்பாக சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்துவது கூட்டமைப்பின் ஆயுள் கால அரசியலாகும் ஆனால், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை மற்றும் இன அழிப்பு என்பவற்றுக்கு இந்த சிறீலங்கா அரசாங்கமே காரணமாக இருந்துள்ளது.

இனவழிப்பில் ஈடுபட்ட குற்றவாழிகளிடம் தீர்வை எதிர்பார்ப்பதோ அதற்கான பேச்சுக்களை நடத்துவதோ இனவழிப்பு கூற்றவாழிகளை நீதிபதிகளாக்கும் செயலாகும். இவ்வாறான சூழ்நிலையில் சிறீலங்கா அரசின் நோக்கங்களுக்கு கூட்டமைப்பு துணைபோவதாக மட்டுமே அமைந்திருக்க முடியும் என்பதை நாம் தொடர்ந்து பகிரங்கப்படுத்தி வந்திருக்கின்றோம்.

இந்த பின்னணியில் இலங்கை இன அழிப்பு அரச தலைவருடன் பேச்சுக்களை நடத்தியதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது ஆயுள் கால அரசியலை தக்கவைக்கும் முயச்சியாக இது இருக்கும் என நம்புகின்றோம்.

ஈழத்தமிழர் முன்வைத்த சர்வதேச விசாரணை கோரிக்கையை நீர்த்துப்போகச் செய்யும் சிறீலங்கா அரசின் உபாயங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் துணைபோய்யுள்ளது என்பதை நாம் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்த நிலையில் நாம் பரந்து பட்ட போராட்ட வெளிகளை உருவாக்க வேண்டும் அதன் ஊடாகவே சர்வதேச விசாரணையை நிலை நாட்ட முடியும் என்றார்.

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினுடைய ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக (05) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மக்களின் உரிமைக்காக ஜனநாயக வழியில் போராடும் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதைக் வன்மையாக கண்டிக்கிறோம், ஜோசப் ஸ்டாலின் உட்பட ஜனநாயகப் போராட்ட செயற்பாட்டாளர்கள் அனைவரையும் உடன் விடுதலை செய், ஸ்ரீலங்கா அரசின் பாசிசவாதத்தை எதிர்த்து நாம் தொடர்ந்தும் போராடுவோம் போன்ற பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட அக்கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நீதிமன்ற உத்தரவை மீறி போராட்டம் நடத்தியதற்காக ஓகஸ்ட் 3ம் திகதி பொலிஸ ாரால் கைது செய்யப்பட்டதுடன், ஓகஸ்ட் 4ம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் ஓகஸ்ட் 12ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்"

## வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் 100 நாள் செயல் முனைவு மன்னாரில் ஆரம்பம்

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நூறு (100) நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் 9வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் செவ்வாய்க்கிழமை (9) காலை 10 மணி அளவில் மன்னார் தோட்டவெளி பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் இடம் பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் நூறு (100) நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் 9வது நாள் போராட்டம் மேற்படி இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மற்றும் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், மாணவர் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களால் 100 நாள் செயற்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டது. குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடுகையில், "நாங்கள் நாட்டை துண்டாட வோ, தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்".

"வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்". "13 வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்க துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது".

இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் சிறுபான்மை தமிழ் மக்களான நாம் ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகளின் இனவாதக் கொள்கைகளால் பல்வேறு வழிகளிலும் அடக்கப்பட்டு வந்துள்ளோம். அது இன்று வரை தொடர்கிறது.

இதுவே தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப் பரவலாக்கம் குறித்து சிந்திக்கத் தூண்டியது. இதன் நியாயத்தன்மையை பிராந்திய நட்பு நாடான இந்தியாவும் சர்வதேச நாடுகளும் என்றோ ஏற்றுக்கொண்டுள்ளன.




அதன் விளைவே இந்தியா, இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் சார்ந்து இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் (1987 இன் இந்திய - இலங்கை உடன்படிக்கை), 1999-2008 வரையான காலப்பகுதியில் நோர்வேயின் மத்தியத்துவம் மற்றும் 2002இல் இலங்கையில் சமாதானம், புனர்வாழ்வு மற்றும் மீளக் கட்டுமானம் சார்ந்து பங்களிப்பு செய்வதற்கு ஜப்பானின் அமைச்சரவை திரு. யசூசி அகாசி அவர்களை நியமித்தமை ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.



1987 இன் பின்னர் இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் எதுவுமே அதிகாரப்பரவலாக்கத்தை நிராகரிக்கவில்லை. விரும்பியோ விரும்பாமலோ அவர்கள் அதிகாரப் பரவலாக்க உரையாடலை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது.

1987இல் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான 13வது திருத்தச்சட்டத்தை அரசியலமைப்பில் இணைத்தார்.

1990இல் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அரசியல் தீர்வுகளுக்கான திட்டங்களை முன்வைத்தார். இவரின் காலத்தில், 1991 இல், திரு. மங்கள முனசிங்க தலைமையில் 45 பேர் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

1994 திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாயிருந்த காலத்தில், 1995இல் திரு. நீலன் திருச்செல்வம் மற்றும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தலைமையில் "ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு" அடங்கலான தீர்வுப் பொதி தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2001இல் ஆட்சிக்கு வந்த திரு. ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக கொண்ட அரசாங்கம் நோர்வே மத்தியத் துவத்துடன் சுயாட்சி (பெடரல்) முறையில் அதிகார பரவலாக்கத்துக்கு இணங்கியது நினைவுகூறத்தக்கது.

2015இல் ஆட்சிக்கு வந்த விக்கிரமசிங்க - சிறிசேன "நல்லாட்சி" அரசு, ஐ.நா. மனித உரிமைப் பேரவையால் ஏற்கப்பட்ட தீர்மானத்தின் இணைப்பங்காளியாக இருந்தது. இத்தீர்மானத்தின் செயற்பாட்டு உறுப்புரை 16 ஆனது, அரசியல் தீர்வை, அதிகாரப் பரவலாக்கத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வலியுறுத்துகிறது.

அவ்வகையில், வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு, அதிகாரப் பரவலாக்கம் என்பது இலங்கையின் அரசியலமைப்பின் அங்கமாயிருப்பதுடன், சர்வதேச சமூகத்தினால், ஐக்கிய நாடுகள் சபையினாலும் வரவேற்கப்படுகின்ற ஒன்றாகும்.

ஆகவே, எமக்கான உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கும், நட்பு நாடான இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் வலியுறுத்தி கொண்டு வடக்கு கிழக்கு வாழ் மக்களான நாம், எமது சாத்வீகமான, ஜனநாயகமான நூறு நாட்கள் செயல்முனைவு ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கிறோம்.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" என குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**- மன்னார் நிருபர்**



கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் ஒரு தமிழ் ஒலிபரப்புச் சாம்ராஜ்யத்தை உருவாக்கி வைத்துள்ளார் நடா இராஜ்குமார்

## அன்பு அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீது புகழாரம்




தமிழோச சினி மீடியா கலை நிகழ்ச்சிகளுக்காகவும் தான் எழுதிய “வானலைகளில் ஒரு வழிப்போக்கன்” என்ற நூலை வெளியீடு செய்யவும் ரொறன்ரோ மாநகர் வந்துள்ள, உலகத் தமிழ் மக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்ற அன்பு அறிவிப்பாளர் பி. எச் அப்துல் ஹமீது அவர்கள் ஆகஸ்ட் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை நடா ராஜ்குமார் அவர்கதளின் EAST FM இன் புதிய கலையகத்துக்கு விஜயம் செய்து கலையகத்தைப் பார்வையிட்டதுடன் தனது ஆசியையும், வாழ்த்துக்களையும் வழங்கினார்.

அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் அவர், தனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய திரு. நடா இராஜ்குமார் ககனடாவில் ஒரு ஒலிபரப்புச் சாம்ராஜ்யத்தை உருவாக்கி வைத்துள்ளார் என்றும், அவரின் இந்த இமாலய வளர்ச்சி கண்டு தான் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்தார். இந்த வியத்தகு வளர்ச்சி தனக்குப் பெருமை தருவதாவும் அவர் அங்கு கூறினார். அவரது இந்த புகழாரம் சூட்டும் வார்த்தைகளை அங்கு கூடியிருந்த அனைத்து வானொலிக் கலைஞர்களும் கரகோசம் செய்து வரவேற்றனர்.

திரபி. எச் அப்துல் ஹமீது அவர்களுடன் ஐரோப்பிய வானலையில் கோலோச்சும் அறிவிப்பாளர் திரு. எஸ். கெ. ராஜன் அவர்களும் கலையகம் சென்றிருந்தார். அவரும் தனது வாழ்த்துக்களை பெரு மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டார்.

உலகத்தமிழ் ஒலிபரப்பாளர் பி. எச் அப்துல் ஹமீது அவர்களின் நூல் வெளியீட்டு விழா வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 12ம் திகதி 8100 Steeles Ave. East, Markham Mead-ow திறந்த வெளி அரங்கில் நடைபெறஉள்ளதுடன் இந்த வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு 3 தினங்களும் கலை நிகழ்ச்சிகள், வர்த்தக சாவடிகள் என இந்த விழா கோலாகலமாக நடைபெற உள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக இலங்கை, இந்திய, ஐரோப்பிய கலைஞர்கள் இங்கு வருகை தந்திருப்பதுடன் கனடிய உள்ளூர் கலைஞர்களும் இணைந்து சிறப்பிக்க உள்ளனர், 3 தினங்களும் அனுமதி இலவசம் என்பது குறிப்பிடத்தக்கது.

# "மாவிலி மைந்தன்" எனும் புனைபெயர் கொண்ட கவிஞர் சண்முகராஜாவின் "மனவெளி மேகங்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா



கனடாவில் “மாவிலி மைந்தன்” எனும் புனைபெயரைத் தாங்கி. கலை இலக்கியம் மற்றும் கவிதை இலக்கணம் ஆகிய துறைகளில் ஆர்வத்துடன் செயற்பட்டுவரும் கவிஞர் சண்முகராஜாவின் “மனவெளி மேகங்கள்” கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த 06-08-2022 அன்று சனிக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெற்றது.

கவிஞர் சண்முகராஜா அவர்களின் புதல்வர் நீதன் சண்முகராஜா அவர்கள் அன்றை விழாவை தொகுத்து வழங்கினார்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து கவிஞர் சண்முகராஜா அவர்களின் அன்புப் பேரர்களான கவின். எல்லாளன் அர்ஜன். கரிகாலன் ஆகியோர் கனடிய தேசிய கீதம் மற்றும் தமிழ்த் தாய் வாழ்த்து ஆகியவற்றை இசைத்தனர்.





தொடர்ந்து இறைவணக்கப் பாடலாக கவிஞர் சண்முகராஜா அவர்கள் யாத்த முருகக் கடவுக்கான பாடலை அவரது பேரர்களில் ஒருவரான சந்தோஷ் பாடினார். இந்த பாடலுக்கு இசையமைத்தவர் சி. சுதர்சன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து “கலைக்கொவில் நாட்டியக் கல்லூரி” மாணவிகள் செல்விகள் அஸ்வினி, அனுசியா, ரித்திகா மற்றும் மாயா ஆகியோர் வழங்கிய தமிழ்த் தாய் வணக்க நடனம் இடம்பெற்றது.

அமரர் பண்டிதர் ம. செ. அலெக்சாண்டர் அவர்களின் நினைவாக அவரது கவிதைத்துறை பங்களிப்பு தொடர்பான காணொளி ஒளிபரப்பாகியது. தொடர்ந்து வாழ்த்தரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து இடம்பெற்ற ஆய்வரங்க அரங்கிற்கு கவிஞர் அகணி சுரேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். அதில் “மனவெளி மேகங்கள்” நூல் தொடர்பான ஆய்வுரை. வெளியீட்டுரை நூல்வெளியீடு வாழ்த்து மடல்கள் வழங்குதல் இடம்பெற்று இறுதியில் கவிஞர் சண்முகராஜா அவர்களின் ஏற்புரை இடம்டபெற்றது. சிறப்புப் பிரதிகளையும் ஏனைய பிரதிகளையும் சபையில் அமர்ந்திருந்த அனைவரும் பெற்றுக்கொண்டு கவிஞர் சண்முகராஜா அவர்களுக்கு தங்கள் ஆதரவை வழங்கினர்.



அன்றைய நிகழ்வானது இனிதானதும் கனதியானதுமானதுமான ஒரு இலக்கிய விழாவாக அமைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

**- சத்தியன்**








**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Achos, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# "14 மாதங்களில் ரூ.20 ஆயிரம் கோடி சுருட்டியிருக்கிறார்கள்!" திமுக மீது எடப்பாடி பழனிசாமி புகார்

இந்தியா செய்திகள் India News

## தமிழ்நாட்டு அரசு கஜானாவிலிருந்து எப்படி? எவ்வளவு? சுருட்ட முடியும் என்பதை "சாமி" தானே அறியும்



அ.தி.மு.க இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொண்டு தொண்டர்களைச் சந்தித்து வருகிறார். இன்று காலை தருமபுரியில் சுற்றுப்பயணத்தை தொடங்கிய அவர் கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களின் வழியாக வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம் வரை பயணிக்கிறார். வழிநெடுக அவருக்குத் தொண்டர்கள் பிரமாண்ட வரவேற்பு கொடுக்கின்றனர்.

கிருஷ்ணகிரியில் பேசிய அவர், "இருபெரும் தலைவர்களால் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம், இன்றைக்கு சோதனையை சந்தித்துக்கொண்டிருக்கிறது. தேர்தல் நேரத்தில் சில விஷமிகள் சில துரோகிகள் நம்மோடு இருந்துகொண்டே வெற்றியைத் தடுத்து நிறுத்தினார்கள். அந்தக் கறுப்பு ஆடு எதுவென்று அடையாளம் கண்டுபிடித்துவிட்டோம். அவர் முறையாக தேர்தல் பணியாற்றியிருந்தால் அ.தி.மு.க ஆட்சியில் இருந்திருக்கும். ஆனால், வேண்டுமென்றே எதிரியோடு துரோகியும் சேர்ந்து தேர்தல் நேரத்தில் சதிவேலை செய்ததால், நமக்குக் கிடைக்க வேண்டிய வெற்றிவாய்ப்பு எதிரிக்குக் கிடைத்துவிட்டது. இது யாரால் வந்தது! இன்றைக்கு விழித்து கொண்டுவிட்டோம். எதிர்காலத்தில் எந்த தேர்தல் வந்தாலும் அ.தி.மு.க-தான் வெற்றி பெறும். தி.மு.க ஆட்சிப் பொறுப்பேற்று 14 மாதங்கள் ஆகின்றன. எந்த நன்மையும் செய்யவில்லை. கிட்டத்தட்ட எல்லா துறைகளிலும் ஊழல் செய்து 20 ஆயிரம் கோடி ரூபாய் சுருட்டியதுதான் மிச்சம். வீட்டு மக்களைத்தான் பார்க்கிறார்கள். இலங்கையில் குடும்பத்தில் இருக்கிறவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தார்கள். அவ்வளவு அதிகாரம் படைத்த அதிபரே... "தப்பித்தோம் பிழைத்தோம்" என்று ஓடிவிட்டார்.

அவருக்கே அந்த நிலைமை. ஒரு முதலமைச்சராக இருக்கும் ஸ்டாலின் அவர்களே, எண்ணிப் பார்த்து செயல்படுங்கள். இலங்கையைப்போல தமிழகத்தில் வந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கிறோம். குறுக்கு வழியில் அ.தி.மு.க-வை அழித்துவிடலாம் என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். கானல் நீராகத்தான் உங்களுக்கு விடை கிடைக்கும். இது, இறைவனால் படைக்கப்பட்ட கட்சி. நம்முடன் இருந்த ஒரு துரோகி யாரென்று உங்களுக்குத் தெரியும். கோயிலாகப் போற்றிய எம்.ஜி.ஆர் மாளிகையை தி.மு.க-வினருடன் கைகோத்து கொண்டு துரோகிகள் பிரதான கதவை உடைத்து அம்மா இருக்கின்ற அறையின் கதவையும் காலால் உதைத்து பொருள்களை திருடிச்சென்றார்கள். நிர்வாகிகள் எப்போது சேர்ந்தார்கள் இருந்தார்கள்? என்ற பட்டியலையும் எடுத்துச் சென்று எரித்தவரா, இந்தக் கட்சிக்கு நன்மை செய்வார்? கொஞ்சம்கூட நெஞ்சில் ஈரம் இரக்கமில்லாமல், அரக்கத்தனமாக செய்பவர்கள் தலைவராக இருக்க முடியுமா!?" என்பதோடு பேச்சை நிறைவு செய்தார். தொடர்ந்து, வேலூர் புறநகர் மாவட்ட அ.தி.மு.க சார்பில் பள்ளிகொண்டா சுங்கச்சாவடியில் கொடுக்கப்பட்ட வரவேற்பையும் ஏற்றுகொண்டு பேசிய எடப்பாடி பழனிசாமி, "ஸ்டாலின் அவர்களே உங்களைப்போல பதவி வெறிப்பிடித்து அலைகின்றவர்கள் நாங்கள் அல்ல. கொடுக்கின்ற பதவியை ஏற்றுகொண்டு விஸ்வாசமாக உழைப்போம். கருணாநிதி முதலமைச்சராக இருக்க வேண்டும் அவரே தி.மு.க-வுக்கும் தலைவராக இருக்க வேண்டும். அவரைத் தொடர்ந்து, அவர் மகன் ஸ்டாலின் முதலமைச்சராக இருக்க வேண்டும். அவரே இயக்கத்தின் தலைவராகவும் இருப்பார். ஸ்டாலினைத் தொடர்ந்து, அவரின் வாரிசு. மன கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறார் ஸ்டாலின். தி.மு.க என்ற தீயசக்தி வேரோடு மண்ணிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் எம்.ஜி.ஆர் அ.தி.மு.க-வை தொடங்கிவைத்தார். அவர் நினைத்ததை நாம் செய்து முடிப்போம். ஆன்லைன் ரம்மி சூதாட்டத்துக்கு கருத்து கேட்கின்ற ஒரே முதலமைச்சர் ஸ்டாலின்தான். பல குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்துவிட்டன. ஆனால், ஸ்டாலின் ஒருவர் மட்டும்தான் பணத்துக்காக சப்பைக்கட்டு கட்டுகிறார்" என்றார். தொடர்ந்து, வேலூர் மாநகர் மாவட்ட அ.தி.மு.க சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில், மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.கே.அப்பு தலைமையில் பிரமாண்ட வரவேற்பு கொடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு பேசிய எடப்பாடி பழனிசாமி, "தி.மு.க தலைவர் ஸ்டாலின் அ.தி.மு.க-வை எப்பாடு பட்டாவது முடக்கிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிகொண்டிருக்கிறார். அவரின் தந்தை பலமுறை முயன்றார். அவராலயே முடியவில்லை. உங்களால் உடைக்க முடியுமா என்ன? துரோகிகளோடு சேர்ந்து அ.தி.மு.க-வை உடைத்துவிடலாம் என்று எண்ணாதீர்கள். அப்படி நினைத்தால், எதிர்காலத்தில் தி.மு.க எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைக்கூட பெற முடியாது. ஏதோ ஆளுங்கட்சியாக வந்துவிட்டீர்கள். அதிகாரம் கிடைத்துவிடும் என்ற மமதையில் இருந்துவிடாதீர்கள். தி.மு.க எப்போதுமே நல்லது செய்ததாக வரலாறே கிடையாது. ஆட்சிக்கு வரும் முன்பு ஒரு பேச்சு. ஆட்சிக்கு வந்தப் பின்பு அப்படியே பல்டி அடித்துவிடுவார்கள். அரசியல் ரீதியாக சந்திக்க முடியாத திராணியற்ற கட்சி தி.மு.க. இது, விஞ்ஞான உலகம். எவரையும் அடக்கி ஆள முடியாது. மக்கள் வெகுண்டெழுந்தால் யாராலையும் கட்டுப்படுத்த முடியாது. கிடைக்கின்ற நாளைப் பயன்படுத்தி நன்மை செய்யப் பாருங்கள். அனைத்துத் துறைகளிலும் ஊழல். 20 ஆயிரம் கோடி கொள்ளையடித்திருக்கிறார்கள். ஊழலுக்காக களைக்கப்பட்ட ஒரே அரசாங்கம் தி.மு.க-தான். அதே நிலைமை வந்தாலும் வந்துவிடும். மக்கள் விரோத ஆட்சிக்கு முடிவு கட்டி அம்மாவின் ஆட்சியை மீண்டும் கொண்டுவர உழைப்போம்" என்றார்.

# கோவையில் லாரி, லாரியாக குப்பையில் கொட்டப்பட்ட தக்காளி

தக்காளி விலை அதளபாதாளத்துக்கு சென்றதால், செய்வதறியாது திகைத்த வியாபாரிகள் விற்க மனமின்றி, குப்பையில் வீசி எறிந்தனர். கோவை எம்.ஜி.ஆர். காய்கறி சந்தைக்கு கர்நாடக மாநிலத்தின் கொள்ளேகால், மைசூர் பகுதிகளிலிருந்தும், தமிழகத்தின் ஓசூர் காவேரிப்பட்டினத்திலிருந்தும் தினமும், ஐந்து முதல் பத்து லோடு தக்காளி, விற்பனைக்கு வரும். இது தவிர, கோவை புறநகரான சென்னனூர், மாதம்பட்டி, ஆலாந்துறை, தொண்டாமுத்தூர், பாலத்துறை, கிணத்துக்கடவு பகுதிகளிலிருந்தும், தக்காளி விற்பனைக்கு வரும். கடந்த சில தினங்களாக, மார்க்கெட்டிற்கு வழக்கத்திற்கும் அதிகமாக தக்காளி வரத்து இருந்தது. தொடர் மழை காரணமாக, தக்காளியை இருப்பு வைத்து வியாபாரிகளால் விற்பனை செய்ய முடியவில்லை. விலையும் யாருமே எதிர்பார்க்காத அளவுக்கு சரிவைத்தொட்டது. 25 கிலோ எடை கொண்ட ஒரு டிப்பர், 125 ரூபாய்க்கு விலை போனது. அப்போது மொத்த விலை கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய்.

சில்லறையில், 7 முதல் 10 ரூபாய் வரைதான் விற்பனையானது. விலை சரிவை தொட்டதால், இருப்பு வைத்து விற்பனை செய்ய முடியாத வியாபாரிகள், வேறு வழியின்றி சந்தையில் காய்கறி கழிவுகளை கொட்டும் பகுதியில், குப்பையோடு குப்பையாக தக்காளியையும், லாரி லாரியாக கொண்டு வந்து கவிழ்த்தனர். மார்க்கெட்டுக்கு வந்திருந்த விவசாயிகள், இதைக் கண்டு மனம் வருந்தினர். கொட்டுவதை தவிர வேறு என்ன செய்வது? ஒவ்வொரு ஆண்டும், மூன்று முறை தக்காளி விலை சரிவை தொடும். ஆடி மாதம் மழை தொடர்ந்து பெய்து வரும் சூழலில், தக்காளியை இருப்பு வைப்பது சிரமம். எளிதில் அழுகிவிடும். அதனால் விரைவாக விற்று விடுவோம் மீதமானதை கொட்டி விடுவோம். என்று வியாபாரிகள் கூறினார்கள்.



# தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த தமிழக வீரரின் குடும்பத்திற்கு ரூ.20 லட்சம் நிதியுதவி: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



"ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த தமிழக வீரரின் குடும்பத்திற்கு ரூ.20 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் வீர மரணமடைந்த ராணுவ வீரர் லட்சுமணன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்தியுள்ளார். இதுகுறித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில் : வியாழன் 11ம் திகதி அதிகாலை காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் உட்பட மூன்று இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த துயரமும், வேதனையும் அடைந்தேன். தாய்நாட்டைக் காக்கும் அரிய பணியில் தன் இன்னுயிரைத் தியாகம் செய்து, வீரமரணமெய்திய இராணுவ வீரர்களுக்கு என் அஞ்சலியையும், வீரவணக்கத்தையும் சமர்ப்பிக்கின்றேன். வீரமரணமெய்திய தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர் திரு. இலட்சுமணன் அவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களுக்கு ரூபாய் இருபது லட்சம் நிதியுதவி வழங்கவும் ஏற்பாடுகள் செய்துள்ளேன்". இவ்வாறு அவ்வறிக்கையில் கூறியுள்ளார்.


**கனடா காரை கலாச்சார மன்றம் நடத்தும் கோடைகால ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டியும்**

**காலம்:** ஆகஸ்ட் (August) 20, 2022
சனிக்கிழமை அன்று
காலை 8:00 மணி முதல்
**இடம்:** Morningside Park Area 8,9
(Morningside Ave & Ellesemere Rd)

**தொடர்புகளுக்கு:** karainagar@gmail.com
**மேலதிக விபரங்களுக்கு:** www.karainagar.com

**வயாவிளான் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்**

**காலம்:** August 20,2022 10:30 AM
**இடம்:** Milliken District Park - Lot number B
5555 Steeles Ave E, Toronto, ON M9L 1S7

**அனைத்து பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் ஒன்றுகூடலில் கலந்து சிறப்புக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.**

Thileepan: (647) 895-7027
Mahesh: (647) 707-7167
Nathan: (416) 902-8920

# சீன உளவுத்துறைக்கப்பல் இலங்கையில் நிலைகொள்ளவிருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல்! - சீமான் எச்சரிக்கை 'நாம் தமிழர் கட்சி

சீன நாட்டின் உளவுத்துறைக்கப்பல் இலங்கையில் அந்நாட்டு அரசின் அனுமதியுடன் நிலைகொள்ளவிருக்கும் நிலையிலும் இந்தியாவை ஆளும் பாஜக அரசு தனது வலிமையான எதிர்ப்பினைப் பதிவுசெய்யாது வாய்மூடிக்கிடப்பது அதிர்ச்சியளிக்கிறது. இலங்கை நாடும், சிங்கள ஆட்சியாளர்களும் ஒருநாளும் இந்தியாவுக்கு உண்மையாக இருக்க மாட்டார்கள் அவர்கள் இந்தியாவுக்கெதிரான சீனாவின் பக்கம்தான் முழுமையாக நிற்பார்களெனப் பல ஆண்டுகளாக உரைத்து வந்து உண்மைக்கான நிகழ்காலச் சாட்சியாகவே இச்சம்பவம் அரங்கேறியிருக்கிறது.

"யுவான் வாங் - 5" எனும் சீன நாட்டின் உளவுத்துறை கப்பல் இந்தியப்பெருங்கடல் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது, தங்கள் நாட்டுக்கு அக்கப்பல் வரப்போவதில்லை என மறுத்தறிவித்த இலங்கை அரசின் ஆட்சியாளர்கள், தற்போது அம்பந்தோட்டை துறைமுகத்தில் அக்கப்பல் நிலைகொள்வதற்கு அனுமதி வழங்கியிருப்பது இந்திய நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாகும். ஒருபுறம், இந்தியாவோடு உறவைப்பேணி, பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொண்டு, மறுபுறம், சீனாவின் ஊடுருவலுக்கும், ஆக்கிரமிப்புக்கும் வழிகோலும் இலங்கை அரசின் செயல்பாடு இந்திய நாட்டுக்குச்செய்யும் பச்சைத்துரோகமாகும். ஆகஸ்ட் 11 முதல் 17 வரை அம்பந்தோட்டை துறைமுகத்தில் சீனக்கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டு, செயற்கைக்கோள் குறித்தான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுமென இலங்கை அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவை இந்திய நாட்டின் பிராந்திய நலன்களுக்கு ஒருபோதும் ஏற்புடையதல்ல என்பதை இந்திய நாட்டின் ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

"யுவான் வாங் - 5" எனும் அக்கப்பல் 750 கிலோமீட்டர் வரையிலுள்ள பகுதிகளைக் கண்காணிக்கும் எனக்கூறப்படும் நிலையில், இலங்கையிலிருந்துகொண்டே தமிழகம், கேரளா, ஆந்திரா போன்ற பெருநிலங்களின் முக்கிய இடங்களையும், தென்னிந்தியாவிலுள்ள ஆறு துறைமுகங்களையும் உளவுபார்க்க முடியுமென்பது சாதாரணமாகக் கடந்துபோகக்கூடிய விவகாரமல்ல! இந்தியாவின் வடகிழக்கில் அருணாச்சலப்பிரதேசத்தை, "தெற்கு திபெத்" எனக்கூறி சொந்தம் கொண்டாடி, எல்லையில் அத்துமீறி நுழைந்து, ஆக்கிரமித்து வரும் சீனா, தற்போது தெற்கே இலங்கையில் அந்நாட்டு அரசின் ஒத்துழைப்போடு உளவுத்துறை கப்பல் மூலம் இந்தியாவின் தெற்குப்பகுதிகளைக் கண்காணிப்பது நாட்டின் இறையாண்மைக்கு விடப்பட்டுள்ள பெரும் சவாலாகும். ஏற்கனவே, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன அரசின் நிறுவனத்துக்கு 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குவிட்டு, அதனையொட்டி 269 ஹெக்டர் பரப்பளவில் சிறப்புப்பொருளாதார மண்டலத்தை அமைப்பதற்கு பாராளுமன்றத்தில் தனிச்சட்டமியற்றி சீனாவின் ஆதிக்கத்திற்கு அடிகோலியதன் நீட்சியாகவே, சீனாவின் உளவுத்துறை கப்பலுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது இலங்கை அரசு என்பது வெளிப்படையானதாகும். இந்தியா, இலங்கையோடு எவ்வளவுதான் நெருக்கமாக நட்புறவுபேணினாலும், பொருளாதார உதவிகளை வாரிவழங்கி, நிதியை அள்ளி அள்ளிக்கொடுத்தாலும் இலங்கையின் சீன ஆதரவு நிலைப்பாடு ஒருநாளும் மாறப்போவதில்லை என்பது மீண்டுமொரு முறை உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. உலகெங்கும் வாழும் 13 கோடி தமிழர்களின் பெருந்தாயகமாக விளங்கும் தமிழ்நாட்டை தன்னகத்தே கொண்டுள்ள இந்தியப்பெருநாட்டுக்கு தமிழர்கள் செய்தப் பெரும்பணிகளும், அளித்தப் பெருங்கொடைகளும் சொற்களில் நிறைவுசெய்ய முடியாத வரலாற்றுச்சுவடுகளாகும். அன்றைய நாட்டு விடுதலைப்போராட்டம் தொடங்கி இன்றைய நாட்டின் வரிப்பொருளாதாரம் வரை எல்லாவற்றிலும் இந்தியாவுக்கு தமிழ்நாடும், தமிழர்களும்தான் நிறைந்தப் பங்களிப்பைத் தந்து முதுகெலும்பாகத் திகழ்ந்து வருகிறார்கள் என்பது உலகறிந்த உண்மையாகும். அத்தகைய வரலாற்றுப்பாத்திரங்களையும், பங்களிப்புகளையும் அலட்சியப்படுத்திவிட்டு, தமிழர்களின் உணர்வுகளைத் துளியும் மதித்திடாது பகையினமான சிங்களர்களோடு உறவுகொண்டாடி, ஈழ இனப்படுகொலையை நடத்தி முடித்து, தமிழக மீனவர்களின் படுகொலைகளை மூடி மறைத்த துரோகத்தின் விளைச்சலை இன்றைக்கு முழுவதுமாக அறுவடை செய்துகொண்டிருக்கிறது இந்திய நாடு. இந்திய - சீனப்போரின்போது சீனாவின் பக்கமும், இந்திய - பாகிஸ்தான் போரின்போது பாகிஸ்தானின் பக்கம் இலங்கை நின்றது என்பது வரலாற்றுப்படிப்பினை. இருந்தபோதிலும், தொலைநோக்குப் பார்வையின்றி இந்திய நாட்டின் நலன்களையும், பூகோள அரசியலையும் கணக்கிடாது கண்மூடித்தனமாக இலங்கையை ஆதரித்து வரும் இந்திய நாட்டின் ஆட்சியாளர்களின் செயல்பாடுகள் வெட்கக்கேடானது. அதுதான், இன்றைக்கு இந்தியாவுக்கு இலங்கையால் பெருங்கேடு உருவாகும் நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்பது திண்ணம்.



ஆகவே, கடந்தகாலத் தவறுகளிலிருந்து இனியாவது பாடம் கற்றுக் கொண்டு, சீனாவின் காலனி நாடாக மாறி நிற்கும் இலங்கையுடான உறவுகளை முழுமையாகத் துண்டித்து அறிவிக்க வேண்டுமெனவும், சீனாவின் உளவுக்கப்பல் இலங்கையில் நிலைகொள்ளவிருப்பதற்கு எதிராக முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் துரிதப்படுத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.





# ரணில் தலைமையில் ராஜபக்ஷக்கள் வென்றுவிட்டனர்?

- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்

- ராஜபக்ஷக்களின் வெற்றி நிரந்தர வெற்றியா? ஆல்லது தென்னிலங்கை மக்களின் தோல்வி நிரந்தர தோல்வியா - காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் மக்களுடன் இணைந்து இலங்கை அரசியலில் புதிய ஒழுங்கு முறை குறித்து சிந்தித்து செயற்பட்டனர். இந்த ஒழுங்கு முறை கடந்த 74 வருடங்களாக இலங்கையில் நிலவி வருகின்ற அரசியல் ஒழுங்கு முறையை கேள்விக்குற்படுத்துவதாக அமைந்தது. தென்னிலங்கை இளைஞர் யுவதிகளுடன் இணைந்து மக்களும் கோரி நிற்கின்ற "அரசியல் மாற்றம்" குறிப்பாக இன்றைய ஆளுந்தரப்புக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. ஏன் அவர்களது அரசியல் இருப்பையே கேள்விக் குறியாக்கும் மாற்றமாகும். எனவே இந்த மாற்றத்தை நோக்கிய பயணத்தில் இலங்கை பயணிப்பதை இன்றைய ஆளுந்தரப்பு குறிப்பாக ராஜபக்ஷ குடும்பமும் அவர்கள் சார்ந்தவர்களும் அனுமதிக்க போவதில்லை.. அதுவே இன்று தென்னிலங்கை அரசியலில் நடைபெறுகின்றது.

மொத்தத்தில் ராஜபக்ஷக்கள் வென்றுவிட்டனர். தென்னிலங்கை இளைஞர் யுவதிகளும் மக்களும் தோற்றுப் போய்விட்டனர். ராஜபக்ஷக்களின் வெற்றி நிரந்தர வெற்றியா? ஆல்லது தென்னிலங்கை மக்களின் தோல்வி நிரந்தர தோல்வியா என்பதை காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

தென்னிலங்கை இளைஞர் யுவதிகளும் மக்களும் "மக்களின் அமைதி வழி புரட்சி" மூலம் தாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை அடைந்துவிடலாம் என்று கணக்குப் போட்டனர். அவர்கள் எதிர்பார்த்தது போன்று வெற்றியை நோக்கி நகர்ந்தனர்.

மறுபுறம் மக்கள் தமக்குள் வரித்துக் கொண்ட தமது "எதிரி" அந்த எதிரி நாடாளுமன்றில் கொண்டுள்ள பெரும்பான்மை பலம் அவர்களுக்கு வளைந்து கொடுக்கும் வகையில் இருந்த அரசியலமைப்பு முறை குறித்து சிந்திக்கத் தவறிவிட்டனர். குறிப்பாக "மாற்றத்தை" விரும்பி நின்ற சக்திகளுடன் கைகோர்த்து நின்ற சட்டத்தரணிகளும் இந்த ஆபத்து குறித்து எச்சரிக்கை செய்திருக்க வேண்டும். மாற்றுத் திட்டம்பற்றி சிந்தித்திருக்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக இது நடைபெறவில்லை. மக்கள் எழுச்சிக்குள் அடுத்தடுத்து "மாற்றங்கள்" தானாக நிகழ்ந்துவிடும் என்றே இந்த சக்திகள் அணைத்தும் நினைத்திருந்தன. இதன் விளைவு ராஜபக்ஷக்கள் ரணில்விக்ரமசிங்க தலைமையில் மீள எழுச்சி பெற்றுவிட்னர்.

தென்னிலங்கை மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தாம் வழங்கிய ஆணையை தாமே மீளப் பெறும்வகையில் "மைனா கோ கம" மூலம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை கீழிறக்கிய மக்கள் "கா கா கபுடா" மூலம் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பினர். "கோதா கோ கம" மூலம் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவை நாட்டைவிட்டே வெளியேற்றினர். ராஜபக்ஷ குடும்பத்தை நாடாளுமன்ற பதவிகளுடன் மட்டுப்படுத்தினர்.

இந்த மாற்றங்கள் 74 வருடகால இலங்கை அரசியலில் மாற்றத்துக்கு வித்திட்டுவிடும் என தப்புக்கணக்குப் போட்டுவிட்டனர். உண்மையில் மக்கள் ஆணையால் பிரதமர் ஜனாதிபதி என்ற பதவிகளுக்கப்பால் நாடாளுமன்றில் ராஜபக்'க்கள் மக்கள் ஆணைமூலம் கட்டி எழுப்பியிருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை மறந்துவிட்டனர். இந்தப் பலத்துடன் அரசியலமைப்பு ஏற்பாடுகள் வழங்கியிருந்த சட்ட ஏற்பாடுகளையும் கணக்கில் எடுக்காது இருந்துவிட்டனர்.

இதன் விளைவு ராஜபக்ஷக்களும் அவர்களுடன் இணைந்த ஆளுந்தரப்பினரும் நாடாளுமன்ற பெரும்பான்மை பலத்துடன் அரசியல் அமைப்பு ஏற்பாடுகளுக்கமைய தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டதுடன் திக்கற்று நின்ற ரணில்விக்ரமசிங்கவை தமது "பாதுகாவலனாக" "முன்னரங்கு போராளியாக" ஆக்கிக் கொண்டனர்.

தமது எஜமானர்களின் மீதான விசுவாசத்தை கருத்தில் எடுத்து ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க போராட்டக்காரர்களை FASCIEST என முத்திரை குத்தியது மாத்திரமன்றி அவர்களை "பயங்கரவாதி"களாகவும் ஆக்கி ஹிட்லர் பாணியில் அடக்கவும் தொடங்கினார்.

இதன் விளைவு அவசரகால சட்டத்தின் கீழ் "மாற்றத்தை எதிர்பார்த்தவர்கள்" வேட்டையாடப்படுகின்றனர்.

தொடர் கைதுகள் தடுத்து வைப்புகள் நடுநிசியில் தேடுதல் நீதிமன்ற வழக்குகள் என "மாற்றத்தை விரும்பியவர்களும்" அவர்களுக்கு பக்க பலமாக நின்றவர்களும் அவசரகால சட்டத்திற்கு தீனியாகின்றனர்.

- மொத்தத்தில் மாற்றத்தைக் காணவிழைந்த தென்னிலங்கை மக்களும் இளைஞர் யுவதிகளும் பெரும்பாலானவர்களின் இருப்பு வாழ்வு என்பன கேள்விக்குறியாகிவிட்டது.

இதனைத் தொடர்ந்து நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் கொலைகள் கடத்தப்படுதல் காணாமல்போதல் என்பன சகட்டுமேனிக்கு நடைபெறுகின்றன. இதற்கான சூத்திரதாரிகள் யார் என்பது மர்மமாக இருக்கின்றது. பொரும்பாலான கொலைகள் போதைப் பொருள் கடத்தலுடன் முடுச்சுப் போடப்படுகின்றன.

இதற்கும் அப்பால்
- சூடுபட்டு இறப்பவர்கள் யார் ?
- சடலங்களாக கரையொதுங்கும் மனிதர்கள் யார்.:.
- வெள்ளை வானில் கடத்தப்படுவோர் எங்குள்ளனர்.?

ஏன தொடர் நிகழ்வுகள் ஏன் நிகழ்கின்றன எவரால் நடத்தப்படுகின்றன என்பதெல்லாம் மர்மமாக உள்ளன.

தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் மற்றும் மக்கள் இணைந்து தென்னிலங்கை அரசியலில் ஊழல் மற்றும் மோசடி அரசியல்வாதிகள் மத்தியில் விதைத்த "பய பீதி" ரணில்விக்ரமசிங்கவின் பிரவேசத்துடன் "மேகக்கூட்டம் விலகுவது" போன்று மெல்ல விலகத் தொடங்கிவிட்டது. தம்மீதான ஊழல் மோசடிகள் மீள எழாது என்ற நம்பிக்கையை ராஜபக்ஷக்களுக்கும் அவர்கள் சார்ந்த அரசியல் நண்பர்களுக்கும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் ஆட்சி வேரூன்றச் செய்துவிட்டது.

இன்று இலங்கை அரசியலில் குறிப்பாக நாடாளுமன்றில் பேசு பொருளாக இருப்பது

1. நாட்டின் இன்றைய வங்குரோத்து நிலைக்கு யார் காரணம் என்பதல்ல.
2. நாட்டை சூறையாடியவர்கள் பதுக்கி வைத்துள்ள பணம் பற்றியதல்ல
3. இவ்வாறான விடயங்கள் நடைபெற்றதைக் கண்டறிவதும் இனிமேல் நடைபெறாமலும் இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தல்ல.
4. தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் முன்வைத்த மாற்றங்கள் குறித்தல்ல மாறாக.
5. தென்னிலங்கையில் எரிக்கப்பட்ட அரசியல்வாதிகளின் வீடுகள்குறித்தும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட வீடு எரிக்கப்பட்டதில் 205 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதா ன மதிப்பீடு அதாவது வீட்டிற்கு தீ வைத்ததன் மூலம் 14 மில்லியன் ரூபாவும், ஜனாதிபதியின் வாகனத்தை எரித்ததன் மூலம் 191 மில்லியன் ரூபாவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதானதாகவும் உள்ளது.

நாட்டுக்கும் மக்களுக்கம் ஏற்பட்ட இழப்புகள் குறித்து மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்க அரசியல்வாதிகள் தமக்கான நட்டங்கள் குறித்து கணக்குவாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

- 30 வருடப் போரில் தமிழர்களை எதிரிகளாக்கி நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கி ஊழலில் மிதந்து நாட்டின் பொருளாதாரத்தை சூறையாடிக் கொண்டிருந்தபோது தென்னிலங்கை அரசியல்வாதிகள் தேசப்பற்றாளர்களாக வீடுதலை வீரர்களாக சிங்கள இனத்தின் இரட்சகர்களாக போற்றப்பட்டனர்.

- தேசப்பற்றாளர் விடுதலை வீரர்கள் இரட்சகர்கள் என்பன நாட்டைத் தொடர்ந்தும் கொள்ளையடிக்க மக்கள் வழங்கிய ஆணையாகக் கொண்டு செயற்பட்டபோது மக்களின் வாழ்க்கையில் விழுந்த அடி அவர்களை சிந்திக்க வைத்தது: கிளர்ந்தெழ வைத்தது.

எனவேதான் மக்கள் அரசியல்வாதிகளின் ஊழல்கள் கொள்ளைகள் குறித்து கேள்வி எழுப்ப ராஜபக்ஷக்களும் அவர்களுடன் உள்ளவர்களும் இன்றும் போர் வெற்றி குறித்து பேசி மக்களை திசைதிருப்பிவிடலாம் என தப்புக் கணக்குப் போடுகின்றனர்.

இன்றைய தோல்வி தென்னிலங்கை மக்களுக்கும் இளைஞர் யுவதிகளுக்கும் ஒரு விடயத்தை உணர்த்தி நிற்கின்றது.

அதாவது தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கிய ஒரு பொது வேலைத் திட்டத்துடனான மாற்றத்தை நோக்கிய பயணத்தில் தமிழ் பேசும் மக்களையும் இணைத்ததான போராட்டமே வெற்றி பெறும்.

அரசியல் கட்சிகள் மக்கள் எழுச்சியில் ஏற்படும் மாற்றத்தில் தமக்கான அரசியல் அறுவடைக்காக காத்திருக்கும் சக்திகள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

ஆகஸ்ட் 9 மக்கள் எழுச்சியை அரசியல் கட்சிகள் கூட்டுத் தலைமையேற்று நடத்தியிருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான கட்சிகள் "மாற்றத்தை விரும்பாத சக்திகளின்" அதாவது ரணில்விக்ரமசிங்க தலைமையிலான ராஜபக்ஷக்களின் அரசாங்கத்துடன் இணைந்து அவர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்குள் பேரம் பேசுதலிலும் பங்குபற்றுதலிலும் மூழ்கிக் கிடக்கின்றன. ஏன் அமைச்சுப் பதவிகளுக்காகவும் பேரங்களும் போட்டிகளும் நடைபெறுகின்றன.

மொத்தத்தில் தென்னிலங்கை அரசியலில் "பெரும் பிரளயத்திற்கு" வித்திட்ட "கோதா கோ கம" தொடர்ந்து "ரணில் கோ கம" காலிமுகத் திடல் ஜனாதிபதி செயலக முற்றம் என்பன 124 நாட்களுக்குப் பின் மக்கள் இன்றி வெளியாகக் கிடக்கின்றது. 124 நாட்கள் இங்கு இடம்பெற்ற கோசங்களும் கோரிக்கைகளும் வெற்றிகளும் தோல்விகளும் மக்களுடனும் இளைஞர் யுவதிகளுடனும் இரண்டரக் கலந்து நாடு தழவியரீதியில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இன்னொரு விடியலுக்காய்.

Email : vathevaraj@gmail.com


## ஆராலி கலாச்சார ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் - 2022

ஆராலி கலாச்சார ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், பொதுக்கூட்டமும் எதிர்வரும் August 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 12:00 மணிக்கு வழமைபோல் Sunnybrook Park இன் உட்புறம் Serina Gundy Park, Area 3 இல் (Leslie and Eglinton) இல் நடைபெற உள்ளதால் சகல அங்கத்தினரையும், அராலி ஊர் மக்களையும், நலன் விரும்பிகள். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
செல்வரட்ணம்: (647) 828-4614 இரவிநேசன்: (647) 464-9508
உருத்திரன்: (647) 294-6863 தனராஜா (ஐயா):(416) 726-8569

## கோடை கால ஒன்றுகூடல்

மானிப்பாய் இந்துக் கல்லூரி-மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் கனடா
அன்புடன் உங்களை அழைக்கின்றது

சனிக்கிழமை, ஆவணி மாதம் 20ம் திகதி, 2022
காலை 10 மணிக்கு
L'Amoreaux- Sports Complex Picnic Area
3159 Birchmount Rd, Scarborough, ON M1V 1S4
உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்!



25th YEARS ANNIVERSARY
Cell tel Mobility
Cell Tel Mobility
For All Your Cellphone And Accessory Needs.....
Shop Online: www.celltelmobility.com
We Sell New & Used Cellphones and Accessories For:
Rogers Wireless, Fido,Telus Mobility, Bell Mobility, Mobilicity, Public Mobile, Freedom Mobile, Koodo Mobile And Chatr Wireless
25 th Anniversary Special
Samsung S22, S22+ and S22 Ultra Cases
From $0.99
Offer is valid from 1st through August 31th, 2022. One Coupon per family. Customers must bring coupon to get the offer. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility reserves the right to terminate the offer at any time without notice.
25 th Anniversary Special
Car Lighter + 2USB
From $0.49
Offer is valid from 1st through August 31th, 2022. One Coupon per family. Customers must bring coupon to get the offer. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility reserves the right to terminate the offer at any time without notice.
25 th Anniversary Special
iPhone 13, mini, Pro and Pro Max cases.
From $0.99
Offer is valid from 1st through August 31th, 2022. One Coupon per family. Customers must bring coupon to get the offer. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility reserves the right to terminate the offer at any time without notice.
25 TH ANNIVERSARY SPECIAL
Car & Home Charger
Leather & Clear Case
Headsets
Memory Card
Bluetooth Headsets
Bluetooth Mirror
Data Cable
Batteries
WE ARE YOUR ONE-STOP SOLUTION!
Call Toll Free: 1-866-439-9396
416-891-1234
SINCE 1997
45 Karachi Dr, Unite 49
Markham Rd/ 14th Ave
905-201-4859
5C-2950 Birchmount Rd
Birchmount Rd/ Finch Ave
416-495-7776
2611 Eglinton Ave East,
Eglinton Ave/ Midland Rd
416-266-6818



# சீனக் கப்பலும் இந்தியாவும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**சீ**னக் கப்பல் விவகாரம் ஆனது இலங்கை தொடர்பான இந்தியாவின் ஆகப் பிந்திய ராஜதந்திரத் தோல்வியாக மாறுகிறதா இல்லையா என்பது ரணில் விக்ரமசிங்க எடுக்கப்போகும் முடிவில்தான் தங்கியிருக்கிறது. இக்கட்டுரை எழுதப்படுகையில் அக்கப்பலானது தன் பயணப் பாதையில் இருந்து விலகவில்லை என்றும், இலங்கைத் தீவில் இருந்து 600 கடல்மைல் தொலைவில் அது தொடர்ந்தும் மெதுமெதுவாக பயணித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கப்பலின் வருகை ஏற்கனவே இரண்டு அரசாங்கங்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையிலும் அதன் பாதுகாப்பு நோக்க நிலையில் இருந்து பார்த்தால், அந்தக் கப்பலின் வருகையை இந்தியா ஏற்றுக்கொள்ளாது. ஏனென்றால் கிடைக்கப்பெறும் தகவல்களின்படி அந்தக் கப்பலானது ஆராய்ச்சி கண்காணிப்பு கப்பல் என்று கூறப்பட்ட போதிலும்கூட அது அதைவிட ஆழமான ராணுவ பரிமாணத்தை கொண்டது என்று கூறப்படுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் அது கிட்டத்தட்ட 7 நாட்கள் தரித்து நிற்கும் என்று ஏற்கனவே இரு நாடுகளினாலும் தீர்மானிக்கப்பட்டது. நாட்டு மக்களுக்கு எரிபொருள் தட்டுப்பாடாக இருக்கும் ஒரு கொடுமையான காலகட்டத்தில், ஒரு பிராந்தியப் பேரரசின் கண்காணிப்பு கப்பலுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிபொருளை மீள நிரப்ப போவதாக கூறுகிறார்கள். அனைத்துலக நியமங்களின்படி அவ்வாறு செய்ய வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

அக்கப்பலில் கடலின் ஆழத்துள் காணப்படும் நீர்மூழ்கி வழித்தடங்களை ஆராயும் சக்திமிக்க உபகரணங்கள் பொருத்தப்பட்டு இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. அதுதான் இந்தியாவின் அதிக கரிசனைக்கு காரணமாக இருக்கலாம். இந்த விடயத்தில் இந்திய ஊடகங்கள் அதிகம் பதட்டமடைவதாகத் தெரிகிறது. இந்திய ஊடகங்கள் மத்தியில் இந்த விடயம் கையாளப்படும் விதம் இந்தியாவின் அக்கறையைக் காட்டுகிறது.

கடந்த ஆறு மாத காலமாக இலங்கை தீவின் பொருளாதார நெருக்கடியில் முதலில் உதவிய நாடாகவும் அதிகம் உதவிய நாடாகவும் இந்தியா காணப்படுகிறது. கிட்டதட்ட நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை இந்தியா உதவியுள்ளது. இந்தியாவின் உதவி இல்லை என்றால் ரணில் விக்ரமசிங்க இப்பொழுது ஏற்படுத்தியிருக்கும் பெரும்பாலான மாற்றங்களை செய்திருக்கவே முடியாது. அதனால்தான் அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற பின் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், அந்த உதவியை உயிர் மூச்சு என்று வர்ணித்திருந்தார். இந்த உதவிகள் மூலம் இந்தியா கடந்த ஆறு மாத கால பகுதிக்குள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆறு உடன்படிக்கைகளை எழுதியிருக்கிறது. இந்த உடன்படிக்கைகளில் இரண்டு மிகவும் முக்கியமானவை. ஒன்று மன்னாரிலும் யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதியிலும் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை நிர்மாணிப்பது. யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதியில் அத்திட்டங்களை நிர்மானிப்பதற்கு முதலில் சீனா முன்வந்தது. இலங்கை அரசாங்கம் சீனாவுக்கு அனுமதியும் வழங்கியது. ஆனால் இப்பொழுது இந்தியா அந்தத் திட்டங்களை தன்னுடையதாக்கிக் கொண்டுவிட்டது.

இரண்டாவது எம்.ஆர்.சி.சி என்று அழைக்கப்படும் ஓர் உடன்படிக்கை. அதாவது கடலில் விபத்துக்கள் ஏற்படும் போது கப்பல்களை மீட்பதற்கான ஒரு கண்காணிப்பு வலைப்பின்னலை உருவாக்கும் உடன்படிக்கை. அது இப்பிராந்தியக் கடலை தொடர்ச்சியாக தனது தொழில்நுட்ப கண்காணிப்புக்குள் வைத்திருப்பதற்கு இந்தியாவுக்கு உதவும்.

இவ்வாறான உடன்படிக்கைகளின் மூலம் இந்தியா தனது பிராந்தியக் கடலில் தனது கண்காணிப்பு மேலாண்மையை ஒப்பிட்டளவில் அதிகப்படுத்தியுள்ளது. ஆனால் அதன் பொருள் பிராந்திய கடலில் ஏற்கனவே நிலை கொண்டுள்ள சீனாவை அகற்றிவிடலாம் என்பதல்ல. அம்பாந்ட்டையில் இருந்து சீனாவை அகற்றுவது என்று சொன்னால் குறைந்தது 90 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். துறைமுக நகரத்தில் இருந்தும் சீனா அவ்வளவு சுலபமாக விலகிச் செல்லாது. திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் அனுகூலங்களை நன்கு பயன்படுத்தி இலங்கைத்தீவின் மீது தனது செல்வாக்கை நிரந்தரமாகப் பலப்படுத்தும் உடன்படிக்கைகளை சீனா செய்து கொண்டு விட்டது. அவற்றை முறிப்பது என்று சொன்னால் அது ராஜ்ய வழமைக்கு முரணானது. இக்கப்பலின் விவகாரமும் அப்படித்தான். கப்பலின் வருகை தொடர்பான நிகழ்ச்சி நிரல் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. அதை முறித்துக் கொண்டு இலங்கை திடீரென்று கப்பலை வரவேண்டாம் என்று கேட்க முடியாது. அதனால்தான் இலங்கை அரசாங்கம் கப்பல் வரும் திகதியை பின்போடுமாறு கேட்கிறது. ஆனால் அதற்கு சீனா வழங்கிய பதில் பெருமளவுக்கு இந்தியாவின் மீது விமர்சனங்களை தெரிவிப்பதாகக் காணப்படுகிறது.

கடந்த ஆறு மாத காலமாக இலங்கைக்கு உதவிய காரணத்தால் இப்ராந்தியத்தில் தனது மேலாண்மை முன்னரை விட அதிகரித்திருப்பதாக இந்தியா கருதக்கூடும். எனவே சீனக் கப்பல் விவகாரத்தை பயன்படுத்தி தன்னுடைய புதிய பேர பலத்தை பரிசோதிக்க இந்தியா விரும்பக்கூடும். ஆனால் அதைத்தான் சீனாவும் செய்யும். ஏனெனில் இலங்கைத்தீவில் சீனாவின் முதலீடுகள் அரசியல் முதலீடுகள்தான், ராணுவ முதலீடுகள்தான். தூய பொருளாதார முதலீடுகள் அல்ல. எனவே தொகுத்துப் பார்த்தால் இதில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பிராந்திய போட்டிக்குள் இலங்கை சிக்குண்டிருப்பது தெரியும்.

இலங்கைத் தீவு இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்தில் அமைந்திருக்கும் ஒரு தீவு. இந்தியாவின் செல்வாக்கை மீறி, சீனா இலங்கைத்தீவில் பலமாகக் காலூன்றிவிட்டது. அது இப்பிராந்திய யதார்த்தத்திற்கு முரணானது. அது எப்படி சாத்தியமானது?

தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்டதால்தான் அது சாத்தியமானது. தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு சுமூகமாக இல்லாத காரணத்தால்தான் அது சாத்தியமானது. ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விரிசல்களை வெற்றிகரமாக கையாண்டு கொழும்பில் இருந்த அரசாங்கங்கள் சீனாவை தீவுக்குள் கொண்டு வந்துவிட்டன. அம்பாந்தோட்டை துறைமுக குத்தகை உடன்படிக்கையும் கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் கட்டப்பட்டு வரும் சீன துறைமுகப்பட்டினமும் இந்தியாவின் பேரபலம் குறைந்து போய் இருப்பதை நிரூபிக்கும் தூலமான உதாரணங்கள் ஆகும்.

அவை மட்டுமல்ல கடந்த ஆறு மாத காலமாக இலங்கைத் தீவு இந்தியாவின் உதவிகளில் பெருமளவுக்கு தங்கி இருக்கிறது. அது காரணமாகத்தான் இந்தியா ஆறு உடன்படிக்கைகளை செய்ய முடிந்தது. ஆனாலும் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள் பொறுத்து இந்தியா இப்பொழுதும் இக்கட்டுரை எழுதப்படும் கணம் வரையிலும் பலமான நிலையில் இல்லை. உதாரணமாக பலாலி விமான நிலையத்தை மீளத் திறப்பது, காங்கேசன் துறைக்கும் காரைக்காலுக்கும் இடையே ஒரு பயணிகள் படகு சேவையை தொடங்குவது, தலைமன்னாரில் இருந்து மற்றொரு படகு சேவையை தொடங்குவது....போன்ற விடயங்களில் குறிப்பிட்டுச் செல்லக் கூடிய முன்னேற்றங்களை காண முடியவில்லை. பலாலி விமான நிலையத்தை மீளத் திறந்த பெருமையை யார் தட்டிக் கொள்வது என்பதில் டக்ளஸ் தேவானந்தாவும் வட மாகாண ஆளுநரும் போட்டி போடுகிறார்கள். அவ்விமான நிலையம் இம்மாத இறுதிக்குள் திறக்கப்படும் என்று கூறப்படுகிறது. இப்படி ஏற்கனவே பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பலாலியில் இருந்து விமானம் புறப்படுவதும், காங்கேசன்துறையில் இருந்து கப்பல் புறப்படுவதும், திருநாளைப் போவாரின் கதைகளாகத்தான் காணப்படுகின்றன.

மேலும் யாழ்ப்பாணத்தில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்ட கலாச்சார மண்டபத்தை இன்றுவரை திறக்க முடியவில்லை. அது சில மாதங்களுக்கு முன்பு, அதாவது இந்தியா இலங்கையோடு ஆறு உடன்படிக்கைகளை கையெழுத்திட்ட அன்று சம்பிரதாயபூர்வமாக திறக்கப்பட்டது. திறப்பு விழாவிற்கு சொ.்.ப்ட் ஓப்பனிங் என்று பெயர் வைக்கப்பட்டது. அதன்பின் இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வருவார் என்றும் அப்பொழுது கோலாகலமாக அது திறந்து வைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. ஆனால் இன்றுவரையிலும் அந்த மண்டபம் திறக்கப்படவே இல்லை. யாழ்ப்பாணத்தின் மிக உயரமான ஒரு கட்டடமாகவும் தமிழ் மக்களின் அரசியலில் இந்தியாவின் செல்வாக்குக்குள்ள வரையறைகளை உணர்த்தும் ஒரு கட்டடமாகவும் அது தொடர்ந்தும் காணப்படுகிறது.

தனது செல்வாக்கு மண்டலத்துக்குள் சீனா பலமாக காலூன்றி விட்டதை இந்தியா தொடர்ந்தும் சகித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ரஷ்யா அவ்வாறு சகித்துக் கொள்ளவில்லை. அதனால்தான் உக்ரைனில் ரஷ்யா ஒரு குரூரமான யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. அது நேட்டோவுக்கும் ர'யாவுக்கும் இடையிலான ஒரு நிழல் யுத்தமே.

ஆனால் இலங்கைத்தீவில் அப்படி ஒரு மோதலுக்கான தீர்மானத்தை எடுக்கும் நிலையில் அமெரிக்காவும் இல்லை இந்தியாவும் இல்லை. அது மட்டுமல்ல அப்படி ஒரு தீர்மானத்தை எடுத்தால், அமெரிக்காவோ அல்லது இந்தியாவோ தமிழ் மக்களைத் தமது பக்கம் வென்றெடுக்க வேண்யிருக்கும். ஏனென்றால் தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தித்தான் எந்த ஒரு வெளிச்சக்தியும் சீனாவுக்கு எதிராக உள்ளிறங்கலாம். ஏற்கனவே ஒரு தடவை இந்தியா அவ்வாறு உள்ளிறங்கியது. அது தன் படைகளை இறக்கியது. அப்பொழுது ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பனிப் போர் நடந்து கொண்டிருந்தது. அப் பனிப்போரை தமிழ் மக்களும் சிங்கள மக்களும் நிஜப்போர் ஆக முன்னெடுத்தார்கள். அமெரிக்கா கொழும்பிலிருந்த அரசாங்கத்தை ஆதரித்தது. இந்தியா தமிழ்ப் போராளிகளை ஆதரித்தது; ஆயுதமும் பயிற்சியும் வழங்கியதுதமிழகத்தை பின் தளமாகத் திறந்து விட்டது. முடிவில் ஈழப் போரை பயன்படுத்தி இந்தியா இலங்கை தீவின் மீதான தனது மேலாண்மையை பேணத்தக்க ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டது. அதன் விளைவின் விளைவுகள் இந்தியாவுக்கும் தமிழ்மக்களுக்கும் இடையிலான உறவில் விரிசல்களை ஏற்படுத்தின. ஆனால் அந்த உடன்படிக்கை இப்பொழுது ஏறக்குறைய காலாவதியாகி விட்டதா என்று கேட்கும் அளவுக்கு சீனா இச்சிறிய தீவினுள் காலூன்றி விட்டது.

அதேசமயம் தமிழ் மக்களை ஒரு கருவியாக கையாண்டு தன்னுடைய பிராந்திய நலன்களை நிறைவேற்ற முயன்ற இந்தியா தமிழ் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய இரண்டு தரப்புக்கும் நண்பனாக இருக்க முயன்று, முடிவில் இரண்டு தரப்பையுமே பகைத்துக் கொண்டு விட்டது. அதன் விளைவுதான் இலங்கை தீவில் சீனாவின் பிரசன்னம் ஆகும்.

பிராந்திய யதார்தத்துக்கு முரணாகவும், இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துக்கு எதிராகவும், இலங்கைத்தீவில் சீனா காலூன்றி விட்டது. இவ்வாறு இலங்கைத்தீவில் ஏற்கனவே காலூன்றியிருக்கும் சீனாவின் பேர பலத்தை பரிசோதிக்கும் ஆகப்பிந்திய ஒரு விடயமாக யுவான் வாங்-5 கப்பல் விவகாரம் காணப்படுகிறது.

இந்தியாவோ அமெரிக்காவோ விரும்பினாலும்கூட இலங்கைத்தீவிலிருந்து சீனா அகற்றப்பட முடியாத ஒரு சக்தியாக தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கும் என்பதே இப்போதுள்ள பிராந்திய யதார்த்தம் ஆகும். பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி வேண்டுமானால் அமெரிக்காவும் இந்தியாவும் தங்கள் பங்கிற்கு இலங்கைத்தீவின் ஏதாவது ஒரு பாகத்தில் பலமாகக் கால் ஊன்றலாம். அதாவது சீனாவிடம் ஒரு பகுதி, இந்தியாவிடம ஒரு பகுதி, அமெரிக்காவிடம் ஒரு பகுதி, மொத்தத்தில் இக்குட்டித் தீவு பேரரசுகள் பங்கிடும் ஒரப்பம்.

## வீணாவின் கவிக்கணை

சின்ன சின்ன பாதம்
தொட்டு அள்ளி விளையாடவும்,
அறுசுவையோடு ஊட்டிவிடவும்
அம்மையுண்டு,
ஆத்தங்கரை நீச்சலுக்கும்,
அருமையான ஆடைகள்
வாங்கிடவும் அப்பனுண்டு,
அடுத்தவீட்டில் சேட்டை
செய்து, ஓடிவந்து ஒளிவதற்கும்
அம்மாவோட மடியிருக்கு,
கேட்டதெல்லாம் அடம்பிடித்து
வாங்கிடத்தான் அப்பாவோட
பணம் இருக்கு,
எல்லாம் எல்லாம் நீதான்
என்று உனக்காக அவர்களிருக்க,
ஒன்றும் இல்லை இல்லை என்று
சொல்லி வளர்ந்த பின் நீயோ
அவர்களை மறுக்க,
முதியோர் இல்லங்கள்
எல்லாம் பெருகி வழிய,
என்ன பிழை செய்தார்களோ
அவர்களும் உங்களைப்போன்ற
பாவிகளை பெற்றெடுக்க.

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# தமிழர் தாயகப் பகுதியில் 'இராணுவ மயமாகும்' முன்பள்ளிகள்

யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



இலங்கை உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட கிளிநொச்சியில் முன்பள்ளிகளையும் இராணுவமயப்படுத்தும் நடவடிக்கைக்கு மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு எழுந்துள்ளது. வலிந்து இராணுவ மயமாகும் இந்த முயற்சி நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (9) அன்று யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் புகைப்பட ஆதாரங்களுடன் எழுப்பப்பட்டது.

கிளிநொச்சியில் முன்பள்ளிகளின் பெயர்கள் இராணுவ மயப்படுத்தப்படுவதை எதிர்த்து மாணவர்களை கற்றல் செயல்பாட்டிற்கு அனுப்ப பெற்றோர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றனர். சிறு வயது முதலே இராணுவ சிந்தனைகளை சிறார்கள் மத்தியில் விதைக்கும் நடவடிக்கையாகவே இதை கருத வேண்டியுள்ளது என்று உள்ளூர் மக்கள் உதயனிடம் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை தொடர்பில் சாதாரண மக்கள் தொடக்கம், கல்விமான்கள், சிவில் சமூகத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என பல்தரப்பினர் இந்த முன்னெடுப்பை கண்டித்துள்ளனர்.

இலங்கையில் அரச நிர்வாகம் முதல் அணைத்துமே இராணுவ மயப்படுத்தலிற்கு இலக்காகும் நிலையில் முன்பள்ளிகளில் பல ஏற்கனவே இராணுவ கட்டமைப்புகொண்ட ஆசிரியர்களின் கீழ் கொண்டு வரப்பட்டு தற்போது பாடசாலைகளின் பெயர்களும் இராணுவ மயமாக்க செயற்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி முன்பள்ளிகளிற்கு இராணுவப் பெயர்

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகிநகர், புன்னைநீராவியிலுள்ள "பாற்கடற் பூங்கா முன்பள்ளியின்" பெயர் கடந்த 2022.08.03 ஆம் திகதியும், அதே பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரம் கிராமத்தில் அமைந்துள்ள "மயூரன் முன்பள்ளியின்" பெயர் 2022.08.05 ஆம் திகதியும் இராணுவத்தலைமையீட்டின் மூலம் "வீரமுத்துக்கள் முன்பள்ளி" என மாற்றம் செய்யப்பட்டுள்ளமையை கண்டித்தே உள்ளூர் மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சிறு பிள்ளைகள் முன்பள்ளிக்கு அணிந்து செல்லும் சீருடையிலும் இராணுவ இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சபையில் எடுத்துரைத்தார். இது வலிந்து முன்னெடுக்கப்படும் ஒரு உளவியல் தந்திரோபாயம் என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன.

இந்த செயல்பாடானது மாவட்டக் கல்வி அமைப்புகளின் சுயாதீன இயங்கு நிலையை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது. குறித்த இரு முன்பள்ளிகளும் அப்பிரதேச மக்களால் தற்போது மூடப்பட்டுள்ளதுடன் சிவில் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் அப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரது கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது.


## ஆளுநருக்கு சிறீதரன் கடிதம்

மக்களின் விசனம் மற்றும் இராணுவத்தின் இந்த மறைமுகச் செயல்பாடு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிற்கு கடந்த வெள்ளிக்கிழமை (5) அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் 2009 இறுதி யுத்தத்திற்குப் பிற்பாடு 2010 ஆம் ஆண்டளவில் மீள்குடியேற்றம் நடைபெற்றபோது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கல்வித் திணைக்களங்களின் மேற்பார்வையில் நடாத்தப்பட்டுவந்த பல முன்பள்ளிகள் இராணுவத்தினரின் சிவில் பாதுகாப்பு படைப்பிரிவினரால் (CSD) வலுக்கட்டாயமாக கையகப்படுத்தப்பட்டு அங்கு கற்பிக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களும் சிவில் பாதுகாப்பு பிரிவின் நிர்வாக ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.




கிளிநொச்சி மாவட்டத்தில் 303 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 166 பேர், யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 பேர் உட்பட 481 முன்பள்ளி ஆசிரியர்கள் இராணுவப் படையணிச் சம்பளத்தைப் பெற்று கடமையாற்றும் சூழல் வலிந்து உருவாக்கப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அதே சம்பளத்தை மாகாண கல்வி அமைச்சினூடாக வழங்கி முன்பள்ளிகளின் கல்வித்தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பாராளுமன்றத்திலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் பலதடவைகள் என்னால் வலியுறுத்தப்பட்ட போதும் உரிய தரப்பினர் இதுவரை எந்த முனைப்பும் மேற்கொள்ளவில்லை, என்று சிறிதரன் தனது கடிதத்தில் எழுதியுள்ளார்.



"குறிப்பாக உலக வரலாற்றில் எங்குமே இல்லாத வகையில் ஆரம்பக் கல்வியையே இராணுவமயப்படுத்தி உலகச் சிறுவர் உரிமைச் சட்டங்களை மீறி, பச்சிளம் சிறுவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் இராணுவ மயப்படுத்தப்பட்ட கல்விமுறையை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிலும் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் திணிக்க முற்படுகின்றமையானது இன ஒடுக்குமுறையின் இன்னொரு வடிவமாகவே தென்படுகிறது".




வடக்கு, கிழக்கிலுள்ள ஒவ்வொரு முன்பள்ளிகளுக்கும், அந்தந்த முன்பள்ளிகள் அமைந்துள்ள கிராமங்களிலுள்ள மக்கள் சமூகத்தின் பண்பாடு, கலாசார, மொழி, நில, வரலாற்று அடையாளங்களின் பிரதிபலிப்பாகவே தனித்துவம் மிக்கதான தனித்தனிப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அந்த முன்பள்ளிகளின் பெயர்கள் குறிப்பிட்டதோர் மக்கள் குழுமத்தின் உணர்வுகளோடு இரண்டறக்கலந்த அடையாளங்களாகவே பார்க்கப்பட்டுவருகின்றன என சிறீதரன் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், குறித்த முன்பள்ளிகளின் பொறுப்பாசிரியர்கள், முன்பள்ளி முகாமைத்துவக் குழு, பெற்றோர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் ஒப்புதலற்று இராணுவத் தலைமையீட்டினால், பலவந்தமாக ஒரு முன்பள்ளியின் பெயரை வலிந்து மாற்றம் செய்து, இராணுவத் துணைப்பிரிவொன்றின் சின்னம் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகையை காட்சிப்படுத்துவதென்பது எமது மாவட்டத்தின் கல்வித்துறையில் செல்வாக்குச் செலுத்தும் இராணுவ எதேச்சதிகாரத்தனத்தின் வெளிப்பாடே ஆகும் என அவரது கடிதம் சாடுகிறது.

ஒரு இனத்தின் அடிப்படை மூலாதாரமான கல்வி உரிமையைப் பறிப்பதனூடாக அந்த இனக்குழுமத்தின் அடையாளம் அழிக்கப்படும் என்பதை அறிந்து, அவ்வாறான செயற்பாடுகளை தமிழர் தாயகப் பகுதிகளில் அரங்கேற்றி வருவது குறித்து, தாங்கள் வடக்கு மாகாண ஆளுநர் என்றவகையில் அக்கறை கொள்ளாதிருப்பது பல்வேறு வழிகளிலும் வலிதாங்கி நிற்கும் எமது மக்களை மேலும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் எழுதி தனது அதிருப்தியை வெளியிட்டுளார்.

அதேவேளை, முன்பள்ளிகளின் சுயாதீன இயங்குநிலையில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அவற்றுக்கு இராணுவப் பெயர்களைச் சூட்டும் நிகழ்ச்சிநிரலை பரவலாக அமுலாக்கம் செய்யும் முனைப்புக்களின் முதற் கட்டமாகவே பாற்கடற் பூங்கா முன்பள்ளி, மயூரன் முன்பள்ளி உட்பட வேறுசில முன்பள்ளிகளுக்கும் இராணுவப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ளதாக தான் அறிவதாக அவர் கூறுகிறார்.

"தமது கல்வி, அதனூடான வளமான எதிர்காலம் என்னும் அழகிய கனவுகளோடு முதலடி எடுத்துவைக்கும் முன்பள்ளிச் சிறுவர்கள் உள ரீதியான தாக்கங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் உள்ளாகாது தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, முன்பள்ளிகளின் சுயாதீன இயங்குநிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இத்தகு செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதன் மூலமே, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வித்துறையில் இராணுவத்தலையீட்டை நீக்க முடியும்".

எனவே தயவுசெய்து, அரச நிர்வாக நடைமுறைகளுக்கு அமைய உருவாக்கப்பட்டு, நீண்டகாலமாக இயங்கிவரும் முன்பள்ளிகள், தமக்குரிய தனித்துவமான பெயரோடும் அடையாளத்தோடும் இயங்குவதற்கு ஏதுவாக, சிவில் பாதுகாப்பு பிரிவினரால் புதிதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகைகளை உடனடியாக அகற்றுவதற்கும், வடக்கு, கிழக்கிலுள்ள முன்பள்ளிகளின் பாரம்பரிய பெயர்களை நீக்கம் செய்து அவற்றுக்கு இராணுவப் பெயர்களைச் சூட்டும் நிகழ்ச்சிநிரலை தடுத்து நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் சிறீதரன் கோரியுள்ளார்.

இதன் பிரதிகளை செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம் உட்பட அதிகாரிகளுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்திற்கும் அவர் அனுப்பியுள்ளார். மேலதிகமாக 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இதை அவர் எழுப்பியுள்ளார்.

## சிவில் பாதுகாப்பு திணைக்கள ஊதியம் பெறும் ஆசிரியர்கள்

வடக்கு மாகாணத்தில் மட்டும் 500க்கும் அதிகமான ஆசிரியர்கள் சிவில் பாதுகாப்பு திணைக்கள ஊதியம் பெறுகின்றனர் என்பது புள்ளிவிவர தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கும் முன்பள்ளிகள் பலவற்றின் ஆசிரியர்கள் சிவில்பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டு இன்றுவரை அதன் கீழேயே 35 ஆயிரம் ரூபா வரையான ஊதியத்தைப் பெறுகின்றனர். இதில் யாழ்ப்பாணத்தில் 13 முன்பள்ளி ஆசிரியர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 322 பேரும் பணியாற்றுவதோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் 173 பேரும் குறித்த சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் ஊதியம்பெறும் ஆசிரியர்களாக பணியாற்றுகின்றனர்.




இந்த நியமனத்தின்போதே முன்பள்ளிகள் இராணுவ மயப்படுத்தலிற்கான அத்திவாரம் போடப்பட்டது என அன்றே பலரும் குற்றம் சாட்டியிருந்தனர் அதன் இரண்டாம் கட்டம் தற்போது அமல்படுத்தப்படுகின்றதா என்ற ஐயம் முன்வைக்கப்படுகின்றது.

ஏனெனில் இந்த ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடசாலை சிறார்களின் சீருடையில் ஏற்கனவே இராணுவச் சின்னம் புகுத்தப்பட்டபோது எதிர்ப்பு எழுந்தாலும் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# Mylanthanai Massacre: 30 years on and justice remains a mi-



Justice delayed is Justice denied and that's more so in the case when the affected are war-affected Tamils. In the case of those affected by the brutal Mylanthanai massacre both happened.

Now poverty-stricken mothers and wives of the Mylanthanai massacre who were denied justice a decade after the massacre are seeking to reopen a skewed trial 30 years after the indiscriminate killings.

'Mylanthanai massacre' case is a classic example of the culture of impunity that has led to the armed forces right from soldiers to General to escape horrendous crimes committed particularly during the war and its aftermath.

Thirty-five Tamils including 14 children were killed on 9th August 1992 at Mylanthanai in the Valachenai area in Sri Lanka's eastern district of Batticaloa. Even after three decades of the massacre justice still eludes the families who lost their beloved ones. Sri Lanka Army went berserk in what is considered to be a retaliation to the killing of Major General Denzil Kobbekaduwa that happened a day earlier in Jaffna.

## Black mark on Judicial system

Families of the victims offered prayers at a local temple and lit a lamp in memory of those killed and made a fervent appeal that the case is reopened, and justice is rendered to them as they kindled the lamps with tears tricking down their eyes falling on the lamps. A memorandum seeking justice for the killing by the soldiers was handed over to the priest for sending it to President Ranil Wickremesinghe, who was once considered a votary of the Tamils. Refusing to accept the verdict of the jury they have sought protection for those seeking justice and want the government to bear the legal cost of the retrial.

The Mylanthanai trial is considered a black mark on the judicial system in Sri Lanka accused of being manipulated in favour of the Buddhist Sinhala majority.

According to eyewitnesses, those massacred by the Sri Lankan Army (SLA) were innocent Tamils many of whom testified during the trial. 18 SLA personnel were accused in the brutal killing and brought before the jury. Earlier at least 24 soldiers at the Punani Army camp were identified by the survivors suspected to be involved in the killing.

In a travesty of Justice, the jury acquitted the 18 soldiers despite strong evidence being presented in court. The case itself had its twist and turns. Whilst the case was brought before the magistrate court in Batticaloa, the Attorney General (AG) transferred it to the court in Polonnaruwa- a Sinhala majority area rather than the High court in Vavuniya a Tamil majority area. Again, on a flimsy stand of safety for the accused the AG transferred the case again to Colombo. This ill-conceived move made it hard for the witnesses and survivors to appear and testify in court.

While more than 30 eyewitnesses from Batticaloa provided undeniable evidence of the massacre, the jury in their own wisdom returned a 'not guilty' verdict for the second time after the presiding judge a Tamil requested the jury to reconsider their earlier verdict of acquitting the soldiers. Adding insult to injury the AG refused permission to the families of the victims to file an appeal. The prosecutor had clearly told the court "Soldiers attacked the village of Mylanthanai after the army's commanding officer in Jaffna was killed along with seven soldiers in a landmine explosion".

## "Travesty of Justice"

Human rights organisations and the victims' relatives expressed utter dismay and shock over the verdict and denial to appear but could not do anything further. The University Teachers for Human Rights (UTHR) in Jaffna a respected academic body that has documented events and human rights abuses for most of the period during the war expressed deep dismay over the verdict, which said the jury's verdict was 'unfair'. In its 'Special Report No: 16 released 18th March 2003 spoke about the deep divide in the Justice system on ethnical lines.



"There has hardly been any expression of concern over the Jury's verdict in the Mylanthanai massacre case. This is widely seen as a travesty of justice and affects the confidence of a whole community in the system. The constant message communicated to a minority is that they will never see justice under a 'Sinhalese government'. The benefits of bringing in the International Community would be nullified if the State and the Sinhalese polity were seen to be incapable of change".

A now defunct popular periodical of those times 'North-eastern Herald' strongly condemned the verdict in their editorial.

"Although the constitution provides room for appealing in such cases the AG refused to appeal the verdict citing convention".



## Timeline of the Mylanthanai Massacre:

**8 August 1992:**
The then Jaffna Commander Maj. Gen Denzil Kobbekaduwe killed in a landmine explosion near Arali.

**9 August 1992:**
At least 35 innocent Tamils were massacred by the Sri Lankan Army soldiers from the Punanai Camp in a said to be retaliation for the death of Gen Kobbekaduwe.

**2 April 1993:**
Identification parade of alleged perpetrators at the Batticaloa Magistrate court, Victims identified at least 24 soldiers of committing the massacre.

**September 1999:**
Indictment filed in Colombo High Court

**26 November 2002:**
A 'not guilty' verdict was delivered by the court absolving all the 18 soldiers who were brought to trial.

**18 March 2003:**
Special report by UTHR (Jaffna) calling the verdict 'unfair'.

**9 August 2022:**
Relatives of victims call for retrial seeking justice.

# மயிலந்தனைப் படுகொலை 30ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயிலந்தனை கிராமத்தில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற படுகொலைச் சம்பவத்தின் 30ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை (9) மயிலங்தனை விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்த நிளைவு நாளை முன்னிட்டு ஆலயத்தில் பொங்கல் பொங்கி, விசேட பூஜை பிரார்த்தனை நடைபெற்று, நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிராம மக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில், ஆலய மதகுருக்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வின் நிறைவில், தங்களுக்கு மறுக்கப்பட்ட நீதியை மீண்டும் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரை ஆலய மதகுருவிடம் கிராமமக்கள் கையளித்தனர்.

மட்டக்களப்பு நகருக்கு வடக்கே 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள புனானை மயிலந்தனை கிராமத்தில் 09ம் திகதி ஆவணி மாதம் 1992ம் ஆண்டு எமது மயிலந்தனை கிராமத்தைச் சார்ந்த சிறுவர்கள், பெண்கள் அடங்கலாக 39 பேர் வெட்டியும், சுடப்பட்டும், கொலை செய்யப்பட்டார்கள். 34 பேர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அந்நாளில் 35 தமிழர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் மேலும் 4 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர். பின்னர், அந்த கிராமத்தினை சேர்ந்த நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் புனாணை இராணுவ முகாமைச் சேர்ந்த இலங்கை இராணுவத்தினரே இப் படுகொலைகளை நிகழ்த்தியதாக வழக்குத் தொடுக்கப்பட்டது.



இதையடுத்து 1993 ஆம் ஆண்டு சித்திரை 2 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்று, 24 இராணுவத்தினர அந்த கிராமத்தில் உயிர் தப்பிய மக்கள் அடையாளம் காட்டியிருந்தனர்.

பின்னர் இவ்வழக்கு பொலன்னறுவை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இருந்த போதும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பாதுகாப்புக் கருதி சட்டமா அதிபர் இவ்வழக்கை கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றினர். இதனால் கிராமத்தினைச் சேர்ந்த சாட்சிகள் கொழும்பு சென்று சாட்சி சொல்வதற்குப் பெரும் சிரமப்பட்டதுடன், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்ட நிலையில் 1993 புரட்டாதி மாதத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

மட்டக்களப்பிலிருந்து 30 இற்கும் அதிகமான சாட்சிகள் விசாரணையில் கலந்து கொண்டனர். தீவிர விசாரணையின் பின்னர் தீர்ப்புக் கூறும் முடிவு ஜுரி குழுவுக்கு கொடுக்கப்பட்டது. வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட எந்த ஒரு இராணுவத்தினரும் குற்றம் இழைக்கவில்லை என ஜுரி குழு ஏகமனதாகத் தீர்ப்பளித்தது. மீண்டும் இதனைப் பரிசீலிக்குமாறு நீதிபதி கேட்டுக் கொண்ட போதும், ஜுரி சபையினர் அவர்களைக் குற்றமற்றவர்கள் எனக் கூறினர். படுகொலை செய்யப்பட்டவர்கள் சார்பாக மேன்முறையீடு செய்வதற்கு சட்டமா அதிபர் ஒப்புதல் அளிக்கவில்லை.

குற்றம் சாட்டப்பட்ட 18 இராணுவத்தினரும் நவம்பர் 27ஆம் திகதி 2002 விடுதலை செய்யப்பட்டனர். இத்தீர்ப்பினை அடுத்து மனித உரிமைச் செயற்பாட்டாளர், சிவில் அமைப்புக்கள், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், கிராம மக்களும் இது குறித்து அதிருப்தியடைந்தனர்.

மயிலந்தனை படுகொலை நடந்து இன்று 30ஆம் ஆண்டு நினைவு தினத்தில் மீளவும் நீதிக்காக தங்களது கீழ்க்கண்ட கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளனர்.

1. எமது வழக்கு மீண்டும் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஜுரி முறை விசாரணையை நாம் ஏற்க மறுக்கிறோம்.
2. சாட்சிகளுக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.
3. சாட்சிகளின் வழக்கு செலவை அரசு பொறுப்பேற்க வேண்டும்.
4. பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.
5. மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அதற்கான அரச தரப்பு முன்னெடுப்புகளை அறிவித்தல் வேண்டும்.


SINHA
FROM LION BREWERY SRI LANKA
FROM LION BREWERY SRI LANKA
254, Colombo Road, Biyagama, Sri Lanka
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
SINHA
-1881-
SINHA
LAGER
IMPORTED
SINHA
LAGER
IMPORTED
BEER- BIERE
4.8% alc./vol
6 x 330 ml
Bottles / Bouteilles
AVAILABLE AT SELECTED BEER STORES
For further info go to www.thebeerstore.ca
or call 416-443-2020


True Sound Live
வழங்கும்
இசைப்புயல்
AR RAHMAN
Live in Toronto
All Access Tour
August 28
Sunday 7pm
Scotiabank Arena
Toronto, Canada
www.ticketmaster.ca
FM 88.9
416-441-4100
east
FM 102.7
ATN
உதயன்




TITLE SPONSOR

SULLIVAN AUTO GROUP

BRIMELL TOYOTA | Formula Honda | MORNINGSIDE NISSAN

POWERED BY

iConnect Mortgages | Dominion Lending Centres

HOSTED BY

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

ZONE SPONSORS

COMPUTEK COLLEGE | HOMELIFE | NAVA WILSON LLP BARRISTERS AND SOLICITORS | Pradon Silks | TD | VIBRANT HOSPITALITY GROUP | WOW! WING HOUSE

COMMUNITY PARTNER

Federation of Tamil Sangams of North America SINCE 1988

SUPPORTED BY

TORONTO | Canada

MEDIA SPONSORS

ATN ASIAN TELEVISION NETWORK | east FM 102.7 | STARMETROLAND MEDIA

TAMILFEST.CA | TAMILFEST@CANADIANTAMILCONGRESS.CA | 416.240.0078 | @tamilfest





கோடை இசை மழை
இடம் பெறும்....
AUGUST 12,13,14 ம்
தேதிகளில்
உங்கள் விளம்பரங்கள்
வர்த்தக சாவடிகள்,
இடம்பெற
அழையுங்கள்....

வர்த்தக சாவடிகள்,
3 நாட்களுக்கு
($1000 முதல்)
முன்பதிவுகளுக்கு
முந்திக்கொள்ளுங்கள்
முற்பதிவுகள்
ஜூலை 31க்குப்பின்
ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது

**முன்பதிவிற்கு : 416 5563219**

## நூல் வெளியீடு




"வானொலி வரலாற்றில்
இது ஓர் ஆவணப்திவு"

கோலாகல இசைமழையுடன்
ஓர் நூல் வெளியீடு....

திறந்த வெளியரங்கில் மாலை 5 மணிமுதல்
உலகத் தமிழர்களின் அன்பு அறிவிப்பாளர்
**B.H.அப்துல் ஹமீத்**
அவர்கள் எழுதிய
**வானலைகளில் ஒரு வழிப்போக்கன்**
(இது வானொலி வரலாற்றின் ஆவணப் பதிவு)
**நூல் வெளியீடு.**


S.K.ராஜன்

DATE : AUGUST-12
**PLACE : MARKHAM MEADOW**
8100 STEELS AVE


மதுமிதா

உங்கள் அபிமானத்துக்குரிய இந்திய -
கனேடியக் கலைஞர்கள்
வழங்கும்....
ஆடலும் - பாடலும் இணைந்த
கலைவிருந்தும் உண்டு.
அழைப்பிதழ்
திரு / திருமதி.......................................

உலகெங்கும் வாழும் தமிழ மக்களது அன்புக்குரிய
அறிவிப்பாளர்
திரு. **B.H.அப்துல் ஹமீத்** அவர்கள் எழுதிய
'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்'
எனும் வானொலி வரலாற்று
ஆவணப் பதிவு நூல் வெளீடு,
எதிர் வரும் ஆகஸ்டு 12 மாலை 5 மணிக்கு
ஆடல்-பாடல் கலைநிகழ்வுகளோடு
நடைபெறும் இந்நிகழ்வில்
கலந்து கொள்ளவருமாறு
உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

அனுமதி இலவசம்!     தமிழோசை - சினி மீடியா!!

416 5563219

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# 2000 நாட்களாகத் தொடரும் ஒரு வேள்வி




**தா**யின் சாபம் மற்றும் கோபம் பொல்லாதது. உலகளவில் அப்படியான சாபத்திற்கு ஆளானவர்கள் வீழ்ந்து மடிந்ததே சரித்திரம் பாடமாக உணர்த்தியுள்ளது. தாய்மார்களின் அன்பு, அரவணைப்பு, ஆதரவு, ஏக்கம், தாபம், கோபம் எல்லாவற்றிற்கும் மேலாக சாபம் என்பது மிகவும் வலுவானது.

அவ்வகையில் இலங்கையில் போர் முடிந்து 13 ஆண்டுகளிற்கு மேலான பிறகும், போர்க் காலத்திலும் அதற்கு பின்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அல்லது வட்டுவாகல் போன்ற பகுதியில் இராணுவத்திடம் குடும்பத்தாரால் கையளிக்கப்பட்டவர்கள் அல்லது சரணடைந்தவர்கள் அதற்கு பின் என்ன ஆனார்கள் என்பதற்கான பதில் யாரிடமும் இல்லை.

அந்த தாய்மார்கள் கேட்பது ஒரேயொரு கேள்வி அதுவும் நேரடியான கேள்வி மட்டுமே. "அவர்கள் (உயிருடன்) இருக்கிறார்களா இல்லையா? தொடர்ச்சியாக வந்த எந்த அரசாங்கமும் அதற்கு பதிலளிக்க தயாராக இல்லை என்பதே யதார்த்தம்.

ஆனாலும் போரில் தமது வாழ்க்கை, வயது, சொத்து, சுகம், பெற்றவர்கள், வள்ர்த்தவர்கள் என்று ஏராளமான இழப்புகளை சந்தித்த ஆயிரக்கணக்கான தாய்மார்கள், தமது நம்பிக்கையை மட்டும் இன்னும் இழக்கவில்லை.

அதுவே அவர்கள் உறவுகளை தேடும் நடவடிக்கையில் ஆணிவேராக உள்ளது. மழை, வெயில், பனி, காற்று, பஞ்சம், நெருக்கடி, அச்சுறுத்தல், கொலை மிரட்டல் என அனைத்தையும் கடந்து அவர்களின் போராட்டம் தொடருகிறது.



இதை போராட்டம் என்று சொல்வதைவிட தளராத ஒரு வேள்வி என்றே சொல்ல வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி பெண்கள் குறிப்பாக தாய்மார் முன்னெடுக்கும் தெற்காசியாவின் மிக நீண்ட போராட்டம் 2,000 நாட்களை எட்டியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் இலங்கையின் பாதுகாப்புப் படையினரிடம் கையளிக்கப்பட்ட நிலையிலும், சரணடைந்த நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கான விடையைத் தேடி கடந்த 2017ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட போராட்டமே 2,000 நாட்களை எட்டியுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் வாழும் தமிழ் தாய்மார் தமது பிள்ளைகள், கணவர் அல்லது உறவினரை பதுகாப்புத் தரப்பிடம் ஒப்படைத்த நிலையில் அவர்களுக்கு என்ன நடந்து எனக் கேட்டு போராடி வருகின்றனர்.

யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள போதிலும் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் இந்த தாய்மார்.

யுத்தம் நடந்த காலப்பகுதியிலும், இறுதி யுத்தத்தின்போதும் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் வடக்கு, கிழக்கில் பல இளைஞர்கள் (சிறுவர்கள்) இலங்கையின் பாதுகாப்புத் தரப்பிடம் குறிப்பாக இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்கள் ஏராளம்.

இந்த 2,000 நாட்கள் தொடர் போராட்டத்தில் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்றேத் தெரியாமல், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர்கள் 139 பேர் உயிரிழந்துள்ளனர். பிள்ளைகளை பறிகொடுத்த சோகத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

பல தசாப்தங்களாக தமது உரிமைக்காக அஹிம்சை ரீதியில் போராடிய இலங்கைத் தமிழர்கள், தம்மை அடக்கியாள முற்பட்ட சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக ஆயும் ஏந்தினர். அதன் பின்னர் உள்நாட்டு போராக மாறிய மோதல் 2009இல் இலங்கை அரசாங்கத்தால் ரத்தக்களறியுடன் முடிவுக்கு




கொண்டுவரப்பட்டது.

இதன் பின்னரும், தமிழர் தாயகப் பிரதேசத்தில், சிங்களவர்களையும், பௌத்த தேசிய வாதக் கொள்கையையும் கொண்ட அரசாங்கத்தின் அடக்குமுறைகள் பாதுகாப்புத் தரப்பின் கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இந்த அடக்குமுறைகளுக்கு எதிராகவும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காகவும் அவ்வப்போது போராட்டங்களை மேற்கொண்டு வந்த தமிழ்த் தாய்மார், 2017ஆம் ஆண்டு முதல் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு விடை தெரியாமல் ஓயப்போவது இல்லை என்ற தீர்மானத்துடன் கடந்த 2,000 நாட்களாக அந்த பெண்கள் வீதியில் காத்திருக்கின்றனர்.




"எனது பிள்ளை எங்கோ உயிருடன் இருக்கிறான் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அவரை என் கண் நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடமும், சர்வதேசத்திடமும் கோருகின்றேன்" என வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தாய் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான ஒரு சூழலில் பேராட்டம் முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சில முன்னெடுப்புகள் செயற்படுத்தப்பட்டன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பரிந்துரைக்கு அமைய இந்த விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன.

காணாமற்போனோர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினையைத் தீர்க்க இலஙகை அரசாங்கம் மேறகொண்ட முயற்சிகளின்போது, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்பு முனையைக் குறிப்பிடப்படுகின்றது.

ஆனால் ஆட்சி மாறியவுடன் காட்சிகளும் மாறின.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் குறிக்கோள்கள், காணாமற்போனோரைத் தேடுதல் மற்றும் அவர்களைப் பற்றிக் கண்டறிதல், இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்குப்பரிந்துரைகளை முன்வைத்தல், காணாமற்போனோரினதும் அவர்களது உறவினர்களதும் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய வகையில் உத்தரவாதங்களை மேறகொண்டு, நிவாரணங்களை வழங்குவதற்கு உசிதமான நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல் என்பனவாகும்.

2018 பெப்ரவரி மாதத்தில், அதாவது தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தில் ஏழு ஆணையாளர்களின் நியமனத்தோடு அலுவலகத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் பெயரிலேயே சர்ச்சை காணப்படுவதாக தெரிவித்த போராட்டக்காரர்கள் அலுவலகத்தை ஆரம்பத்திலேயே எதிர்த்தனர்.

காரணம் தாம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடுகின்ற நிலையில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் என்ற பெயரில் அலுவலம் ஒன்று இயங்குவதை அவர்கள் விரும்பவில்லை.

இந்த அலுவலகமும் பல்வேறு தகவல்களை திரட்டி சில செயற்பாடுகளை முன்னெடுத்தாலும் ஆக்கபூர்வமாக எதுவும் இடம்பெறவில்லை.

இவ்வாறா நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்திற்கு வந்த அப்போதைய பிரதமரும் இப்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக உறவினர்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை மறுத்திருந்தார்.

"292 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் வேறு எவரையும் அரசாங்கம் தடுத்து வைக்கவில்லை" என பிரித்தானியாவின் சௌனல் 4 ஊடகத்திற்கு கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி வழங்கிய செவ்வியில் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவித்த அவர், அவர்கள் தொடர்பில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதேபோன்ற கருத்தை 2020ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் தெரிவித்திருந்தார்.

காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கட்டாயமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் எனவும், அவர்கள் இறந்துவிட்டதாகவும் இலங்பை ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக, 2020 ஜனவரி 18 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

"இதை காணாமல் போனவர்களின் குடும்பத்தினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். என்ன நடந்தது என அவர்களின் குடும்பங்களுக்கு தெரியவில்லை என்பதால், அவர்கள் காணாமல் போனதாகக் கூறுகின்றனர்," என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கருடன் நடைபெற்ற சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், காணாமல் போனோர் விவகாரத்திற்காக 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, 2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தை சமர்பித்து உரை நிகழ்த்திய போது நிதி அமைச்சராக இருந்தபசில் ராஜபக்ச கூறியிருந்தார்.

எனினும், காணாமல் போனோர் விவகாரத்தில் நீதி வேண்டும் என்பதை தவிர, நிதி தேவையில்லை என்ற விடயத்தை இந்த நாட்டிற்கும், சர்வதேசத்திற்கும் தாம் தெளிவாக கூறுவதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தாய்மார் குறிப்பிட்டிருந்தனர்.

தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பது கண்டறியப்பட வேண்டும் எனவும், அதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் வாழ்வாதார ரீதியிலும் வேறு விதத்திலும் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். எனினும் போராட்டத்தை அவர்கள் கைவிடவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனவும், அதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் தமிழ்த் தேசியம் பேசக்கூடிய அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. எனினும் எதுவும் இடம்பெற்றதாக தெரியவில்லை.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு உறவுகளும் மரணித்துக் கொண்டு போகும் போது "எங்களிடம் உள்ள சாட்சிகளும் அவர்களோடு சேர்ந்து மரணித்துப் போகின்றன" என்பதே அந்த தாய்மாரின் கவலையாக மாறியுள்ளது.

இவ்வாறு தொடர்ந்து போராடும் தாமும் மரணித்து போனால் சாட்சிகளே இல்லாமல் போய் விடும் அதைத்தான் இந்த இலங்கை அரசாங்கமும், சர்வதேசமும் விரும்புகிறதா? என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு மேல் கொடும் வெயிலும் கடும் மழையிலும் வீதியில் போராடும் இவர்கள், தொடர்ந்தும் இருக்கப்போகின்ற இந்த தாய்மாரின் கண்ணீருக்கும், போராட்டத்திற்கும் ஒரு நல்லதொரு பதில் கிடைக்க வேண்டுமென்பதே மனிதாபிமானமிக்க அனைவரது எதிர்பார்ப்பாகவும் அமைந்துள்ளது.




எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதும், பிரதமராகவும் இருந்த போதும் முடிந்த முயற்சிகளை எடுத்தேன் ஆனால் அதை தன்னால் செயற்படுத்த முடியவில்லை என்று அப்போது கூறிய ரணில் விக்ரமசிங்க இன்று முடிவெடுக்கும் நிலையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆட்சி பீடத்தில் இருக்கிறார். இப்போது அவரால் அந்த வயதுபோன தாய்மார்களின் ஒற்றை கேள்விக்கு பதிலளிக்கும் நிலையில் இருக்கிறார். ஆனால், ராஜபக்சக்களின் கட்சியை நம்பியிருக்கும் அவரால் அந்த பதிலை அளிக்க முடியுமா என்பதே கேள்வி. அவர் பதிலளிக்க வேண்டும் என்பதே அதற்கான பதிலாகவுள்ளது.

அந்த ஒரேயொரு பதில் அவரை தனித்துவமான மனிதராகவும் ஆக்கும் அல்லது பத்தோடு பதினொன்று என்ற கணக்கில் சேர்த்துவிடும். அவர் தனித்துவமாக மிளிரப் போகிறாரா அல்லது சிங்கள-பௌத்த பேரினவாத சித்தாங்களில் மூழ்கி மங்கப் போகிறாரா என்பதை உலகமே எதிர்பார்த்து காத்திருக்கிறது.

தாயின் சாபம் பொல்லாதது.

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI
PAWN BROKERS





25
வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# 'கூட்டமைப்பை உடைக்கிறார் ரணில்': சி.வி.கே குற்றச்சாட்டு

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பாணியில் கூட்டமைப்பை உடைக்கின்ற செயற்பாட்டில் முதலாவது தேங்காயை உடைத்திருக்கின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஸ்ட தலைவர் சி.வி. கே.சிவஞானம் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின்பத்தாவது தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே சீ.வீ.கே.சிவஞானம் இதனை தெரிவித்தார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு வாக்களித்ததாக ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தேகக் கண்ணுடன் ஒருவரை ஒருவர் பார்க்கின்ற விடயத்தை கெட்டித்தனமாக ரணில் விக்கிரமசிங்க செய்திருக்கின்றார்.

அந்தளவிற்கு தமிழ்க் கூட்டமைப்பு தலைவர்கள் சோரம் போகமாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கின்றது".

தமிழ் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரையில் மூன்று கட்சிகளும் எல்லோரையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். அதனுடைய ஒற்றுமை நீடிக்க வேண்டும். எல்லோரையும் அணைத்து செல்லக்கூடிய சுபாவம் கொண்ட சித்தார்த்தன் இந்த முயற்சியை தொடர்வார் என்று அவர் கூறினார்.

தன்னைப் பொறுத்தவரையில் தமிழரசு கட்சியின் உப கட்சியினுடைய நிகழ்வே இது என்று கூறிய அவர், அங்கு அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் தமிழரசுக் கட்சியில் இருந்து வந்தவர்களே என்பதை நினைவூட்டினார். தற்போது அது உடைந்து இருந்தாலும் கூட, அடிப்படையில் தமிழரசு என்ற ஒற்றுமை இருக்கின்றது.

"தேசிய அரசாங்கம் அமைக்கப்படலாம் என்று தற்போது பேசப்பட்டு வருகின்றது. ஆனால் தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் என நான் நம்பவில்லை" என்றார் சிவஞானம்.



விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக பலமாக இருந்த காலகட்டத்தில் அதை உடைக்கும் ஒரு நடவடிக்கையாக அந்த அமைப்பின் முக்கியத் தளபதிகளில் ஒருவரான விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற "கருணா"வை புலிகளிடமிருந்து பிரித்து அந்த அமைப்பை பலவீனப்படுத்தியவர் ரணில் விக்ரமசிங்க என்பது வரலாறு.

# "கூட்டமைப்பில் கறுப்பாடுகள்": செல்வம் அடைக்கலநாதன்

**- எமது யாழ்ப்பாணச் செய்தியாளர்**

தமிழ் தேசிய கூட்டமைப்பு பலமாக இருந்தது, தறபோதும் இருக்கின்றது - ஆனால் இரண்டு மூன்று கறுப்பாடுகளுடைய செயல்பாடுகளால் மக்களினுடைய மனதில் கூட்டமைப்பின் மீதான பற்றும் குறைந்து வருகின்றது. இதனை அனுமதிக்க முடியாது என்று ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூறுகிறார்.

போராட்ட இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளட்) 10வது தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே செல்வம் அடைக்கலநாதன் இதனை தெரிவித்தார்.

"விடுதலைப்புலிகள் உட்பட ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும், தனிக்கட்சிகளின் சிலரது எந்தவொரு நாட்டாமைத்தனத்திலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை".

**பதிவு அவசியம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட வேண்டும். இல்லையேல் தமிழ் மக்களை நாம் காப்பாற்ற முடியாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாவிட்டால் அது இல்லாமல் போகும் என்றும் அந்த கூட்டத்தில் உரையாற்றும் போது செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

"வெறும் உதட்டளவிலேயே தமிழ் மக்களின் விடுதலை தொடர்பில் தற்போது பேசப்படுகிறது. உளப்பூர்வமான விடுதலையை தொடர்பாக பேசவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட வேண்டும். மக்களை ஏமாற்றக் கூடாது. தமிழ் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும் அண்ணன் தம்பி என்று நாட்டாமைத்தனம் வேண்டாம். எங்கள் மக்கள் தற்போது இக்கட்டான சூழலில் இருக்கின்றார்கள்".

கூட்டமைப்பிற்குள் நிலவும் ஒற்றுமையின்மை மற்றும் குழப்பங்கள் தொடர்பிலும் ரெலோவின் தலைவர் விசனம் வெளியிட்டார்.

"அவன் பிழை இவன் பிழை என நாம் கூறுகின்றோம். மக்களின் கஷ்டங்களை போக்குகின்ற, இனத்தை விடுதலை செய்கின்ற விடயங்களில் நாங்கள் ஒற்றுமையாக இருக்கின்றோமா? ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே அனுபவம் மிக்க தலைவர்கள் இருக்கின்றார்கள். அவர்களது ஆலோசனைகளை பெறுவதற்கான வாய்ப்பை உண்டுபண்ண வேண்டும்" என்று கூறிய அடைக்கலநாதன், தற்போது வந்தவர்கள் தமிழரசு கட்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்கின்ற செயலை செய்கின்றனர். இதனை ஒருக்காலும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றும் சூளுரைத்தார்.

கடந்த காலத்தில் கூட்டமைப்பின் சாரில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்த நிலையில் அது இப்போது பாதிக்கும் குறைவாக அதாவது 10 ஆக மாறி உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

**ரணிலின் பிரித்தாளும் தந்திரம்**

ரணில் விக்ரமசிங்க பற்றி தமிழர்களுக்கு தெரியும் என்று கூறிய அவர், இராணுவ ரீதியாக பலமாக இருந்த விடுதலைப் புலிகளை அன்று உடைத்த ரணிலே இன்று ஜனாதிபதியாக இருக்கிறார் என்று தெரிவித்த அவர். "அவருடைய ராஜதந்திரத்தை பற்றி சொல்கின்ற போது நரித் தந்திரம் என்பார்கள். அந்த தந்திரமே விடுதலைப்புலிகளையும் பிரித்தாண்டது. அந்த தந்திரத்தையே நாங்கள் அண்மையில் பேசுகின்ற போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கையாண்டார்".



கூட்டமைப்பில் சிலர் தனக்கு வாக்களித்தார்கள் என ரணில் அவர்களுடனான ஒரு கூட்டத்தில் கூறியையும் செல்வம் அடைக்கநாதன் நினைவு கூர்ந்தார்.

"சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோர் அதனை எதிர்த்து கதைத்தார்கள். வெளியில் வந்த போது ரணில் இவ்வாறு கூறியதாக ஒரு செய்தி வெளியானது. ரணிலின் கருத்தை வலுப்படுத்துகின்ற வகையிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துகின்ற வகையிலும் ஒரு சிலரின் கருத்துக்கள் இருந்தது. அதனால் யாருக்கு வெற்றி என்று சொன்னால் அது ரணிலுக்கே வெற்றி".

அதேவேளை, நாகரீகம் கருதி தான் யாருடைய பெயரையும் குறிப்பிட விரும்பவில்லை என்று அவர் தெரிவித்தார். மாநாடு என்பதால் தான் பெயரைச் சொல்லி விரும்பவில்லை. ஜனாதிபதி சரியாக காயை நகர்த்தி இருக்கின்றார், அதனை மக்களிடையே தாங்கள் பிரச்சாரத்தை செய்து வருவதாகவும் கூறும் அவர் அதன் காரணமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருந்தது இப்போதும் இருக்கின்றது என்றார்.

"இரண்டு மூன்று கறுப்பாடுகளுடைய செயல்பாடுகளால் மக்களினுடைய மனதில் கூட்டமைப்பின் மீதான நம்பிக்கை குறைந்து வருகின்றது. இதனை அனுமதிக்க முடியாது".

தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைய வேண்டும். விடுதலைப்புலிகள் உட்பட ஆயுதப் போராட்ட இயக்கங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலே இணைந்து செயல்படுகின்ற சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார் செல்வர் அடைக்கலநாதன்.

ஒரு கோப்பை

கொஞ்சம் ☕ தேநீர் - 113

***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

விதைகளை வாங்கு;
விருட்சங்கள் சொந்தமாகும்!
விடியலை வாங்கு;
வானமே உன்னதாகும்!
கனவுகள் வாங்கு;
கவிதைகள் இன்பமாகும்!
அனுபவம் வாங்கு;
அற்புத ஞானமாகும்!

பார்வையை வாங்கு;
பயணவழி சொர்க்கமாகும்!
நேர்மையை வாங்கு;
நெஞ்சமே கோயிலாகும்!
வாய்மையை வாங்கு;
உன்வாக்கு வேதமாகும்!
தாய்மனம் வாங்கு;
உன்வாழ்வே தெய்வமாகும்!



# அரசியல் வேறு... அரசு வேறு... மத்திய அரசுடனான உறவில் சுமுக நிலைப்பாடு



'அரசியல்' செய்யும் அதிகாரிகள் களையெடுப்புமக்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் கிடைக்க மத்திய அரசுடன் பகை உணர்வான அணுகுமுறை வேண்டாம் என்ற நிலைப்பாட்டுடன் இருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், வேண்டாத செய்திகளை பரப்பும் அதிகாரிகளை களையெடுக்கவும் முடிவெடுத்துள்ளார்.நீட் விவகாரத்தில் தமிழகத்துக்கு சாதகமாக நடக்கவில்லை, ஜிஎஸ்டி இழப்பீட்டை நீட்டிக்கவில்லை என்பது உள்ளிட்ட பல்வேறு வருத்தங்கள் இருந்தாலும், மத்திய அரசுடன் சுமுகமான போக்கையே தமிழக அரசு விரும்புகிறது.

இதைப் பயன்படுத்தி தமிழகத்துக்கு பல்வேறு திட்டங்களையும், அதன்மூலம் போதிய நிதியையும் பெற முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு முயற்சிகள் செய்து வருகிறது.அதேநேரத்தில், ஒரு அரசியல் கட்சியாக கொள்கைரீதியில் பாஜகவை கடுமையாக எதிர்ப்பதில் மாற்றம் இல்லை என்பதிலும் திமுக உறுதியாக இருப்பதாகத் தெரிகிறது.இந்தச் சூழலில், 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை தொடங்கி வைக்க கடந்த ஜூலை 28ம் தேதி சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடி, முதல்வருடன் மிகவும் சுமுகமாக பேசிவிட்டு சென்றுள்ளார்.

முதல்வர் நேரில்சென்று அழைக்காவிட்டாலும், அவர் மருத்துவமனையில் இருந்து விடுத்த கோரிக்கையை ஏற்று நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர், மேடையில் சிரித்தபடி முதல்வருடன் அளவளாவியது திமுகவினரைக் கூட ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இதன்மூலம் முதல்வர் மீது தனிப்பட்ட முறையில் கோபமோ வருத்தமோ இல்லை என்பதை பிரதமர் தெளிவுபடுத்திவிட்டுச் சென்றுள்ளதாகவே பேசப்படுகிறது.எனவே, மாநிலத்தில் அண்ணாமலை போன்றவர்கள் ஆட்சிக்கும் திமுகவுக்கும் எதிராக கருத்து தெரிவிக்கும்போது, அவர்களுக்கு உரிய பதிலடியை கடுமையாக அளிக்கலாம். ஆனால், மாநிலத்தின் வளர்ச்சிக்காக மத்தியில் ஆளும் பாஜகவுடன் தேவையில்லாத பிரச்சினைகள் செய்யக்கூடாது என்று முதல்வர் நினைப்பதாகக் கூறப்படுகிறது.செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான விளம்பரங்களில் பிரதமர் படம் இடம் பெறாததற்கு யார் காரணம் என்பது விவாதப்பொருளாக மாறியது. இதுபற்றி மத்திய அரசு அதிகாரிகள் முன்கூட்டியே சுட்டிக்காட்டியபோதும், தொடர்புடைய மாநில அரசு அதிகாரிகள் அதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லையாம்.

பிரதமர் படத்தை வைத்தே ஆக வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகுதான், விளம்பரத்தில் மோடி படம் இடம் பெற்றது. அதன்பிறகுதான் இங்குள்ள அதிகாரிகள் சிலர் தனிப்பட்ட தங்கள் மோடி எதிர்ப்பு கொள்கையால் பிரதமர் படம் இடம்பெறாமல் தடுத்தது முதல்வருக்குத் தெரியவந்துள்ளது. தனிப்பட்ட முறையில் பாஜகவுக்கு எதிரான மனநிலையில் உள்ள அந்த அதிகாரிகள், தொடர்ந்து மத்திய அரசை சீண்டும் வகையிலும், மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே மோதல் ஏற்படுத்தும் விதத்திலும் செய்திகளையும், வதந்திகளையும் கிளப்பிவிட்டு வருகின்றனர் என்பதும் பலரால் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. இதையடுத்து, பாஜகவுக்கு எதிரான மனநிலை உள்ள அதிகாரிகளை கட்டம் கட்டும்பணி நடந்து வருகிறது. 'அரசியலை நான் பார்த்துக் கொள்கிறேன். மாநில வளர்ச்சிக்கான திட்டங்களை மட்டும் அதிகாரிகள் பார்த்துக் கொண்டால் போதும்' என்பதில் உறுதியாக உள்ள முதல்வர், அதை மீறி செயல்படும் அதிகாரிகளைக் கண்காணிக்கவும், களையெடுக்கவும் முடிவெடுத்துள்ளாராம்.

திமுக, கொள்கைரீதியாக தொடர்ந்து பாஜகவை எதிர்க்கும் கட்சியாகத்தான் இருக்கும். இதில் மாற்றுக்கருத்து இல்லை என்றாலும், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமான உறவில் அரசியலை புகுத்தக் கூடாது. இதனால், தமிழக மக்களுக்கு கிடைக்க வேண்டிய ஏராளமான திட்டங்கள் கிடைக்காமல்போக வாய்ப்புள்ளது. மக்களுக்கு நல்லது செய்வது மட்டுமே இந்த அரசின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று முதல்வர் நினைப்பதாகக் கூறப்படுகிறது. இதுதவிர, குறிப்பிட்ட சில அதிகாரிகள், பாஜக எதிர்ப்பு நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுடன் இணைந்து வேண்டாத செய்திகளையும், வதந்திகளையும் கிளப்பி, மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான உறவை சீர்குலைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதும் முதல்வர் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. முதல்வர் இந்த விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி, இதுபோன்றவர்களை விலக்கிவைத்து நடவடிக்கை எடுத்தால், அரசுக்கு அவ்வப்போது ஏற்படும் சங்கடங்களைத் தவிர்க்க முடியும் என்பதே நடுநிலையான உயர் அதிகாரிகளின் கருத்தாக உள்ளது.திமுக, கொள்கைரீதியாக தொடர்ந்து பாஜகவை எதிர்க்கும் கட்சியாகத்தான் இருக்கும். இதில் மாற்றுக்கருத்து இல்லை என்றாலும், மத்திய அரசுக்கும், மாநில அரசுக்குமான உறவில் அரசியலை புகுத்தக் கூடாது. இதனால், தமிழக மக்களுக்கு கிடைக்க வேண்டிய ஏராளமான திட்டங்கள் கிடைக்காமல் போக வாய்ப்புள்ளது என்பது முதல்வரின் எண்ணம்.

# பெரியபாளையம் கோயில் | காணிக்கையாக வந்த 91 கிலோ தங்க கட்டிகள் வங்கியில் முதலீடு பத்திரத்தை நிர்வாகிகளிடம் வழங்கினார் தமிழக முதல்வர்

பெரியபாளையம் பவானி அம்மன் கோயிலுக்கு பக்தர்களால் காணிக்கையாக செலுத்தப்பட்ட 91 கிலோ தங்கத்தை உருக்கி, தங்கக் கட்டிகளாக வங்கியில் முதலீடு செய்யப்பட்டது. இதற்கான தங்க முதலீட்டு பத்திரத்தை கோயில் நிர்வாகிகளிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:கடந்த 10 ஆண்டுகளாக கோயில்களில் காணிக்கையாக வந்த பலமாற்று தங்க நகைகள் உள்ளிட்டவற்றில், கோயிலுக்கு தேவைப்படுபவை தவிர, மற்றவற்றை மும்பையில் உள்ள மத்திய அரசுக்கு சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத் தங்கமாக மாற்றப்படும்.

கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் அந்த தங்கத்தை வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து பெறப்படும் வட்டி மூலம் கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளை கண்காணிக்க 3 மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு ஓய்வுபெற்ற நீதிபதிகள் தலைமையிலான குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட் டது.இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், சென்னை மண்டலத்துக்கு உச்ச நீதிமன்ற




ஓய்வுபெற்ற நீதிபதி துரைசாமி ராஜூ தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழு முன்னிலையில், பெரியபாளையம் பவானி அம்மன் கோயிலுக்கு பக்தர்களால் உண்டியல் மற்றும் காணிக்கையாக செலுத்தப்பட்ட பலமாற்று தங்க நகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

அரக்கு, அழுக்கு, போலி கற்கள் மற்றும் இதர உலோகங்கள் நீக்கப்பட்டு, 130 கிலோ 512 கிராம் எடையுள்ள தங்க இனங்கள் பிரிக்கப்பட்டன. இவை கோயில் பரம்பரை அறங்காவலர் தீர்மானம் அடிப்படையில், மும்பையில் உள்ள மத்திய அரசுக்கு சொந்தமான உருக்காலையில் உருக்கி தூய தங்கக் கட்டிகளாக மாற்றப்பட்டது. பாரத ஸ்டேட் வங்கியின் தங்கவைப்பு திட்டத்தின்கீழ் தங்கப் பத்திரமாக முதலீடு செய்யும் வகையில், 91 கிலோ 81 கிராம் எடையுள்ள தூய தங்கக் கட்டிகள் கோயில் நிர்வாகம் மூலம் பெரியபாளையம் பவானி அம்மன் கோயில் பெயரில் முதலீடு செய்யப்பட்டது. இந்த முதலீட்டுப் பத்திரத்தை சென்னை தலைமைச் செயலகத்தில் கோயில் நிர்வாகிகளிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார்.முதலீடு செய்யப்பட்ட தங்கத்தின் மதிப்பு ரூ.46.31 கோடியாகும்.

இதற்கான வட்டி வீதம் 2.25 சதவீதமாகும். இதன்மூலம் ஆண்டுக்கு கோயிலுக்கு வட்டித் தொகையாக ரூ.1.04 கோடி கிடைக்கும். இது கோயில் சார்ந்த திருப்பணிக்கு பயன்படுத்தப்படும்.இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலர் வெ.இறையன்பு, ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி துரைசாமி ராஜூ, அறநிலையத் துறை செயலர் பி.சந்திரமோகன், ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் முதல் முறையாக சர்வதேச பட்டம் விடும் விழா மாமல்லபுரத்தில் தொடக்கம்



செஸ் ஒலிம்பியாட் போட்டியைத் தொடர்ந்து, சர்வதேச பட்டம் விடும் திருவிழா, சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் முதல் 3 நாட்கள் நடக்கிறது.சர்வதேச பட்டம் விடும் திருவிழா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் இதுவரை நடைபெற்று வந்தது. தற்போது முதல்முறையாக தமிழகத்தில் நடைபெற இருக்கிறது. இது தொடர்பாக தமிழக சுற்றுலாத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் முதல்முறையாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் ஆகஸ்ட் 13ம் தேதி சர்வதேச பட்டம் விடும் திருவிழா தொடங்க உள்ளது. சுற்றுலாத் துறை மூலம் நடத்தப்படும் இந்த விழாவை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத் துறை அமைச்சர் மா.மதிவேந்தன் ஆகியோர் தொடங்கி வைக்கின்றனர். இந்த பட்டம் விடும் திருவிழா ஆகஸ்ட் 15ம் தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது. இதில் வெளிநாடுகளில் இருந்து 4 குழுக்கள், இந்தியாவில் இருந்து 6 குழுக்கள் என மொத்தம் 10 குழுக்கள் கலந்துகொள்கின்றன.

விழா மதியம் 12 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறும் இந்த விழாவில், பார்வையாளர்களுக்கென பிரத்யேகமாக மாலை 6 மணி முதல் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. பட்டம் விடும் திருவிழாவுக்கான ஏற்பாடுகளை சுற்றுலாத் துறை இயக்குநர் சந்திப் நந்தூரி நேற்று பார்வையிட்டார். பட்டம் பறக்கவிடப்பட உள்ள பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகளை அவர் ஆய்வு செய்தார். இந்த விழாவில், சிறுவர்களை இலவசமாக அனுமதிக்கவும் பெரியவர்களுக்கு ரூ.150 கட்டணம் வசூலிக்கவும் சுற்றுலாத் துறை முடிவு செய்துள்ளது



# மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கு ஒன்ராறியோ அரசு திட்டமொன்றை வகுத்துள்ளது.

- விளையாட்டுகள், கழகங்கள் மற்றும் வெளிக்களப் பயணங்கள் ஆகியவற்றுடன் மாணவர்களுக்கான வகுப்பறைக் கற்றலை மீண்டும் ஆரம்பித்தல்.
- மாணவர்கள்  கற்பதில் ஏற்பட்டுள்ள இடைவெளியினை நிரவுவதற்கு உறுதுணையாக புதிய கற்பித்தல் வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
- எதிர்கால வேலைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தல்.
- பள்ளிகளைக் கட்டுவதற்கும் கல்வியை மேம்படுத்துவதற்கும் மேலதிக பணத்தை ஒதுக்குதல்.
- மாணவர்களின் உளநலனுக்கு உறுதுணையா னசெயற்பாடுகளை விரிவுபடுத்தல்.

**Ontario.ca/CatchUp எனும் தளத்தில் எமது திட்டத்தினைப் பார்வையிடலாம்.**

இது ஒன்ராறியோ அரசாங்கத்தினால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1010



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் திருகோணமலை

போர் தர்மத்தை உரைத்த கிருஷ்ணபரமாத்மாவின் ஆலயம் இலங்கையில் அமைந்தால் அட்டூழியங்கள் நிறுத்தப்பட்டு, போர்தர்மமாவது கடைப்பிடிக்கப்படும் என்பதில் பலரும் நம்பிக்கை கொண்டவர்களாக விளங்குவது, எதிர்காலத்தில் அரங்கநாதர் ஆலயம் இலங்கையில் அமைவதற்குரிய நல்ல அறிகுறியாகவே தோன்றுகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இவ்வாறான ஒரு தீர்வைக் கூறப்பட்டிருக்கின்றது. ஜதீகம் என்ற தளத்தில் மக்கள் கொண்ட நம்பிக்கையே மேற்கூறிய விடயங்களின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றது.

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்" என்ற ஆழ்ந்த தத்துவத்தை உணர்ந்தால், ஒருவர்க்கொருவர் அன்புசெலுத்தி, வாழமுடியும். இதுவே சமயங்களின் முடிபாகவும் காணப்படுகின்றது.

திருகோணமலையிலே காணப்படுகின்ற ஸ்ரீகிருஷ்ணன் கோவில், வடஇந்திய போர்வீரர்களின் தேவைகருதி அமைக்கப்பட்டது. இக்கோவில் அமைப்பதற்கு திருவிளங்க நகரத்தாரும், ஆரியநாட்டவரும் பெரிதும் துணைபுரிந்துள்ளனர். தமது பணிமுடிந்து வடஇந்தியப்படைவீரர்கள் இந்தியாவிற்கு மீண்டும் செல்லநேரிட்டது. இவ்வேளையில் ஆலயம் அமைக்க உதவிய ஆரியநாட்டவரிடமும், திருவிளங்க நகரத்தாரிடமும் ஆலயப்பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டுச் சென்று விட்டனர்.

இதன்பின்னர் இவ்வாலயத்திலே பூசை செய்துகொண்டிருந்த திரு. இரகுநாதஐயர் என்பவருடன் சேர்ந்து திருவிளங்க நகரத்தாரும், ஆரியநாட்டவரும் 1837 ஆம் ஆண்டு, ஒரு ஒப்பந்தம் செய்தனர். இதற்கமைய மேலதிக அதிகாரங்களைப்பெற்ற இரகுநாதையர், பூசைப்பொறுப்பை ஏற்று ஆலயத்தை நடத்தி வந்தார். புராதன தமிழ் மக்கள் தேடிவைத்த ஆத்மீகச் செல்வங்களாக சைவமும், வைணவமும் விளங்குகின்றன. சைவர்கள் சிவத்தையும், வைணவர்கள் விஷ்ணுவையும் வழிபடுவது சமய உலகின் சமரச வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றது. சைவமும் தமிழும் தழைத்தோங்கும் திருகோணமலைப்பிரதேசத்தில், சிவாலங்களைப்போன்று ஏனைய ஆலயங்களும் போற்றப்படுகின்றன.

திருவிளங்கநகரத்தார், ஆரியநாட்டவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, திருகோணமலையிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் பூசை வழிபாடுகளைப் பொறுப்பேற்று நடத்திவந்த இரகுநாதையருக்குப் பின், ஸ்ரீ முத்துக்குமாரசாமிக்குருக்களும், அவரின்பின் ஸ்ரீ சுப்பையாக்குருக்களும், பூசை செய்து வந்தார்கள். இவர்களின்பின் ஸ்ரீ பஞ்சநதக் குருக்கள் இவ்வாலயத்தில் பூசை செய்யும் பொறுப்பை ஏற்றார். இவர் இரகுநாதஐயருடைய மகள் சர்மசம்வர்தனி அம்மாளைத் திருமணம் செய்து கொண்டவர். திருமணவழியிலுள்ள உரிமையினால் இவர் ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலில் பூசைசெய்யத் தகுதி பெற்றார். ஸ்ரீ பஞ்சநதக்குருக்களின் பின், இவருடைய மகனான யோகீஸ்வரக் குருக்கள் ஆலயப்பொறுப்பையேற்று மிகத் திறம்பட நடத்தியுள்ளார். மிகக் கற்றறிந்தவராக விளங்கிய இவர் காலத்தில் ஆலயம் மிகச் சிறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. இவரது மறைவிற்குப்பின் இவருடைய மகள், ஆலய நிர்வாகப் பொறுப்பையேற்று நடத்தியுள்ளார்.

ஆதியில் சிறு கோவிலாக, குறிப்பிட்ட சாரார் வணங்குவதற்காக மட்டுமே அமைக்கப்பட்ட ஆலயத்தின் திருப்பணி வேலைகள், காலத்திற்குக் காலம் நடைபெற்று வந்துள்ளது. ஆரியநாட்டாரும், திருவிளங்க நகரத்தாரும், இவ்வாலயத்திலே பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். இவர்கள் மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்தமண்டபம், என்பனவற்றைக் கட்டியுள்ளார்கள்.

1941 ஆம் ஆண்டு ஆலயத்திலே பல திருப்பணி வேலைகள் நடைபெற்று, குடமுழுக்கு விழா சிறப்பாக நடந்தேறியது. ஆயினும் 1942 ஆம் ஆண்டு இடம்பெற்ற யப்பானியரின் குண்டுவிச்சினால் ஆலயப் பராமரிப்பு சீர்குலைந்து காணப்பட்டது. இரண்டாவது உலகயுத்தம் காரணமாக, திருகோணமலைப்பிரதேசத்திலுள்ள ஆலயங்கள் பல பராமரிப்பாரின்றிக் காணப்பட்டது. அவ்வாறான ஒரு நிலை, ஸ்ரீகிருஷ்ணன் கோவிலுக்கும் ஏற்பட்டது. ஆயினும் பதட்டமான சூழ்நிலையிலும் நித்தியபூசைகள் இவ்வாலயத்திலே நடந்துள்ளன. பல தசாப்தங்களின் பின்னர் 1980 ஆண்டு காலப்பகுதியிலும், அதன் பின்னரும் ஆலயத்திலே பல திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்ரீகிருஷ்ணன் ஆலயத்தின் கருவறை மிக அழகிய விமானத்தோடு காணப்படுகின்றது. கருவறையிலே ருக்மணி, சத்தியபாமா சமேதரராக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா எழுந்தருளியுள்ளார். அர்த்தமண்டபத்தில், ருக்மணி, சத்தியபாமா சமேதரராக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் எழுந்தருளி விக்கிரகமும், வரதராஜப்பெருமாள், நாகதம்பிரான் ஆகியோருடைய சிலா விக்கிரகமும் வைக்கப்பட்டுள்ளது. ஸ்நபன மண்டபத்தில் ஸ்ரீ நாராயணமூர்த்தியும், ஸ்தம்ப மண்டபத்தில் கருடாழ்வாரும், ஸ்ரீ ராமானுஜரும் நிறுவப்பட்டுள்ளனர்.

*வளரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இரணிலின் தலைவிதி

**– விக்டர் ஐவன்**

இந்த நிலைக்கு கோட்டாபயவின் பலவீனமான நிர்வாகப் பாணி இட்டுச் சென்றது. இரணில் விக்கிரமசிங்க, சனாதிபதி யாகப் பதவியேற்ற முதல் 48 மணித்தியாலங்களில் பாதுகாப்புப் படைகளைத் திரட்டி, அரகலயா மக்கள் தற்காலிகமாகப் பறித்துச் சென்ற அரசின் சில பகுதிகளின் அரசாங்கக் கட்டுப்பாட்டை மீட்டெடுத்தார் என்பதும், குழப்பமான சூழ்நிலையை ஒழிக்க முடிந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. மாநில நிர்வாகத்தின் சில பகுதிகளில் கணிசமான அளவில் நிலவிய சூழல். புதிய சனாதிபதி யின் கொள்கையானது, விதியின் கேலிக்கூத்துப் போல, அரகலய செயற்பாட்டாளர்களின் கோபத்தை அதிகரிக்கவும் தீவிரப்படுத்தவும் வழிவகுத்துள்ள போதிலும், விக்கிரமசிங்க இப்போது வரலாற்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபராக - பொதுமக்களால் அல்ல - காணப்படுகிறார்.



போராட்டக்காரர்களின் முக்கிய வேட்கையாயாகக் கருதக்கூடிய "அமைப்பில் ஆழமான மாற்றத்திற்கான" ஒரு நிகழ்ச்சி நிரலை அவர் உருவாக்க வேண்டும். அரச கட்டமைப்பில் சீர்திருத்தங்களை கொண்டு வருவதற்கு அரசின் கதவுகளைத் திறக்கும் பாத்திரத்தை விக்கிரமசிங்க வகிக்கிறார்.

## அமைப்பின் சீரழிவு

2010 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர், அமைப்பில் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை ஒரு கட்டமைப்பு சீர்திருத்த வேலைத்திட்டத்தை நோக்கிச் செல்ல வேண்டும், இல்லாவிட்டால், நாடு தவிர்க்க முடியாத பெரும் அழிவுக்குள் தள்ளப்படும் என்பதை நான் வலியுறுத்தி வந்திருகிறேன்.

இரண்டு பயங்கரமான மற்றும் மிகப்பெரிய கிளர்ச்சிகளை அரசு ஒடுக்க முடிந்த போதிலும், நாடு நல்ல வடிவில் இருக்கவில்லை. ஆனால் அந்தக் கிளர்ச்சிகளால் ஏற்பட்ட கடுமையான வடுக்கள் மற்றும் சேதங்கள் காரணமாக நாடு பலவீனமான நிலையில் இருந்தது. சிங்கள மற்றும் தமிழ் கிளர்ச்சியாளர்களாலும், கலவரத்தை அடக்கிய பாதுகாப்புப் படையினராலும் பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டது. மேலும், மக்கள் துன்புறுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டனர். கிளர்ச்சியாளர்களாலும் பாதுகாப்புப் படைகளாலும் போட்டி போட்டுக் கொண்டு சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமையால் சமூக ஆன்மா சிதைந்து நோய்வாய்ப்பட்டது.

அரசு நிர்வாகத்தின் மூன்று முக்கிய தூண்களான அமைச்சரவை (நிறைவேற்று), சட்டமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையே பேணப்பட வேண்டிய சமநிலைகள் முற்றாக உடைந்துவிட்டது. சட்டத்தின் ஆட்சிக்கு மேலாக சனாதிபதி வைக்கப்பட்டார். ஊழல் தலைவரைக் கொண்ட அரசியல் முறையின் பரவலான காரணத்தால் முற்றிலும் உடைந்துவிட்டது. ஊழல் என்பது ஒரு வீரியம் மிக்க புற்றுநோயாக மாறியது. அது முழு நிறுவன அமைப்பையும் கட்டுப்பாட்டின்றி மூழ்கடித்துவிட்டது. சமூக அமைப்பில் இருக்க வேண்டிய நல்லிணக்கமும் ஒருங்கிணைவும் முற்றாகத் தகர்ந்துவிட்டது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளின் செயல்பாடு ஒரு ஒழுங்கற்ற மற்றும் நெறியற்ற தன்மையைப் பெற்றிருந்தது.

இந்தச் சூழலில், ஆழ்ந்த சீர்திருத்தத் திட்டத்தை நோக்கிச் செல்லாவிட்டால், ஒட்டுமொத்த அமைப்பும் சிதைந்து. நாடு குழப்ப நிலைக்குத் தள்ளப்படும் என்பது எனது அவதானமாக இருந்தது. உள்நாட்டுப் போரின் முடிவில் நான் சனாதிபதி மஹிந்த இராசபக்சவிடம் நிலைமையை விளக்க முயற்சித்தேன். ஆனால் போரின் அமோக வெற்றியால் கண்கடை தெரியாமல் இருந்ததால், நிலைமையின் யதார்த்தத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நல்லாட்சி (யஹபாலன) அரசாங்கத்தின் கீழ் தொடக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சீர்திருத்த வேலைத்திட்டத்தை நாடு எதிர்நோக்கும் நெருக்கடியின் அளவுடன் ஒப்பிடுகையில் பொருத்தமான சீர்திருத்த வேலைத்திட்டமாக விவரிக்க முடியாது. மாத்தறையில் நடைபெற்ற மங்கள சமரவீர அவர்களின் வாழ்க்கை வரலாறு நூல்வெளியீட்டு விழாவில் இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து நான் ஆற்றிய உரை மற்றும் அதற்கு அவர் நேர்மையாக பதிலளித்ததன் விளைவாக எனக்கும் மங்கள சமரவீரவுக்கும் இடையில் நெருங்கிய அரசியல் நட்பு உருவானது. தேவையான சீர்திருத்தங்கள் புறக்கணிக்கப்பட்டதால் நாடு எதிர்கொள்ளும் நெருக்கடி வெடிக்கும் புள்ளியாக வளர்ச்சியடைந்துள்ளது என்பதை நான் அந்த விரிவுரையில் சுட்டிக்காட்டினேன். தேர்தலுக்குப் பிறகு வெடிக்கும் சூழ்நிலை உருவாகலாம் என்றும், அதன் விளைவாக, நாடு திவாலான நிலைக்குத் தள்ளப்படும் என்றும், இறுதியாக, அது குழப்ப நிலைக்கு தள்ளப்படும் என்றும் நான் வலியுறுத்தினேன்.

அந்த நேரத்தில், மங்கள நாட்டின் நிதி அமைச்சராக இருந்தார் நன்றியுரையை வழங்கிய அவர், எனது பகுப்பாய்வின் செல்லுபடியை வழிமொழிந்தது மட்டுமல்லாமல், நெருக்கடிக்கு தெரிந்தோ தெரியாமலோ பங்களித்ததற்காக பகிரங்கமாகத் தனது வருத்தத்தையும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பின் விளைவாக, இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியை சமாளிக்க வழிவகுக்கும் சீர்திருத்த வேலைத்திட்டம் தொடர்பான தொடர் கலந்துரையாடல்களை நானும் மங்களாவும் தொடங்கினோம்.

மங்கள ஏற்பாடு செய்த இரண்டு கலந்துரையாடல்களில் இரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார். பழைய மூத்த அரசியல்வாதிகளாக இருந்தாலும், இரணில் மற்றும் மங்கள இருவரும் புதியவகை அரசியல்வாதிகளாக இருந்தாலும், அவர்கள் நவீன



Ranil Wickremesinghe



Gotabaya Rajapaksa



Mangala Samaraweera

சிந்தனைகளை வெளிப்படுத்தியவர்கள். மாறிவரும் உலகளாவிய போக்குகளை நன்கு புரிந்துகொண்டு, மாற்றத்தை அல்லது புதிய யோசனைகளை ஏற்கத் தயாராக இருந்தனர். அரசு மற்றும் அரசியல் அமைப்பின் சரிவு மற்றும் நாட்டின் நிறுவன அமைப்பு முழுவதிலும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான ஊழல் பற்றி நாங்கள் நடத்திய விவாதங்கள் உண்மையான மற்றும் நம்பிக்கையான கருத்துப் பரிமாற்றமாகக் கருதப்படலாம்.

இந்த இரு பழைய தலைவர்களைப் பற்றி நான் அப்போது கொண்டிருந்த கருத்தும், இந்த விடயத்தில் ஆர்வமுள்ள பலருடன் நான் பகிர்ந்து கொண்ட நம்பிக்கையும் யார் ஆட்சிக்கு வந்தாலும், அமைப்பில் ஒரு ஆழமான மாற்றத்திற்கான சீர்திருத்தத் திட்டத்திற்கான கதவுகளைத் திறப்பதற்கு முன்னோடியாக செயல்பட அவர்களை வற்புறுத்த முடியும்.



## கோட்டாபய மற்றும் இரணில்

இளைஞர்களின் அரகலய தீவிரமடைந்திருந்த நேரத்தில், நான் வகுத்த சீர்திருத்த வேலைத்திட்டத்தின் வரைவோடு சனாதிபதி கோட்டாபயவைச் சந்தித்தேன். அமைப்பில் ஒரு ஆழமான மாற்றத்திற்கு வழிவகுக்கும் ஒரு சீர்திருத்தத் திட்டத்தை நோக்கி நாட்டை வழிநடத்த முடிந்தால், சமூக - அரசியல் நெருக்கடியையும் தீர்க்க முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை மற்றும் நாட்டின் பயணம் ஒரு நம்பிக்கைக்குரிய பாதையில் வழிநடத்தப்படலாம் என்பதால் இதைச் செய்தேன். அதே நேரத்தில் ஒரு ஆழமான மற்றும் தெளிவான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனவும் நினைத்தேன்.

இதுபற்றி ஏற்கனவே போதுமான அளவு எழுதியிருப்பதால், இந்த நிலையில் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். எனது முழு முன்மொழிவுக்கும் சனாதிபதி ஒப்புதல் தெரிவித்தது எனக்கு வியப்பாக இருந்தது. இந்த முன்மொழிவின் கடைசிப் பொருளான (வைநஅ) ஐநா ஒரு பார்வையாளராக இந்தப் பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்ற யோசனையை சனாதிபதி ஏற்றுக்கொண்டது என்னை மேலும் வியப்புக்குள் ஆழ்த்தியது என்றே கூற வேண்டும். இரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றதன் பின்னர் சனாதிபதி கோட்டாபய இரணில் விக்ரமசிங்கவுடன் எனது வேலைத்திட்டம் பற்றிக் கலந்துரையாடினார். மேலும் பிரதமரும் என்னுடன் விவாதித்தார். முன்மொழியப்பட்ட சீர்திருத்த திட்டம் குறித்த எனது யோசனைகளை பிரதமர் ஏற்கனவே அறிந்திருந்தார். மேலும் தற்போதுள்ள அமைப்பில் நேர்மறையான மற்றும் ஆழமான மாற்றம் அவசியம் என்று அவரும் கருத்துத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், பிரதமர் இரணில், கலாநிதி அருண குலதுங்க மற்றும் பேராசிரியர் ஆர்.யு. மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் ஹல்வத்துர, என்னுடனும் பிரதமருடனும் ஒருங்கிணைத்து அதன் முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்ல நியமித்தார். எனது முன்மொழிவு தொடர்பில் பிரதமர் அவர்களிடம் நடத்திய கலந்துரையாடலின் போது, நான் சமர்ப்பித்துள்ள சீர்திருத்த வேலைத்திட்டம் தொடர்பான ஆவணம் சிறியதாக இருந்தாலும், அதன் உள்ளடக்கம் மகாவலியை விட மிகப் பெரியது என அவர் கருத்துத் தெரிவித்ததாக அருண குலதுங்கவிடமிருந்து அறிந்துகொண்டேன். எனினும், அந்தத் தருணத்தில் நாட்டில் நிலவிய கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலையினால் அந்த ஆலோசனைகள் வெறுமையான விண்வெளியில் மிதக்கின்றன.

இரணில் விக்கிரமசிங்க சனாதிபதி யாக பதவியேற்றதும் யூலை 20 ஆம் திகதி என்னை அழைத்து, மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக யூலை 22 ஆம் திகதி சனாதிபதி செயலகத்திற்கு வருமாறு அறிவித்தார். நான் அழைப்பை ஏற்றுக்கொண்டேன், ஆனால் சனாதிபதி தனது புதிய பதவியில், முழு அதிகாரம் பெற்ற இடத்தில், முன்மொழியப்பட்ட சீர்திருத்தத் திட்டத்தைப் பற்றி எப்படிச் சிந்திப்பார் என்று பயந்தேன். ஆனால் அவருடனான உரையாடலின் போது, சீர்திருத்தங்கள் மீதான அவரது உறுதிப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்பதை நான் விரைவில் உணர்ந்து கொண்டேன்.

நாட்டின் நலனுக்காக தேவையான அனைத்து அடிப்படை சீர்திருத்தங்களும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என சனாதிபதி கருதினார். இனம், சாதி, மதம், பாலினம் மற்றும் கலாச்சாரத்தின் பலதரப்பட்ட அம்சங்களின் தாக்கங்கள் மற்றும் அவை எப்படி இளைஞர்களின் போராட்டத்தின் முக்கியமான சிக்கலாக பற்றியும் பேசினோம்.

நிலப்பிரபுத்துவ சாதியமைப்பை ஒழித்து, இனம், மதம், பாலினம் மற்றும் பல்வேறு கலாச்சாரங்களின் அனைத்து சமூகக் குழுக்களுக்கும் சமமான மனித கண்ணியம் மற்றும் சம உரிமைகளை ஊக்குவித்து உறுதிப்படுத்தும் புதிய அணுகுமுறையுடன் இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம் குறித்தும் பேசினோம். மற்றும் சீர்திருத்தத் திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற்ற வேண்டியது அவசியம். சமன் அடாவுடஹெட்டி முதலில் கலந்துரையாடலில் பங்குபற்றிய மூன்றாம் தரப்பு.

பின்னர் சனாதிபதி யின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அனைத்துலக ஊடகத்துறை சனாதிபதி யின் மூத்த ஆலோசகர் ேனுகா செனிவிரத்ன ஆகியோரை அழைத்த சனாதிபதி , உத்தேச சீர்திருத்த வேலைத்திட்டத்தில் அவதானமாக செயற்படுமாறு ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்புமாறு பணித்தார். மிகவும் சக்திவாய்ந்த சர்வதேச பார்வையாளரை ஈடுபடுத்துவதன் மூலம் அமைப்பில் ஆழமான மற்றும் நேர்மறையான மாற்றத்திற்கு வழிவகுக்கும் பாரிய சீர்திருத்த வேலைத்திட்டத்திற்கான கதவுகளைத் திறப்பதற்கு சனாதிபதி வெளிப்படுத்திய உறுதிப்பாடு என்னை ஆச்சரியப்படுத்தியது என்று சொல்ல வேண்டும்.

## விதியின் சக்திவாய்ந்த அதிசயம்

உண்மையில் 1999 இறுதியில் நடைபெற்ற சனாதிபதி த் தேர்தலில் இரணில் சனாதிபதி யாகியிருக்க வேண்டும். ஆனால் நகரமண்டப குண்டு வெடிப்பினால் அவரது வெற்றி தடுக்கப்பட்டது. மேலும், 2005 சனாதிபதி த் தேர்தலில் இரணில் வெற்றிபெற அதிக வாய்ப்புகள் இருந்த போதிலும், சனாதிபதி த் தேர்தலைப் புறக்கணிக்குமாறு வடக்கு, கிழக்கு தமிழ் வாக்காளர்களை நிர்ப்பந்திக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் முடிவால் அவர் அந்த வாய்ப்பை இழந்தார். மீண்டும், 2015 ஆம் ஆண்டு சனாதிபதி த் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்தார், தற்போதைய சனாதிபதி மகிந்த இராசபக்சவை தோற்கடிக்கப் பொது வேட்பாளர் தேவை என்று எதிர்க்கட்சிகளின் கூட்டணியால் முன்வைக்கப்பட்ட ஆலோசனை காரணமாகும். அதன் பின்னர், 2020 நாடாளுமன்றத் தேர்தலுடன் இணைந்த காலகட்டம், அரசியல் ரீதியாக இரணில் விக்கிரமசிங்க அனுபவிக்க வேண்டிய மிக மோசமான காலகட்டமாகக் கருதப்படலாம். பாராளுமன்றத் தேர்தலில் ஐதேக யால் ஒரு இருக்கையைக் கூட பெற முடியவில்லை. அந்தளவுக்கு இரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நா.உறுப்பினராகவே நாடாளுமன்றம் நுழைந்தார். அதன் பிறகுதான் வியக்கத்தக்க மற்றும் திகிலூட்டும் சம்பவங்கள் நடந்தன.

இரணில் பிரதமரானது, அவரது தனிப்பட்ட இல்லம் மற்றும் நூலகம் எரிப்பு, கோட்டாபயவைத் தொடர்ந்து அவர் தற்காலிக சனாதிபதி யாக நியமிக்கப்பட்டார். தற்போதைய சனாதிபதி நாட்டை விட்டு வெளியேறி, பின்னர் நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை வாக்குகளால் சனாதிபதி யாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அனைத்து முன்னேற்றங்களையும் அரகலயா, இளைஞர் போராட்டத்தின் எதிர்பாராத பக்க விளைவுகள் எனக் கருத்தில் கொள்ளலாம்.

இலங்கையின் அரசியல் படைவீரர்களில், இரணில் அறிவார்ந்த நேர்த்தியும், அரசாட்சியில் திறமை உள்ளவராகத் திகழ்ந்தார். கோட்டாபயவை செயற்கையாக ஊதிப்பெருக்கிக் கொண்ட ஒரு பாத்திரமாகவும், இரணில் தன் குணாதிசயத்தை ஊடகங்களால் திட்டமிட்டு அழிக்கப்பட்டவராகவும் கருதலாம். எவ்வாறாயினும், இலங்கையை ஏற்றுமதி - இறக்குமதி நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு அவர் திறமையானவராக இருந்தால், அதே நேரத்தில் ஊழல், திறமையற்ற மற்றும் அநீதியான தற்போதைய அமைப்பில் நேர்மறையான மற்றும் ஆழமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்ற சீர்திருத்த வேலைத்திட்டத்தை பின்பற்றுவதற்கு நாட்டை வழிநடத்துகிறார். இதன் மூலம் ஒரு உண்மையான மாற்றத்தை முன்னறிவிப்பதன் மூலம், இலங்கையைக் காப்பாற்றிய மாவீரன் என்ற பெயர் நிச்சயமாக வரலாற்றில் இடம்பெறும்.

(இது **DailyFT** இணையதளத்தில் ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரை. விக்டர் ஐவன் இலங்கைப் பத்திரிகையாளர். அவர் தனது இளமைப் பருவத்தில் மார்க்சிஸ்ட் கிளர்ச்சியாளராக இருந்தார், பின்னர் சர்ச்சைக்குரிய சிங்கள ஏடான ராவயவின் ஆசிரியரானார். விக்டர் ஒரு புலனாய்வு ஊடகவியலாளர், அரசியல் விமர்சகர், கோட்பாட்டாளர், சமூக ஆர்வலர் மற்றும் பல நூல்களை எழுதியவர். 1971 இளைஞர் கிளர்ச்சி தொடர்பான முக்கிய நீதிமன்றத்தில் 7 ஆவது குற்றவாளியாக இருந்தார். ***தமிழாக்கம் கனடா நக்கீரன்***)

# ஜீவன் முக்தி 589

*(சென்ற வார தொடர்ச்சி...)*

இரண்டு வார்த்தையையும் புரிந்துகொள்ளுங்கள். அசையாத பொருட்களை உங்களின் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொண்டு வருவதைச் "சேர்த்து வைத்தல்" என்கிறோம். அதுதான் வேலியை அகலமாக்க முயற்சி செய்வது.

அதுவே அசைகிற பொருட்களை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொண்டு வருவதை "உறவுகள்" என்கிறோம். அவ்வளவுதான்.

அசையும் சொத்து அசையாத சொத்தான உங்களின் வாழ்க்கையை உங்களின்கட்டுப் பாட்டில் எடுத்துக்கொண்டு வருவதுதான் மொத்த விளையாட்டும். அந்த விளையாட்டையே விளையாடிக் கொண்டிருப்போம். திடீரென்று பார்த்தால் உங்களையே ஒருநாள் அசைத்து தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்.

மரணம் இன்னொரு இடத்தில் உங்களைப் பிறக்க வைத்துவிடும் உடனே என்ன செய்வீர்கள்? இன்னொருவரை "அப்பா" என்றும் "அம்மா" என்றும் பிடித்துக்கொண்டு விளையாடத் துவங்குவீர்கள். "அண்ணன்" என்று பிடித்துக்கொண்டும் "தம்பி" என்றுபிடித்துக்கொண்டும் அதே விளையாட்டை ஆரம்பிப்பீர்கள்.

"இதுதான் என்னுடைய சொத்து. இதுதான் என்னுடையது என்ற அதே விளையாட்டை ஆரம்பிப்போம் திரும்பவும் திரும்பவும் அதே விளையாட்டை சிறிது நாள் விளையாடுவோம். மரணம் வரும். மீண்டும் மீண்டும் அதே விளையாட்டைவிளையாடுவது...

இந்த விளையாட்டில் ஒருநாள்...நம்மையே அசையாச் சொத்தாக வைத்துக்கொண்டு இருக்கிற யாரோ ஒருவர் என்ன செய்கிறார்?

நம்மையே அசைத்து எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்.

அதன்பிறகு உடனே திரும்பவும் இதே விளையாட்டை மீண்டும் மீண்டும் இதே விளையாட்டை நடத்திக்கொண்டே இருப்போம்.

நம் மொத்த வாழ்க்கையுமே இந்த விளையாட்டுதான். இந்த மரப்பாச்சி பொம்மை விளையாட்டுதான். வேறு ஒன்றும் கிடையாது.

அந்த விளையாட்டில் சிக்காத உறவு குரு-சிஷ்ய உறவு. இது உறவுகளிலேயே மிக உயர்ந்த உறவு மிக உச்: நிலையான உறவு.

இதற்கு மேல் உங்களுடைய Psycho drama. நடக்காது நீங்கள் நடத்திக்கொண்டு இருக்கிற நாடகங்களை முடிக்கிற கடைசி காட்சிதான் குரு-சிஷ்ய உறவு.

நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள் பல்வேறு விதமான நாடகக்காட்சிகளை நடத்தி நடத்தி நடத்திச் சலிப்படைந்து ஒருநாள் சோர்வாகி "என்னடா இதே மாதிரி இந்த நாடகங்களையே திரும்பத் திரும்ப நடத்திக்கொண்டே இருக்கிறோமே" என்று சோர்வாகி விடும்.

அப்போது உங்களின் வாழ்க்கையில் வருகிற குரு-சிஷ்ய உறவில் இதற்கு மேல் நாடகம் தொடர்ந்து நடக்க முடியாது என்று முடிவுக்கு வருவீர்கள். எப்போது நாடகம் போதுமென்று நினைக்கிறீர்களோ அப்போதுதான் நீங்கள் அந்தக் குரு-சிஷ்ய உறவிற்குத் தயாராகிறீர்கள்.

### அதிர்ஷ்டசாலியின் ரகசியம்

- **காதலர்கள்?**
  அதிர்ஷ்டசாலிகள் என்று நம்பிக்கொண்டிருக்கும் துர்-அதிர்ஷ்டசாலிகள்.
- **இன்றைய தம்பதியர்?**
  துர்-அதிர்ஷ்டசாலிகள் என நம்பிக்கொண்டிருக்கும் அதிர்ஷ்டசாலிகள்.
- **யார் நிஜமான அதிர்ஷ்டசாலிகள்?**
  எங்கிருந்தாலும், ஏங்காமல் இனிமையாய் இருக்க தெரிந்தவர்களே அந்த அதிர்ஷ்டசாலிகள்.

## அன்பைக் கண்டால் பயமா? ஆனந்த அலைக்கு அணை கட்டாதீர்

உணர்வின் ஆழமான அனுபவங்களைத் தருவதற்கு வரும் ஒரு வாய்ப்பைக்கூட நழுவ விடாதீர்கள்.

உணர்வின் ஆழமான அனுபவங்கள் உள்ளே மலர்வதற்கான ஒரு வாய்ப்பைக்கூட நழுவ விடாமல் வாழ்க்கையை வாழ்ந்தீர்கள் என்றால் வாழ்க்கையைவாழ்ந்து முடிக்கும்போது மிகப்பெரிய திருப்தியோடு மரணத்திற்குள் நுழைவீர்கள்.

நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். ஏன் நாம் அந்த உணர்வின் மிகப் பெரிய தாக்கங்கள் நமக்குள் நடக்க அனுமதிக்காமல் இருக்கிறோம் என்றால் பயத்தினால்தான்! காரணம். நாம் நம்முடைய பொருட்களை நம்மிடம் இருந்து விட்டு விடுவோமென்று பயப்படுகிறோம். ஒன்று நாம் யாரை ஆழ்ந்து நேசிக்கிறோமோ அவருக்குக் கொடுத்து விடுவோமோ? இல்லை. அந்த நேசத்தினாலே. இதெல்லாம் பராமரிக்கப்படாவிட்டால் தானாகவே காணாமல் போய்விடுவோமோ என்று பயப்படுகிறோம்! அந்த மிகப்பெரிய ஆன்மப் புரட்சி ஆன்ம எழுச்சி அன்பின் எழுச்சி நமக்குள்ளே நடக்கும்போது அதைக்கண்டு பயந்து நடுநடுங்கி ஒடுங்கிக்கொள்கிறோம்.

## அன்பின் உச்சம் கண்டு பயப்படக்கூடாது

நம் NSP-யின் ஒரு அன்பர் கலந்து கொண்டார். கலந்து கொண்ட பிறகு ஸ்ரமத்திற்கே வருவதில்லை. நம் செக்ரட்டரி ஒரு நாள் ஃபோன் செய்து கேட்டிருக்கிறார்.

"ஏன் சார் வரவில்லை? உங்களுக்கு பிடிக்கவில்லையா? நன்றாக இல்லையா?" என்று. அவர் சொன்னார் "இல்லைமிகவும் பிடித்திருக்கு... அதனால்தான் வரமாட்டேன் என்கிறேன்!".

செக்ரட்டரி ஐயா கேட்டிருக்கிறார். "அதற்காகப் போய் ஏன் வராமல் இருக்கிறீர்கள்?" என்று.

இதற்குமேல் வந்தேன் என்றால் அங்கேயே இருந்து விடுவேன். என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியாதென்று எனக்குத் தெரிகிறது".

அன்பைக் கண்டு பயம். அன்புணர்வின் உச்சத்திலே நாம் செய்கிற செயலைத் தாங்கிக்கொள்கிற அளவிற்கு முதிர்ச்சி இல்லை.

இப்போது அதைத்தான் செய்ய வேண்டும். இந்த அளவிற்கு அன்பின் உச்சத்தை எங்கு அனுபவிக்கப் போகிறோம்?

அன்பின் உச்சத்தை எதிர்ப்பது. அன்பின் ஆழமான அனுபூதியை மறுப்பது. அதைத்தான் குரு துரோகம் என்று சொல்கிறோம்.

நன்கு தெரிந்துகொள்ளுங்கள் வாழ்க்கையில் பல நேரங்களில் குருவாக மட்டும் இல்லை. பல இடங்களில் குரு உங்கள் வாழ்க்கையிலே அன்பின் உச்சத்தை மலர வைக்கிறார்.

ஆனால் அந்த அன்பின் உச்சத்திலே என்ன செய்வோமென்று நமக்கே தெரியாமல் அந்த அளவிற்கு முதிர்ச்சி இல்லாதனால் அன்பின் உச்சம் என்ற மிகப்பெரிய அலை அந்த ஆனந்த அலை ஆனந்தத் தென்றல் வாழ்க்கையில் வீசுவதைத் தடுத்து அணை போட்டு வைப்பதுதான். வாழ்க்கைக்கு நாம் செய்கிற துரோகம்.

அப்போது இரண்டுமுறை வாழ்க்கையில் நம் கதவைத் தட்டிப்பார்த்துவிட்டு திறக்கவில்லை என்றால் அடுத்த கதவைத் தட்டப் போய்விடும்.

அதன் பிறகு பார்த்தீர்கள் என்றால் என்றாவது ஒரு நாள் நீங்கள் கதவு என்று பூட்டு போட்டுப் பூட்டி வைத்திருந்த வீடே காணாமல்போகும். அப்பொழுது உள்ளேயும் ஒன்றும் இருக்காது. வெளியேயும் ஒன்றும் இருக்காது.

வாழ்க்கை என்பதின் மிகத் தெளிவான எளிமையான விளக்கம் இது. வைத்திருக்கிற பொருளை விற்று ஆழமான உணர்வை அனுபவங்களைச் சேர்த்துக்கொள்கிற சந்தைதான். வாழ்க்கை!

பொருட்கள் செல்வதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.

எங்கெங்கெல்லாம் உங்களுடைய உணர்வு உங்களை அறியாமல் மலர்கிறதோ அங்கெல்லாம் பயமில்லாமல் அந்த அனுபவம் உங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை வாங்கிக்கொள்ளும் ஸ்திரத்தோடு உங்களைத் திறந்து வைத்து அதிலேயே கரையுங்கள்.

## உணர்வை மலர்த்துவது குரு சக்தியே

குரு சிஷ்ய உறவு மலரும்போதெல்லாம் உங்களுடைய இருப்புத் தன்மை விரிவடையவில்லையா முதிர்ச்சியடையவில்லையா அப்பொழுதெல்லாம் நீங்கள் ஒரு மேம்போக்கான உறவில் சிக்கி இருக்கிறீர்கள்.

உங்கள் இருப்புத்தன்மையை முதிர்ச்சிக்குள் போக விடாமல் தடுக்கும் உறவு மீண்டும் மீண்டும் ஒதுக்கப்பட வேண்டும்.

குரு-சிஷ்ய உறவே மீண்டும் மீண்டும் மலர்த்தப்பட வேண்டும்.

உங்களுக்குள் மலர்ச்சியை உருவாக்கிட வேண்டும் என்றால் அது குரு சிஷ்ய உறவில்தான் நடக்கும். உங்களுக்கு வேண்டுமானால் குரு தேவைப்படாமல் இருக்கலாம். எதை இழக்கிறீர்கள் என்பது புரியாமல் இருக்கலாம்.

ஆனால் குருவால் "தன் உணர்வை" மற்றவர்களுக்குள்ளும் நிகழ்த்தாமல் இருக்க முடியாது.

ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும் "தன் இருப்பை" உணர்ந்தவர்களால்தான் அதை மற்றவர்களுக்கும் மலர்த்த முடியும் வேறு நபரால் அதைக் கொடுக்க முடியாது என்பதையும் தெரிந்தவர்கள் குருமார்கள். இப்போது அனைத்து உறவுகளுமே ஆழமற்றவையாக ஆகிவிட்டது. ஆழமற்றவை என்றால் மிக மேம்போக்காகி விட்டது. இப்போது கணவன் மனைவி உறவுகூட ஏறத்தாழ ஒரு boy friend, girl friend உறவுதான்.

ஏனென்றால் எப்போது வேண்டுமானாலும் விவாகரத்து வாங்கிக் கொள்ளலாம்.

நம்முடைய வேத பாரம்பரியத்தில் அந்த விவாகரத்து கிடையாது. சமஸ்கிருதத்தில் "விவாகரத்து" என்ற வார்த்தையே இல்லை. ஏனென்றால் மரணம்வரை ஒன்றாக இருந்தாக வேண்டுமென்பதுதான் திருமணத்தில் எடுத்துக் கொள்ளப்படும் விரதம்.

விரும்பும்வரை ஒன்றாக இருக்க வேண்டும் என்கிற விரதமில்லை. மரணம்வரை ஒன்றாக இருந்தாக வேண்டும். அடிவயிற்றில் இருக்கிற அக்னி எரியும்வரை ஒன்றாக இருந்தாக வேண்டும். அதுதான் விரதம். இப்போது என்ன செய்கிறோம்? சாப்பிட்ட சாப்பாடு ஜீரணமாகும்வரை ஒன்றாக இருக்கிறோம். மிகப்பெரிய வாழ்க்கை முறை.

எப்படியோ குரு- சிஷ்ய உறவு மட்டும்தான் எப்போதும் முதிர்ச்சியை மலர வைக்கும். உங்களையே அறியாது உங்களுக்குள் இருக்கும் பல பரிமாணங்களை மலர வைக்கிற சக்தி குரு-சிஷ்ய உறவிற்குத்தான் உண்டு.

ஒவ்வொரு முறையும் எவ்வளவு முறை எவ்வளவு ஆழமாக வாய்ப்பு கிடைத்தாலும் தவறாமல் அந்த உறவிலே கரையுங்கள்.

## மகோன்னத தீக்ஷை

ஒவ்வொரு முறையும் அந்த வாய்ப்பை நழுவ விடாதீர்கள். மீண்டும் மீண்டும் மீண்டும் உங்கள் உணர்வு முழுவதினாலும் ஒத்துழைத்து பயம் இல்லாமல் ஆழ்ந்து அன்பின் ரசத்தில் கரையுங்கள்.

இரண்டு விஷயம் உண்டு. கரைவதற்கு இப்போது உணர்வு ரீதியாக தைரியம்: இரண்டாவது கரையும்போது நாம் ஏதாவது செயல்களைச் செய்தால் அதற்காக வருத்தப்படாமல் வருந்தாமல் குற்ற உணர்ச்சிக்குப் போகாமல் இருக்கிற முதிர்ச்சிஸ் திரத்தன்மை.

குரு ஒரு பக்கம் எரிகிற காட்டுத் தீ. அவர் ஒரு கரையில் ஒருபக்கம் இருக்கிறார். நடுவில் சம்சாரம் என்கிற ஆறு ஓடுகிறது. நீங்கள் இன்னொரு பக்கம் இருக்கிறீர்கள்.

இரண்டு பேருக்கும் நடுவில் பாலம் இருக்கிறது. அது எந்தப் பொருளினால் உருவானாலும் பரவாயில்லை. இந்தக் காட்டுத் தீக்கு அந்தப் பாலத்தை எரித்து உங்களை ஏற்றுக் கொள்கிற சக்தி உண்டு.

பாலத்தை உருவாக்குவதே அந்த மகோன்னத நிலையை அடைவதற்கான தீக்ஷையை நிகழ்த்திவிடும்.

பாலத்தை மரத்தால் கட்டினாலும் சரி இல்லை மண்ணால் கட்டினாலும் சரி கல்லால் கட்டினாலும் சரி சிமெண்டால் கட்டினாலும் சரி எதில் கட்டினாலும் இந்தக் காட்டுத்தீ பரவி உங்களை ஏற்றுக்கொள்ளும்.

எந்தப் பாவனையில் பாலம் கட்டினாலும் சரி சக பாவமானாலும் தாஸ பாவமானாலும் சரி. எந்தப் பாவமானாலும் சரி அந்தப் பாவத்திலே நீங்கள் கரையுங்கள். அவரை இழுக்க முயற்சி செய்யாதீர்கள். நீங்கள் கரையுங்கள்.

கரையத் துவங்கிய அந்த வினாடியே உங்களின் உணர்வு கரைந்து வாழ்க்கையின் உச்சத்தை அது உங்களுக்கு மலர வைக்கும். அது உங்களுக்குள் ஆழமான மாற்றத்தை அளிப்பதாக மாறும் வேறு ஒன்றுமே செய்யத் தேவையில்லை.

அந்தச் சத்தியத்தை உள்வாங்கி இதற்காக முயற்சி செய்தீர்கள் என்றால் போதும். "உங்கள் உணர்வை ஒன்று திரட்டி குரு சக்திக்குள் குரு என்கிற உணர்விற்குள் குரு தத்துவத்திற்குள் நான் கரைவேனாக" என்கிற ஆழமான சங்கல்பத்தை ஏற்படுத்தி அந்த உணர்வை உங்களுக்குள் ஆழமாக்கினீர்கள் என்றால் போதுமானது.

"ஐயோ! என்னால் கரைய முடியவில்லையே! எப்படிக் கரைவது?" என்று எல்லாம் கேட்கவே வேண்டாம். 'கரைவேனாக' என்கிற சங்கல்பத்தை ஆழமாக ஏற்படுத்தினீர்கள் என்றால் போதுமானது.

உங்களுக்குள்ளே அப்படியே கரைய ஆரம்பித்து விடுவீர்கள். வேறு ஒன்றுமே நிற்காது.

கரடாக நிற்கிற உங்களின் மனம்கூட கரைகிற பாகத்தைப் பார்த்து தாமும் கரைந்துவிடும். வேறு ஒன்றுமே செய்ய வேண்டியது இல்லை. அவ்வளவுதான் வேறு ஒன்றுமே இல்லை.

கண்களை மூடி ஆழ்ந்து இந்த உணர்விற்குள் செல்லுங்கள்...

இந்தச் சத்தியங்கள் வெறும் வார்த்தையாக இருக்கக்கூடாது.

வாழ்க்கையாக மாற வேண்டும்.

*(தொடர்ச்சி 30 பக்கம்)*

# கனடா வீணைமைந்தனை "யாழ்மைந்தன்" ஆக உயர்த்திய அவரது பவள விழாக் கொண்டாட்டம்



ஆகஸ்ட் மாதம் 7ம் நாள் ஞாயிறு மாலை கனடா வீணைமைந்தன் அவர்களின் வாழ்வில் ஒரு பொன்னாள். திரு நல்லூர் சண்முகப்பெருமானின் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய பெருந்திருவிழா ஆறாம் நாள் முருகப்பெருமான் ஆட்சிசெய்யும் திருத்தலத்துக்கு அண்மையில் அமையப்பெற்றுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் வீணைமைந்தன்-75 பவள விழா வெகு விமரிசையாக ஆரம்பமானது.யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் யாழ். இலக்கிய வட்ட த்தலைவருமான சிரேஷ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கனார் தலைமையில் கலை இலக்கியப்படைப்பாளிகளும் கற்றறிந்தசான்றோரும் நிறைந்த அவையிலே இனிதாய் அமையப்பெற்றது. அன்றைய விழா கனடா உதயன் தொடர் எழுத்தாளர் "கனடா வீணைமைந்தன்" அவர்களை "யாழ்மைந்தன்" ஆக உயர்த்திய விழாவாக அமையப்போகின்றது என்பதை ஆரம்பத்திலேயே கட்டியம் கூறும் வகையில் அன்றைய வைபவம் அமைந்திருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர்ந்து கனடிய தேசத்தில்வாழ்ந்து வரும், தாய்மண்ணையும் - தாய்மொழியையும் நேசித்து வாழும் கலை - இலக்கியப்படைப்பாளியின் பவளவிழாவினை தாய் மண்ணிலே கொண்டாடி இலக்கிய உலகம் பெருமிதம் கண்டது. மங்கள ஒளி தீபமேற்றலுடனும் செல்வி தீட்சனா உமாகாந்தனின் இறை வணக்கத்துடனும் இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் இசையமைத்துப்பாடிய புலவர் பார்வதி நாதசிவம் அவர்களின் தமிழ் மொழி வாழ்த்துடனும் அரங்கு தெய்வீகமயமானது.

வாழும்போதே கலை இலக்கிய படைப்பாளிகளைக் கௌரவிக்கும் இலக்கிய வட்டம், மனச்செம்மையான படைப்பாளி, எழுபத்தைந்து வயது இளைஞன் வீணைமைந்தன் பவளவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது என தன் வரவேற்புரையிடை அடிக்கோடிடுவார் யாழ். இலக்கிய வட்ட செயலாளர் நயினை கி. கிருபானந்தா.







தாய்மண்ணையும் தாய் மொழியையும் நேசிக்கும் ஆளுமை என நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பாமாச்சாரிய சுவாமிகள்பொன்னாடை அணிவித்து ஆசி வழங்கினார். தொடர்ந்து வீணை மைந்தனிடம் அன்பும் நட்பும் பூண்ட தெல்லிநகர் பிரம்மஸ்ரீ கி. கணேசமூர்த்தி சர்மா அன்றைய பாடசாலைக்காலத்தில் முளைவிட்ட சண்முகராஜாவின் திறமைகளை இனங்காட்டி இன்று பல சிகரங்களை அவர் தொட்டமை பெருமகிழ்ச்சி தருகின்றது என்றார்.

"அனுபவம் என்ற பல்கலைக்கழகத்தில்ன நிறையவே கற்றுக்கொண்ட வீணை மைந்தன் சண்முகராஜாவின் அயராத தேடல் மகத்துவமானது. இடம்பெயர், புலம்பெயர் அவலங்களியெல்லாம் தாண்டி நிமிர்ந்த பண்பாட்டு மேன்மைக்கான அவர் வாழ்வின் உண்மை அழகைக்கொண்டாடுவதில் யாழ் இலக்கியவட்டம் பெருமிதம் கொள்கின்றது" என தலைமையுரையின் போது குறிப்பிடுவார் பேராசிரியர் சண்முகலிங்கன்.தலைமையுரையைத்தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம்பெற்றன. எங்கள் பெருங்கலைஞர் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் கலைவாரிசுகளுள் ஒருவரான திருமதி. வசந்தா ஐயாத்துரை முன்னொருகாலத்தில் நாடக நடிகனாக வேடமேற்ற வீணைமைந்தனுக்கு ஒப்பனை செய்து அரிதாரம் பூசியதை நினைவு கூர்ந்து தந்தையார் நடிகமணியின் மயான காண்டத்தின் இறுதிப்பகுதியை பாடிப்பரவசப்படுத்தி கண்ணீர்மல்க வைத்தார். மூத்த கவிஞரான "சோ.ப" அவர்கள் வீணைமைந்தனின் "தொலைந்து போன வசந்தகாலங்களுாடாகவும், கவிதைகள் வழியாகவும் தன் அன்பையும் ரசனையையும் வெளிப்படுத்தினார்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, தனது இளமைக்கால நினைவுகளோடு வீணைமைந்தன் கட்டுரைகள், கவிதைகளை ஒப்பிட்டு சிலிர்ப்பூட்டினார்.

தொடர்ந்து வீணைமைந்தனின் கல்விச்சாலையான காங்கேசந்துறை அமெரிக்கன் மிஷன்பாடசாலை மூத்த மாணவரும் வலி-வடக்கு மீள் குடியேற்ற அமைப்பின் செயல் வீரருமான அ.குணபால சிங்கம் உரை நிகழ்த்தினார்.யாழ்பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடாதிபதி கலாநிதி சுகந்தினி ஸ்ரீ முரளீதரன், யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்க தலைவரும் ஆசிரிய கலாசாலை உப அதிபருமான திரு ச. லலீசன், வலம்புரி நாளிதளின் பிரதம ஆசிரியர் திரு. ந. விஜய சுந்தரம், தொழில் சார் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி செல்வ நாயகம், எழுத்தாளரும் கவிஞருமான திருமதி. உமா மோகன் (கனடா) ஆகியோர் வீணைமைந்தனின் பல்துறை ஆற்றல்களை கலை நயத்துடன் பகுப்பாய்வு செய்தனர்.

தொடர்ந்து பவளவிழா மலர் வெளியீடு இடம்பெற்றது. சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இரா. இராஜேஸ்கண்ணன் வீணை மைந்தன் -75 பவள விழா மலரின் அழகையும் அதன் வழி வெளிப்படும் வீணை மைந்தன் ஆளுமைத்திறத்தினையும் தன் வெளியீட்டுரையில் திறம்பட வெளிப்படுத்தினார். முதல் பிரதியை தமிழ்த்தேசிய பசுமை இயக்க தலைவரும் வட மாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் பெற்று கௌரவப்படுத்தினார்.

வீணைமைந்தனின் கவிதை புனையும் ஆற்றலை அன்றேகண்டறிந்து ஊக்கப்படுத்திய புலவர் பார்வதிநாதசிவம் அவர்களின் புதல்வர் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. மகாலிங்கசிவம் அவர்களின் நயமான பவளவிழா மலர் நயப்புரையைத்தொடர்ந்து, யாழ் இலக்கிய வட்டத்தின் சார்பில் பாமாலை வாழ்த்து இசைத்து வழங்கப்பட்டது. மேலும் வீணைமைந்தன் உறவுகள்,ரசிக அன்பர்கள் பலரும் மலர்மாலை சூட்டியும் வாழ்த்துப்பாக்கள், பொன்னாடை மணியாரங்களுடன் அழகுசெய்து அன்பில் திழைக்கவைத்தனர்.

சிறுவட்டமான என்னையாழ் இலக்கியவட்டம் "தமிழ் கூறும் நல்லுலகில் பெரிய வட்டமாக அறிமுகம் செய்து பெருமைப்படுத்தி விட்டது" என்று மெய் சிலிர்ப்புடன் வீணைமைந்தன் ஏற்புரை வழங்க பவள விழா இனிதே நிறைவு கண்டது.

**- யாழிலிருந்து கனடா "உதயன்" சிறப்புச் செய்தியாளர்**


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0% வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

(28 பக்கத் தொடர்ச்சி...)

## ஜீவன் முக்தி 589

### நம்மைக் கடவுளாக்கும் கடவுள்

**யார் குரு? யார் கடவுள்?**
Who is a Guru? Who is God?

**ஞான சக்திகள் இப்பூமியில் உலாவிய இடங்களே தீர்த்தஸ்தலங்கள்**
The places where enlightened beings wandered are what we call holy shrines today

**பக்தி பலவீனம் அல்ல... பலமே...**

- **பூஜை ஒரு ஞான விளையாட்டு**
  Puja is a spiritual game
- **நேரடியாகக் கடவுளோடு பேசலாம்**
  You can talk to God directly
- **முயற்சி செய்யும் மனப்பழக்கம் ஒரு மிகப்பெரும் கொடுப்பினை**
  The habit of putting consistent effort itself is a gift
- **உங்களின் பலமே உங்களின் சிரத்தைதான்...**
  Your very commitment is your strength...

### நம்மைக் கடவுளாக்கும் கடவுள்

குரு சிவனா? கடவுள் சிவனா? யார் உயர்ந்தவர்?
சத்யம் 1

இ ரு வ ரு ே ம ஒருவர்தான்.
சத்யம் 2

இருவரில் ஒருவரைத்தான் உ ங் க ளா ல் நே ர டி யா க ப் புரிந் து கொள் ள முடியும்.
சத்யம் 3

உங்களுக்கு நேர-டியாய் உதவும் வகையில் தம்மை மாற்றியமைத்துக் கொண்ட கடவுளே உயர்ந்த குரு.

யார் குரு? யார் கடவுள் கீ?
நகரம் 15 ரீக? *41* - 15 0002

"கடவுளை நீங்கள் எப்படி குருவாக்கலாம்?" என்று நீங்களும் கேட்கலாம். ஒருவர் அப்படித்தான் என்னிடம் கேட்டார், "சிவன் கடவுளல்லவா? அவரைப் போய் குரு என்று சொல்கிறீர்களே?" என்று.

இதற்கு அழகான ஒரு நிகழ்ச்சியில் இருந்து விடை சொல்லலாம். விவேகானந்தர் ராமகிருஷ்ணர் பற்றிச் சொல்லி கொண்டிருந்தபோது, "அவர் அவதார புருஷர், மிகப் பெரிய ஞானசக்தி," என்கிறார்.

அப்போது ஒரு சீடர், "ராமகிருஷ்ணரை குரு என்று சொல்லுங்கள். ஒப்புக்கொள்கிறோம். ஆனால், கடவுள் என்று ஏன் சொல்கிறீர்கள்? மிகவும் அதிகமாகத் தெரிகிறதே," என்கிறார்.

விவேகானந்தர் மிக அழகாக, "கடவுள் என்றால், உனக்கு என்ன புரியும்?" என்று கேட்கிறார். சிறிது நேரம் கழித்து விவேகானந்தர் அந்தச் சீடருக்கு, "கடவுள் என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிற எல்லாமே, சில கருத்துகளின் தொகுப்புதான்" என்று புரிய வைத்தார்.


# அருள் மிகு நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

20 Nugget Ave #01,Scarborough, ONT. (Mc Cowan/Sheppard) தொலைபேசி இலக்கம் -4162939004





## நல்லூர்க்கந்தன் 27 தின மகோற்சவ விஞ்ஞாபனம்

01.08.2022 திங்கள் முதல் 28.08.2022 ஞாயிறுக்கிழமை வரை

குகனேய அடியார்களே !

நிகழும் மங்களகரமான சுபகிருது வருசத்திற்கான நல்லூர் முருகன் 27 தினத்திருவிழா கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரின் எழில் நகராம் ஸ்காபரோ பகுதியில் எழுந்த ருளியிருக்கும் நல்லூர்க்கந்தன் என்ற திருநாமத்துடன் கூடிய முருகப் பெருமானுக்கு 27 தினமும் திருவிழா நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் திருவிழாவை போன்றே இங்கும் அதே காலப்பகுதியில் அழகு மிகுந்த அலங்காரக்காட்சியுடன் அபிசேகம் ,விசேடபூசை,சுவாமிவீதிவலம் வருதல் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்க்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.

| திகதி | கிழமை | நாள் | விசேடதிருவிழாக்கள் |
|---|---|---|---|
| 01.08.22 | திங்கள் | 00 | கணபதிஹோமம் (காலை) |
| 02.08.22 | செவ்வா | 01 | கொடியேற்றம் |
| 05.08.22 | வெள்ளி | 04 | வரலஸ்மி விளக்குப்பூஜை. |
| 09.08.22 | செவ்வா | 08 | பிரதோசம் |
| 11.08.22 | வியாழ | 10 | மஞ்சம். |
| 14.08.22 | ஞாயிறு | 13 | சங்கடஹரசதுர்த்தி |
| 17.08.22 | புதன் | 16 | அருணகிரிநாதர் உற்சவம் |
| 19.08.22 | வெள்ளி | 18 | கிருஷ்ணஜெயந்தி திருவிழா கார்த்திகை கற்பூரத்திருவிழா |
| 20.08.22 | சனி | 19 | சூரியோற்சவம் |
| 21.08.22 | ஞாயிறு | 20 | சந்தானகோபாலர் திருவிழா |
| 22.08.22 | திங்கள் | 21 | கஜவல்லி மஹாவல்லி திருவிழா |
| 23.08.22 | செவ்வா | 22 | மாம்பழத்திருவிழா, |
| 24.08.22 | புதன் | 23 | சப்பறம், பிரதோசம் |
| 25.08.22 | வியாழ | 24 | தேர்த்திருவிழா |
| 26.08.22 | வெள்ளி | 25 | தீர்த்த உற்சவம் |
| 27.08.22 | சனி | 26 | திருக்கல்லியாணம் |
| 28.08.22 | ஞாயிறு | 27 | வைரவர் உற்சவம் |

காலை DAY TIME

காலை 07:00 மணி திருவனந்தல் 1ST Pooja 7:00 AM
காலை 10:00 மணி காலசந்தி 2nd Pooja 10:00 AM
காலை 10:30 மணி கும்ப பூஜை Kumba pooja 10:30 AM
பகல் 12.00 மணி விசேட பூஜை 3rd Pooja 12:00 PM
பகல் 12:20 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja
பகல் 01:00மணி அன்னதானம் வழங்கப்படும். Annathanam Distribution

மாலை NIGHT TIME

மாலை 5:30 மணி சாயரட்ச்சை 1ST Pooja 5:30 PM
மாலை 6:15 மணி கும்ப பூஜை Kumba pooja 6:15 pm
மாலை 7:00 மணி மூலஸ்தானபூசை Main Pooja 7:00 Pm
இரவு 7:30 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja 7:30 Pm
இரவு 7:50 மணி சுவாமி உள்வீதி வலம் Sri Murugan Procession 7:50 pm

பகல்.இரவுதிருவிழா உபயங்கள் செய்ய விரும்வோர் ,வரலக்ஸ்மி விளக்குப்பூசை கலந்து கொள்ளவிரும்வோர் கற்பூரச்சட்டி,காவடிபோன்ற நேர்த்திக்கடன் செய்யவுள்ளோர் தேர்த்திருவிழாஅன்றுஆறு முப்பெருமானுக்கு108பால் குடபிசேகம்நிகழவுள்ளதால் பால்குடஅபிசேகத்தில் கலந்தகொள்ளவிரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை பதிவுசெய்யவும்

**25.08.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழா**

காலை 6:00 மணி மூலமூர்த்திக்கு அபிஷேகம்
காலை 7:00 மணி மூலஸ்தானபூசை
காலை 8:00 மணி வசந்தமண்டபபூசை
காலை 09:00 மணி தேர்புறப்பாடுதல்
காலை 10:00 மணி இருப்பிடம்சேர்தல்
பகல் 12:00 மணி பச்சைசார்த்தல் (தேரிலிருந்துசுவாமிஇறக்குதல், பிராயச்சித்தாபிஷேகம்,சண்முகார்ச்சனை)அன்னதானம் வழங்கல்

**அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்க்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.** தொலைபேசி இலக்கம் -416 2939004


# அன்பின் தொனி - 658

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே -** Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு -** Worship your Creator

**கர்த்தரை விட்டு விலகிய ஜனம்**

கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட, அழைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம் பலவிதமான சந்தற்ப சூழ்நிலையில், ராஜா முதல் சாதாரண மனிதன்வரை கர்த்தரை விட்டு விலகி அந்நியதேவர்களைப் பின்பற்றி வெட்டப்பட்ட சுரூபங் களையும், சிலைகளையும், வானசேனைகளையும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்களையும் வணங்கியதோடு, சிலர் மனுஷரையும் மகான்களென்றும், தெய்வப் பிறவிகளென்றும் அவர்களை வணங்குவதும், சிலர் மரித்துப்போனவர்களிடம் ஜெபம் ஏறெடுப்பதையும், மேலும் பச்சையான மரங்களின் கீழ் பலி பீடங்களை உண்டுபண்ணி பாகாலுக்குப் பலிகளைச் செலுத்தி, குறி சொல்பவர்களை நாடிக் குறிபார்த்து, அஞ்ஞனம் பார்த்து, நாள் பார்த்து, தமது குமாரர் குமாரத்திகளைத் தீக்கடக்கப்பண்ணி, இப்படியாகத் தங்கள் சுய சிந்தனையிலே பற்பல தங்கள் தேவைகளுக்காக மெய் தேவனாகிய கர்த்தரை விட்டுத் தூரமானார்கள். இப்படி அந்நிய தேவர்களை நாடித் தேடிப் போனவர்கள் ஏனைய மனுஷரைத் திருப்திப்படுத்தவும், பணத்திற்காகவும், வியாபார நோக்கோடு சிறிய ஆதாயத்திற்காகவும், பெண்களுக்காகவும், தேசங்களை ஆளுகை செய்வதற்காகவும், பதவிக்காகவும், பட்டத்திற்காகவும், தங்களைப் பெரு மைப்படுத்திக் காண்பிக்கவும் இவைகளைச் செய்தார்களே தவிர, கர்த்தராகிய தேவன் தெய்வமல்ல என்பதற்காச் சிந்தித்துச் செய்யவில்லை என்பதை மேலே கொடுக்கப்பட்ட சம்பவங்களிலிருந்து அறியக்கூடியதாய் இருக்கிறது. இந்த நிலமை உலகில், இந்த நாட்களிலும் மிகவும் அதிகரித்து நடைபெறுவதை எங்கும் காணக்கூடியதாய் இருக் கிறது. இது எவ்வளவு பரிதாபத்திற்குரிய நிலை!

**அன்பானவர்களே!**

விக்கிரக ஆராதனையிலும் வழிபாடுகளிலும், தமது சுய நலத்துக்காகவும், ஆதாயத்திற்காகவும், தமக்குச் சாதக மான சில சந்தற்ப சூழ்நிலைகளுக்காகவும், அநேக மக்கள் காலத்துக்குக் காலம் விழந்துபோன நிலமைகளில் சில வற்றை பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுத்துக் காட்டியதை மேலே வாசித்து அறிந்தீர்கள். இதைப்போலவே இன்றும் அநேகர் தமது சுய சிந்தனையில் வீணராகி பல புதிய வழிபாடுகளை, கடவுளுக்குப் பிரியமில்லாத, தேவ சத்தியத் திற்கு முரணான விக்கிரக ஆராதனைகளைப் பின்பற்றி வருகின்றனர். இவற்றைக் குறித்து நாம் மிகவும் எச்சரிப்பாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.

அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பற வைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினர். **- ரோமர் 1: 21-23**

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத்தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்.
**- ரோமர் 1: 25**

**கர்த்தருக்காய் வைராக்கியமாய் வாழ்ந்தவர்கள்**

மெய் தேவனை மறுதலித்தவர்கள் ஒருபுறம் இருக்க, சத்தியத்தை சரிவர அறிந்து, கர்த்தருக்கென்று அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த, கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது என்பதையும், கர்த்தர் நல்லவர் என் பதை ருசித்துப்பாருங்கள், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்பதை வெளிப்படுத்தி நிரூபி க்கத்தக்கதாக செயற்பட்டவர்களுடைய சில நிகழ்வுகளையும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து பார்த்து, நாமும் கர்த்தரு க்குள் களிகூருவோம்.

**1. ஆசா ராஜா தன் தாயின் விக்கிரகங்களையே அகற்றினான்**

அபியாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணினார்கள், அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான். இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் இருப தாம் வருஷத்திலே ஆசா யூதாவின்மேல் ராஜாவாகி, நாற்பத்தொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான், அப்சலோமின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் மாகாள். ஆசா தன் தகப்பனாகிய தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். அவன் இலட்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றி, தன் பிதாக்கள் உண்டுபண்ணின நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்கி, தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிட்டான், அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போட்டான். மேடைகளோ தகர்க்கப் படவில்லை, ஆனாலும் ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது. தன் தகப்பனும் தானும் பரிசுத்தப்படுத்தும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டுவந்தான்.
**- 1 ராஜா 15: 8-15**

**2. யோசபாத் ராஜா விக்கிரகங்களை அகற்றி வேதத்தை போதித்தான்**

கர்த்தர் யோசபாத்தோடிருந்தார், அவன் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன்நாட்களில் நடந்த வழிகளில் நடந்து, தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவா-மல், அவருடைய கற்பனைகளின்படி நடந்துகொண்டான். ஆகையால் கர்த்தர் அவன் கையில் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்தினார், யூதா கோத்திரத்தார் எல்லாரும் யோசபாத்துக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள், அவனுக்கு ஐசுவரியமும் கனமும் மிகுதியாயிருந்தது. கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங்கொண்டது, அவன் மேடைகளையும் விக்கிரகத் தோப்புகளையும் யூதாவை விட்டகற்றினான்.
**- 2 நாளாகமம் 17: 3-6**

தொடரும்...

# மலேசியாவின் இந்திரா காந்தி' நூருல்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஆக.06:

மலேசிய மக்களும் நாளைய அரசியலும் ஒரு பெண் பிரதமரை எதிர்கொண்டால், அவர் அநேகமாக நூருல் இஸாவாகத்தான் இருப்பார். அவருக்கான வாய்ப்புதான் அதிகமாக இருக்கிறது.., மலேசியாவின் இன்றைய அரசியல் போக்கைப் பொறுத்தவரை.

நாட்டின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் என்று கருதப்படும் இவர்,, மலேசிய அரசியலில் சீர்திருத்த இளவரசி என்ற அடையாளத்தைக் கொண்டிருக்கிறார். இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி எப்படி அரசியல் வட்டத்திற்குள்





வளர்ந்தாரோ, வாழ்ந்தாரோ அதைப்போல, ஏறக்குறைய நூருலும் ஓர் அரசியல் குடும்பத்தில் தோன்றினார்.

பதின்ம வயதைக் கடந்து இளையவர் என்ற நிலையை எட்டியபோது, இந்தியா-பாகிஸ்தான்-வங்காளதேசம் ஆகிய மூன்று நாடுகளும் இணைந்திருந்த ஒன்றுபட்ட இந்தியாவிற்கான முக்கிய முடிவுகளை உயர்நிலைத் தலைவர்கள் எடுத்தபோது உடன் இருந்தவர் இந்திரா காந்தி.

இந்திரா காந்தியின் 19 வயதிலேயே தாய் கமலா நேரு மறைந்ததாலும் அத்தை விஜயலெட்சுமியுடன் முரண்பட்டு இருந்ததாலும் ஜவஹர்லால் நேரு எங்கு சென்றாலும் எந்தக் கூட்டமாக இருந்தாலும் மகள் இந்திரா பிரியதர்ஷினியை உடன் அழைத்துச் செல்வது வழக்கம்.

அதைப்போன்ற நேரடியான அனுபவம் நூருல் இஸாவிற்கு வாய்க்கா-விட்டாலும் மலேசிய அரசியலின் நேரடித் தாக்கம் அவருக்கு ஏற்பட்டிருந்தது. நேரு சிறையில் இருந்தபொழுது இந்திரா என்னென்ன சிக்கலை எதிர்கொண்டாரோ அதைப்போல நூருலும் தன் தந்தை டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம் சிறையில் இருந்தபோது எதிர்கொண்டார்.

வெளிநாட்டில் படிக்கச் சென்ற இந்திரா, பார்சி இனத்தைச் சேர்ந்த ஃபெரோஸ் என்பவரைக் காதலித்தார். இதை விரும்பாத நேரு, அண்ணல் காந்தியை துணைக்கு அழைத்து இந்திரா-ஃபெரோஸ் காதலைப் பிரிக்க சதி செய்தார்.

பாவம் காந்தியார்.., அவரால் ஒன்றும் ஆகாத அளவுக்கு இந்தக் காதல் கெட்டியாக இருந்தது. அப்படிப்பட்ட காதல் கணவரை, ராஜீவ்-சஞ்சய் என்ற இரு குழந்தைகள் பிறந்தபின் பிரிந்தார் இந்திரா காந்தி.

இந்திராவைப் போலவே, நூருலும் இரு குழந்தைகளுக்குப் பின், தன் கணவர் ராஜா அகமட் ஷாரியை மணவிலக்கு செய்திருந்த நிலையில், 7 ஆண்டுகளுக்குப் பின் இப்பொழுது "இன் ஷாவ் லூங்" என்பவரை 2022, ஆகஸ்ட் 5-ஆம் நாளில் மறுமணம் புரிந்திருக்கிறார்.

தனி வாழ்க்கை, நல்லறமாம் இல்லறம், பொது வாழ்க்கை, அரசியல் களம் என எல்லாத் தலங்களிலும் தனித்து செயல்படும் பாங்கு கொண்ட புதுமைப் பெண்ணான நூருல் இஸா, இந்திரா காந்தியைப் போலவே பிரதமராகவும் ஆவாரா என்பதை நாளைய மலேசிய அரசியல் தீர்மானிக்கும்.

இரண்டு முன்னாள் துணைப் பிரதமர்களின் மகள் என்ற பெருமை, உலகிலேயே நூருல் இஸாவிற்குத்தான் உண்டெனத் தெரிகிறது. ஆனாலும், தாய் டத்தோஸ்ரீ டாக்டர் வான் அஸிஸா வான் இஸ்மாயில்-தந்தை அன்வார் ஆகியோரின் அரசியல் நிழலில் அண்டியிருக்க விரும்பாதவர் நூருல்.

இவரின் அரசியல் நுழைவே அதிரடியாக இருந்தது. தலைநகரின் லெம்பா பந்தாய் நாடாளுமன்றத் தொகுதியில் 2008, 2013 பொதுத் தேர்தல்களில் இரு கேபினட் அமைச்சர்களை வீழ்த்தி அவர்களை பதவியழக்கச் செய்த அரசியல் வீராங்கனை நூருல் இஸா.

2008 பொதுத் தேர்தல் சமயத்தில் ஹிண்ட்ராஃப் எழுச்சி ஒரு பக்கம் இருந்தாலும், அம்னோ மகளிர் தலைவியாகவும் மகளிர்-குடும்ப-சமூக நலத்துறை அமைச்சராகவும் இருந்த டத்தோஸ்ரீ ஷரிசாட் அப்துல் ஜாலில் ஒரு வலுவான வேட்பாளர் என்பதால் பிரதமர் துன் அப்துல்லா படாவி, இளம்பெண் நூருலால் என்ன ஆகிவிடப் போகிறதென்று, சற்று ஏனோதானோ என்ற மனப்பான்மை-யில் இருந்து விட்டார்.

ஆனால், 2013 பொதுத் தேர்தலில் எப்படியாவது நூருலை மண்டியிட வைத்துவிட வேண்டும் என்று அடுத்துவந்த பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப், தொகுதியில் களம் கண்ட ராஜா நோங் ச்சிக் ஜைனால் அபிடினைவிட அதிகமாக முயன்றார். கடைசியில், ராஜா நோங் ச்சிக்-தான் அடுத்து உருவான அமைச்சரவையில் பதவி ஏற்க முடியாத நிலைக்கு ஆளானார்.

அதற்கு அடுத்து நடைபெற்ற 2018 பொதுத் தேர்தலில் தன் தந்தையின் தொகுதியான பெர்மாத்தாங் பாவ்-ஐத் தற்காக்க தன் தாய் வான் அஸிஸாவிற்குப் பதிலாக பினாங்கு பக்கம் சென்றுவிட்டார்.

2018 பொதுத் தேர்தலுக்குப் பின் மலேசிய அரசியல் புதிய கோணத்தில் புதிய பாதையைத் தொடங்கிய நேரத்தில், துன் மகாதீர் மேற்கொண்ட வஞ்சக-சூழ்ச்சி அரசியலால் மனம் உடைந்து, நம்பிக்கைக் கூட்டணியில் இணையவும் தலைமை தாங்கவும் வெளிநாடு சென்று மகாதீரை சமாதானப் படுத்தி அழைத்து வந்த முயற்சி யெல்லாம் வீணாகிவிட்டது என்று அறிவித்துவிட்டு அரசியலில் இருந்தும் கட்சி நடவடிக்கையில் இருந்தும் ஒதுங்கிக் கொண்டார் நூருல்.

நூருலின் இந்தச் சாடலுக்கு, இன்றுவரை மகாதீர் விளக்கம் சொல்லவில்லை.

மகாதீர் ஒரு மலாய்க்காரரே அல்லர் அவர் ஓர் இந்தியர் அவரிடம் மலாய்க்காரர்கள் தங்களின் அரசியல்-பொருளாதார-சமூக சிக்கலை 22 ஆண்டுகளாக ஏமாந்து ஒப்படைத்திருந்தோம் என்று முன்னாள் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ அகமட் ஜாஹிட் ஹமிடி சொன்னபோது, தன் தந்தைதான் இந்தியாவின் மலையாள மொழிவழி வந்தவர் தாய் மலாய்ப் பெண்தான் என்றெல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு விளக்கம் தந்த மகாதீர், நூருலுக்கு மட்டும் மறுப்போ விளக்கமோ சொல்லவில்லை.

ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம்பெற்ற நூருல், மனிதநேய சிந்தனையிலும் செயல்பாட்டிலும் ஈடுபாடு கொண்டவர். குறிப்பாக, சிறைவாசிகளின் நலனில் அக்கறை கொண்டவர். இதன் அடிப்படையில்தான், ஜெனிவாவில் நடைபெற்ற ஐநா மன்றத்தின் 55வது மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதான அமர்வில் நூருல் தலையிட்டார்.

விரைவில் நடைபெற இருக்கின்ற 15-ஆவது பொதுத் தேர்தலில், மகாதீர் உள்ளிட்ட அன்வாரின் அரசியல் எதிரிகள் வகுக்கும் தந்திரோபாயம் ஒருவேளை பலித்து, அன்வாரின் பிரதமர் வாய்ப்பு மீண்டும் ஒருமுறை நழுவினால், நாட்டு மக்களின் கவனமும் அனுதாபமும் நூருல் பக்கம் 100% திரும்பும்.

அப்படி நடந்தால், ஆணாதிக்க உலகில் இந்திரா காந்தி எப்படி சாதித்தாரோ, அமெரிக்க அதிபர் நிக்ஸனை மடக்கி, பாகிஸ்தானுக்கு எதிராக போர் புரிந்து வங்காள தேசம் என்ற நாட்டை எவ்வாறு உருவாக்கினாரோ? அமெரிக்காவின் கண்களில் மண்ணைத் தூவி அணு ஆயுத சோதனையை எவ்வாறு நிகழ்த்தினாரோ அதைப்போன்ற அதிரடியையும் புதுமையையும் மலேசிய மண்ணில் நூருல் இஸாவும் படைப்பார் என்று எதிர்பார்க்கலாம்.


அதற்கேற்ப, அண்மையில் மக்கள் நீதிக் கட்சி என்னும் பி-கேஆரில் மீண்டும் உதவித் தலைவராக களம் புகுந்துள்ள இவர், 42 வயதை எட்டியுள்ள நிலையில், 46 வயதான தன் அரசியல் கூட்டாளியை மறுமணம் புரிந்திருக்கிறார்.

அவரின் புதிய மணவாழ்வும் புதிய அரசியல் பயணமும் சிறக்க, கனடாவின் பன்னாட்டு இணைய செய்தித் தளமான உதயன் வாழ்த்துகிறான்!

வாழ்க நூருல்!!

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24




21

# எரியட்டும் தீ

பொதுவாகவே எமது கவின் கலாலயா நுண்கலைக் கல்லூரியின் ஆண்டுவிழா நிகழ்ச்சிகளிலும், என் துணைவியாரின் மாணவிகளின் நடன அரங்கேற்றம் போன்ற நிகழ்ச்சிகளிலும் எனது முழுமையான பங்களிப்புக்கள் இருக்கும்.

நிகழ்ச்சிகள் தரமாக அமைய வேண்டுமே என்ற அக்கறையும் இதற்கான காரணமாகும். சில பொறுப்புக்களைப் பெற்றோரிடம் கையளித்திருந்தாலும் எவ்வளவுதான் ஒழுங்குகளை முன்கூட்டியே திட்டமிட்டு இருந்தாலும் குறித்த நிகழ்ச்சிகளில் நான் பின்னால் இருந்து ஒழுங்குபடுத்துவதும், உதவுவதும், இயக்குவதும் தவிர்க்க முடியாததாகும்.

அந்த வகையில் அன்றைய அரங்கேற்ற நிகழ்விலும் பல விடயங்களையும் நான் பின்னாலிருந்து கவனிக்க நேர்ந்தது. அந்தக் களைப்போடு நாட்டிய நாடகத்தில் நான் பாடவேண்டியும் இருந்தது. இப்படியான சந்தர்ப்பங்களில் இதயமே, உனக்கும் நிறைய வேலைதான்.

தனித்து ஒரு நாட்டிய நாடகம் செய்வது வேறு. பரதநாட்டிய அரங்கேற்றத்தில் ஒரு நாட்டிய நாடகத்தைச் செய்வது என்பது வேறு. பெரும்பாலும் அரங்கேற்றம் தனித்து ஒரு பிள்ளையின் அரங்கேற்றமாகவே அதிக அளவில் நடைபெறுவது வழமை. ஆனாலும் ஒரு குடும்பத்தின் சகோதரிகள் இரண்டு பேரோ அல்லது மூன்றுபேரோ ஒன்றாக அரங்கேறுவதும் உண்டு.

இதில் உள்ள பெரிய பிரச்சினை ஒரே ஒப்பனையுடன் பல கதாபாத்திரங்களையும் செய்வது. உதாரணமாக கணவனை, பிள்ளைகளைப் பறிகொடுத்த ஒரு பெண்ணின் சோகத்தைத் தலை நிறைய பூக்களும் மினுமினுக்கும் உச்சிப்பட்டம், காசுமாலை காதணிகளுடன் இருக்கும் கோலத்தில் எப்படிக் கொண்டுவரமுடியும்?

இதயத்தைப்பற்றி பேசுவதை விடுத்து பரதத்தைப் பற்றி பேசுகிறேன் என்று இப்போது நீங்கள் நினைப்பது சரிதான். ஆனாலும் அந்த சூழலைப் புரிய வைப்பது நல்லது என்று நினைத்தேன்.

இப்போது அந்த நாட்டிய அரங்கத்துக்குள் உங்களையும் கூட்டிச் செல்ல வேண்டும். அப்போதுதான் என் இதயமே, உன் கதையையும் கொஞ்சம் தெளிவாக மற்றையோர்க்குப் புரிய வைக்க முடியும்.

"அவதாரம்" எனும் பெயரில் எழுதப்பட்ட இந்தக் கதையில் சீதையாக முதலில் இருப்பவர் உடனும் இராவணனாக மாறவேண்டும். ஒப்பனையாளரிடம் நான் கேட்டபோது இதுபற்றி தனக்கு முன்கூட்டியே தெரிவிக்கவில்லை என்றும் தான் உடனும் எதுவும் செய்ய முடியாதென்றும் கையை விரித்து விட்டார். கெஞ்சிக் கேட்டும் ஒன்றும் நடப்பதாக இல்லை.

நாட்டிய நாடகம் உடனும் தொடங்க வேண்டும். சமயோசிதமாக யோசித்து முடிவெடுக்க வேண்டும். தாமதிக்க முடியாது. நான் முடிவெடுத்தேன். சீதையின் உடலை மறைத்து முக்காடிட வேண்டும். அதிக நேரம் இடையில் இல்லை. அப்படி நீளமான ஒரு துணியை எவரும் கொண்டு வரவும் இல்லை.

அரங்கின் பின்புறம் தேடிப் பார்த்ததில் சீதை முக்காடிட்டுக் கொண்டிருக்கக் கூடிய - உடலையும் மறைக்கக் கூடிய அளவிலான துணி ஒன்றை தேடி எடுக்க முடிந்தது. இதற்கும் அரங்கின் பின்புறமெங்கும் நானே அவசர அவசரமாக அலைய வேண்டி இருந்தது.

நட்டுவாங்கத்தில் துணைவியார். மிருதங்கத்தில் மகன் கீர்த்தனன், வயலினில் பாலமுரளி, புல்லாங்குழலில் தயாபரன். வீணையில் கல்யாணி சுதர்சன், பிரதம பாடகர் ஆக வர்ணராமேஸ்வரன் அவர்கள். உடன்பாடுவதற்கு நானும் என்னுடன் என் மகள் சங்கீதாவும், கவியங்கா செல்வச்சந்திரனும்.

அரங்கேற்ற அறிவிப்பாளர் க. நவம் அவர்களின் அறிமுகத்தோடு நாட்டிய நாடகம் ஆரம்பமாகியது.

சிறையிருந்த சீதை முக்காடோடு இருந்தாள். அவள் இராவணனுக்காக அணியப்பட்ட ஆண் உடையை மறைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது பார்வையாளருக்குத் தெரியாது. அவளுக்கு மீசை இன்னும் முளைக்கவில்லை. அவள் இப்போது சீதை. அந்தக் காட்சி முடிந்த கையோடு சீதை இராவணனாக மாறவேண்டும். பின்னால் மீசைவைக்கவும் கிரீடம் அணியவும் ஆட்கள் தயாராகவே இருந்ததால் இடைவெளி இல்லாமல் நாடகம் மிகச் சிறப்பாக நிகழ்ந்து கொண்டிருந்தது.



இப்போது இறுதிக் காட்சிக்கு வந்துவிட்டோம். தீ மூட்டப்படுகிறது.

எரியட்டும்... தீ எரியட்டும்..
எரியட்டும்... தீ எரியட்டும்...

சீதையைத் தீக்குளிக்கச் சொல்லி இராமர் கேட்கிறார்.

சீதை திருப்பி இந்த 14 ஆண்டுகளும் நீ ஒழுங்காக இருந்தாய் என்பது என்ன நிச்சயம்? நான் தூய்மையானவள் என்பதை நிரூபிக்க தீயில் இறங்க வேண்டு மேயானால் இராமா, நீயும் தூய்மையானவன்தான் என்பதை நிரூபிக்க தீக்குளிக்க வேண்டும் என்று கூறுகிறாள்.

இந்த உச்சக் கட்டத்தில் கவியங்காவும், நானும், வர்ணராமேஸ்வரன் மூவரும் இணைந்து பாடும் பாடல்

*"பெண்ணுக்கும் ஆணுக்கும் பொது நீதி வேண்டும்
மண்ணிலே மனிதர்க்கு ஒரு நீதி வேண்டும்"*

பாடலை நான் பாடத் தொடங்குகிறேன்.

இதயமே, இந்த நேரத்தில்தான் 'வில்லங்கம்' வந்தது. சிறுக சிறுக நீயும் உன்னுள்ளே தீ மூட்டத் தொடங்கிவிட்டாய். இதை நான் தெளிவாக உணரத் தொடங்கினேன்.

ICD மின்னலைகளை (Electric Waves - Pacing) அனுப்பி வேகமான உன் ஓட்டத்தைத் தடுக்க முயற்சி செய்வதையும் என்னால் உணர முடிந்தது. உதடுகள் வரண்டன, மூச்செடுத்துப் பாடுவது சிரமமாக இருந்தது. கடைசி அடி... நான் பாட முடியாது என்பதையும் பாடக்கூடிய நிலையில் என் இதயமே நான் இல்லை என்பதையும் அவ்வாறு பாடினால் உயிர் ஆபத்தான ஒரு நிலைக்கு அது என்னைக் கொண்டு சென்று விடும் என்பதையும் என் புத்தி இப்போது தெளிவாகப் புரிந்து கொள்ளுகிறது.

சூடு கண்ட பூனை...

மூன்று இயம கண்டங்களை ஏற்கனவே தாண்டிய பயம்.



"நிறுத்து - விலகு" என்று என் புத்தி இறுக்கமாக கட்டளை இடுகிறது.

நான் சிறிதும் தாமதிக்கவில்லை. உடனும் ஒலிவாங்கியிலிருந்தும் விடுபட்டு விலகி பின்னால் சாய்ந்து கொண்டு அதே வேளை பிரதம பாடகராகிய வர்ணராமேஸ்வரனுக்கு கை யைக் காட்டுகிறேன். அதை உணர்ந்து கொண்ட அவர் தொடர்ந்து அந்த இறுதி அடிகளைப் பாட மண்டபம் அதிரும் கையொலிகளுடன் நாட்டிய நாடகம் நிறை வடைந்தது.

இதற்குள் என் நிலையைப் புரிந்து கொண்ட என் மகள் உடனும் என்னருகில் வந்து கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு "அப்பா... என்ன செய்கிறது" என்று பயத்தோடு கேட்டார்... இதயமே, துரித கதியில் ஏறிக் கொண்டிருந்த உன் துடிப்பு ஒருநிலைக்கு வந்தது போலத் தெரிந்தது. அதற்குமேல் ஏறவில்லை என்பதோடு கொஞ்சம் கொஞ்சமாக கீழிறங்குவதையும் உணரமுடிந்தது.

தண்ணீர் ஊற்ற சிறிது சிறிதாக அடங்கும் தீச் சுவாலை போல நெஞ்செரிவு குறையத் தொடங்கியது. இதயமே, எந்த வேளையிலும் மீண்டும் ஒரு முழுமையான மின்னதிர்ச்சியை (Electric Shock) வழங்குவதற்கு உன்னை மிகக் கவனமாக அவதானித்து செயற்பட்டுக் கொண்டிருந்த ICD தயாராகவே இருந்தது. ஆனால் அந்தச் சூழல் ஒரு வினாடிக்குள் தவிர்க்கப்பட்டது.

இல்லையேல் நாட்டிய நாடகத்தின் இறுதிப் பகுதியின் தொடர்ச்சி இப்படி இருந்திருக்கும்.

இராமர் கடைசி வரைக்கும் தீக்குளிக்க இணங்கி இருக்க மாட்டார். அவர் கடவுளின் அவதாரம் என்றே சொல்லப்படுகிறது. இந்த நாடகத்தில் நான் வடிவமைத்த சீதை பழைய புராணத்து சீதையல்ல என்பதால் அவளும் தீக்குளித்திருக்க மாட்டாள்.

பாவம் "அவதாரம்" என்ற இந்த நாட்டிய நாடகத்தை எழுதிய நான்தான் தீக்குளிக்க நேர்ந்திருக்கும். நல்ல வேளை தப்பிப் பிழைத்தேன். "அவதாரம்" இப்படியாக அரங்கேறினாலும் என் தாரம், கவலையோடும் அதிக பதட்டத்தோடும் "தாமதிக்க வேண்டாம் அம்புலன்சைக் கூப்பிடுவோம்" என்று சொன்னார்.

அடுத்த நிகழ்ச்சி தில்லானா என்று நினைக்கிறேன். அவர் தனது தாளத்தை பிசக விடாது நட்டுவாங்கம் செய்ய வேண்டும். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக இதயமே உன் தாளம் - அதன் வேகம் குறைந்து கொண்டு போனதால் நான் கொஞ்ச நேரம் பார்த்து - நிலைமையை அவதானித்து 911 ஐ அழைக்கலாம் என்று சொல்லிவிட்டு ஓய்வாக ஓரிடத்தில் இருந்தேன்.

மகள் கையைப் பிடித்து இதயத் துடிப்பின் அளவை நேரத்தோடு ஒப்பிட்டு இரண்டு மூன்று முறை பார்த்தார். இதயமே ஓர் ஏழெட்டு நிமிடங்களுக்குள் நீ சாதாரண வேகத்துக்கு வந்துவிட்டாய் என்பதை அவர் உறுதிப் படுத்தினார்.

அதன் பின்னர் அரங்கேற்றம் மங்களத்துடன் நிறைந்து பார்வையாளர் அரங்கேறிய செல்விகளை வாழ்த்தி செல்லும்வரை நான் மிகுந்த பக்குவமாக ஆறி இருந்தேன்.

இதயமே, உன்னை மேலும் புரிந்து கொள்ளுவதற்கு மீண்டும் பல கேள்விகள் இப்போது முளைத்தன.

1. ஏற்கனவே பாதிக்கப்பட்ட இதயம் தனது சக்திக்கு அப்பாற்பட்டு இயங்கியதால் (Over Load) அதாவது அரங்கிலும் பின்புறமும் பலவிடயங்களையும் ஓடி ஆடி கவனித்த களைப்பால் இது ஏற்பட்டதா?

2. அளவுக்கு மீறிய பதட்டம், நாட்டிய நாடகம் உட்பட அரங்கேற்றம் முழுமையும் நல்லபடி நடக்க வேண்டுமே என்ற அதீத கவலை (Worry - Anxiety), பதட்டம் (Tension) என்பன இதயத் துடிப்பை அதிகரித்தனவா?

3. இதயத் துடிப்பு பிரச்சினை உண்டான மூன்று சந்தர்ப்பங்களிலும் ஒலி அமைப்பு (Sound System), அதன் கருவிகளான ஒலிபெருக்கிகள் (Speakers), ஒலிவாங்கிகள் (Microphones-Fm Mics), மொனிட்டர்ஸ் (Monitors) எனக்கும் என் இதயமே உனக்கும் மிக நெருக்கமாக இருந்திருக்கின்றன. ஆகவே இவற்றிற்கும் எனது இதய பிரச்சினைக்கும் ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா? இந்தக் கருவிகளின் இயக்கத்தில் மின்காந்த அலைகள் (Magnetic Waves) முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்த மின்காந்த அலைகள் இதயத் துடிப்பிலும் அதே வேளை எனக்குப் பொருத்தப்பட்ட ICD யிலும் தாக்கங்களை ஏற்படுத்த வல்லன.

4. அளவுக்கு மீறிய சத்தங்கள்-ஒலி அலைகள் (Sound Waves) மனிதரின் உடலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை? இதற்கும் இதய பிரச்சினைகளுக்கும் தொடர்பு உண்டா? ஏற்கனவே இதய பிரச்சினைகள் உள்ளவர்களை இது எந்த அளவுக்கு பாதிக்கின்றது? 2006 இல் அதிவேக இதயத் துடிப்பு (Arrhythmias) எனக்கு வந்ததைக் கண்டறிவதற்கு முன்னர் அதிக சத்தம் கொண்ட ஒலிபெருக்கியின் அருகே மூன்று நான்கு மணித்தியாலங்கள் - மேடையில் அறிவிப்பாளராக பங்களித்தபோது - நான் நின்றமை இதற்கு ஒரு காரணமாக ஏன் இருக்க முடியாது?

5. பின்னாளில் எந்தவிதமான பதட்டமும் கவலையும் இல்லாமல் சும்மா நடந்து போன பொழுது இது போன்ற வேகமான இதயத்துடிப்பு உருவாக என்ன காரணம்? (மனம் எப்போதும் எதையோ ஒன்றை, பலதை நினைத்துக் கொண்டும் அது பற்றி ஓரளவு கவலைப்பட்டுக் கொண்டும் இருக்கும் என்ற இயல்பான விடயத்தை இதில் பொருத்த வேண்டாம்).

இதயமே, உனக்கு வேகத்துடிப்பு (Arrhythmias) உண்டான பல் வேறு சந்தர்ப்பங்களும் இங்கு சொல்லப்பட்டுள்ளன. ஆகவே இந்தப் பிரச்சினைக்கான ஒற்றைக் காரணம் உண்டா? அல்லது இவற்றில் ஒன்றோ அல்லது பலவோ சேர்வதால் இந்தப் பிரச்சினை உண்டாகிறதா என்பதனை இதனை வாசிக்கும் எங்கள் நண்பர்களிடமும் கேட்டால் பயன் கிடைக்கலாம்.

இந்தக் கேள்விகள் தொடர்பாக மருத்துவ வல்லுனர்களின் பதில்களும், சில ஆய்வுகளும் அவற்றின் முடிவுகளும் இருக்கின்றன. இன்னும் ஆய்வுகள் நடை பெறுகின்றன.

ஆனாலும் இதை வாசிக்கும் நண்பர்களில் எவருக்காவது இது சார்ந்த அனுபவங்கள் ஏதேனும் இருந்தால் பகிர்ந்து கொள்வதும் இந்தச் சந்தர்ப்பத்தில் பயனுள்ளவையாக இருக்கும்.



குறிப்பு: இந்நூல் வெளிவரும் இச்சந்தர்ப்பத்தில் சங்கீத கலாவித்தகர் வர்ணராமேஸ்வரன் கொரோனாவுக்கு இரையாகி (25.09.2021) எம்மோடு இல்லை என்பது பெரும் கவலைக்குரியது

# இவ்வார ராசிபலன்

**12-08-2022 வெள்ளி தொடக்கம் 18-08-2022 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)


தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** திருப்திகள் பெருகும் வாரம். திறமைகள் வெளிப்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். ஆன்மீக பயணம் மேற்கொள்வீர்கள். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கட்டிடத் தொழிலில் கவனம் தேவை. முதலீடுகள் உண்டாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளியின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். மனோபயம் அகலும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். நட்டம் இல்லாத காலம். பட்டம் பதவி வந்து சேரும். வினைகள் அகலும். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். அன்னதானம் நிதானத்தை அதிகப்படுத்தும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**ரிஷபம்:** ஆளுமையான செயல்பாடுகள் அரங்கேறும் வாரம். பிரார்த்தனைகள் நிறைவேறும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வளமான காலம். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். புதிய சிந்தனை உருவாகும். சுபச்செய்திகள் வரும். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். சுபச்செய்திகள் வரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மையுண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். தகுதிகள் மிகுதியாகும். சாதனைகள் ஏற்படும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. திடீர் திருப்பம் ஏற்படும். கண்நோய் வந்து போகும். பிரபல்ய ஆசை ஏற்படும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**மிதுனம்:** வெற்றிக் கிட்டும் வாரம். அணிகலன்கள் சேரும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். பொறுப்புக்கள் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். குடும்ப மன நிறைவு உண்டாகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் லாபம் தரும். பெருமிதமான காலம். பழைய கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். இனிப்பானச் செய்தி வரும். போட்டிகள் மறையும். காதல் கை கூடும். விவாக முயற்சி வெற்றித் தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,4,9
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,F




**கடகம்:** சிக்கனத்தை கடைப்பிடிக்கும் வாரம். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு கூடும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்கு சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். சோம்பல் அதிகரிக்கும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். ஆலோசனை பலன் தரும். தொல்லைகள் ஒழியும். பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கட்டிடத்தொழில் லாபம் தரும். கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் வரும். குதூகலம் சேரும். வழிபாடு மாற்றம் தரும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். குதூகலம் சேரும். வெளியூர் பயணம் உண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் தீரும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். பழையக்கடன் வசூலாகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைவழிச் செலவு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோதைரியம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Z




**சிம்மம்:** மேன்மைகளை சந்திக்கும் வாரம். மெத்தனப் போக்கு விலகும். பயணம் லாபம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவம் உயரும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். பணவரவு உண்டு. புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் பெருகும். குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை அகலும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வாகன மாற்றம் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். வரவுகள் திருப்தி தரும். சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. தனவரவு உண்டு. தாராளமான வருமானம் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 2,6,9,4
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,K





**கன்னி:** உழைப்பிற்கான பலன் கிடைக்கும் வாரம். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் லாபம் கூடும். துன்பங்கள் அகலும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். உன்னதமான காலம். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் மறையும். நாவடக்கம் தேவை. தாய் வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். வீண் வம்பு உருவாகும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். அலைச்சல் அதிகரிக்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும் மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வினைத்தீர்க்கும் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 7,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**துலாம்:** வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும் வாரம். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு அதிகரிக்கும். மாலைநேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வாழ்த்துக்கள் கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. எதிர்கால எண்ணம் நிறைவேறும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். யோகமான காலம். முத்தாய்ப்பான வாய்ப்புக்கள் பெருகும். பணப்பற்றாக்குறை நீங்கும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வாய்ப்புக்கள் அதிகரிக்கும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். வராத கடன் வந்து சேரும். வெகுமதிகள் பெருகும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். வெற்றிகள் குவியும். சாதகமான வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,A




**விருச்சிகம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு கூடும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும் புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். வாழ்த்துக்கள் கிட்டும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வமையும். சிந்தனை மேலோங்கும். வினைகள் அகலும். ஆதாயம் பெருகும். வழக்குகளில் வெற்றி உண்டு. வாகன மாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். காரியம் கைக்கூடும். குடும்ப மேன்மை உண்டாகும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ரபகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,6,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U

*(தொடர்ச்சி 34 பக்கம்)*

## இவ்வார ராசிபலன்

(33 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** ஆடம்பர பொருள் சேரும் வாரம். குடும்ப மேன்மை உண்டாகும். உடல் சோர்வு ஏற்படும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். காரியம் கைகூடும். செல்வச்செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். சாதகமான காலமாக அமையம். மின்சாரத்தில் கவனம் தேவை. குதூகலமான எண்ணம் உருவாகும். குடும்ப கௌரவம் உயரும். வரவு திருப்தி தரும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். காரியம் கைகூடும். ஆனந்தம் குடிக்கொள்ளும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோக உயர்வு கிட்டும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேற்றுமைகள் விலகும். வெறுப்புக்கள் அகலும். விருப்பங்கள் நிறைவேறும். பொறுப்புக்கள் கூடும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. வணிகத்தொழில் விரிவடையும். பயணம் தடைப்படும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். பயணம் பலன் தரும். பழையக்கடன் ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,N




**மகரம்:** லாபம் அதிகரிக்கும் வாரம். சுபச்செய்தி வரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. கௌரவமான காலம். பறவைகளுக்கு உணவு தானம் அளித்தால் பணவரவு பெருகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். கால்நடைகளால் லாபம் உண்டு. கண்நோய் வந்து போகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். சாதனைகள் ஓங்கும். சிறப்புகள் வந்து சேரும். தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச்சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். உடல்நலம் கவனம் தேவை. எண்ணம் வண்ணமயமாகும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கனிவான காலம். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் போட்டி அதிகமாகும். மனைவியின் அன்யோன்யம் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். பெற்றோரின் ஆதரவு அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 9,1,5,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,I



**கும்பம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குடும்ப உறவு பலப்படும். உள்ளத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். சச்சரவுகள் அகலும். கடன் தொல்லை நீங்கும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். மன சந்தோஷம் கூடும். ஊக்கம் அதிகரிக்கும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பொன்னான காலமாக அமையும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கல்வி ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 1,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,A



**மீனம்:** காரிய வெற்றி தரும் வாரம். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். இடமாற்றம் உண்டு. வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். மதிநுட்பம் தேவை. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். இடமாற்றம் ஏற்படும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் அக்கறை தேவை. வழக்குகள் சாதகமாகும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடு தவிர்க்கவும். சுபச்செலவு அதிகரிக்கும். திடீர் மாற்றம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,3,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H



# கல்லின் கதை

- உமா மோகன் -

எத்தனை நாட் தட்டுப்பட்டேன் உன் காலில் நான்
எத்தனித்தாயா எட்டி எனை எடுப்பதற்கு?

மேலைத்தேய மோகம் உனக்கும் - நீ
கீழைத்தேய எம் வாழ்வதை மறந்திட்டாய்

காலநிலைக்கு உகந்த வீடு
நேரத்தோடு இருந்தது உனக்கு - முன்னர்

வேற்று நாடு போயும் என்னை
போற்றித் தானே காத்தாய்

சொல்லிவிட்டாள் மகள் உனக்கு - அவள்
பிள்ளைகட்கு கரி பிடிக்காது என்று

இடித்துவிட்டாய் நீயும் வெடுக்கென்று
திடுக்கிட்டேன் நானும் தான் - பல

தட்டுக்களோடு கூடிய இரண்டு அறைகள்
விட்டுவீதியாய்க் கட்டிய அடுக்களைக்குள்

நின்றெரிக்கும் நிலையில் விறகு அடுப்பு - அங்கு
நன்றாகப் புகையை வெளியேற்றும் புகைப்போக்கி

எத்தனைபேர் வந்தாலும் வடித்தெடுப்பாள்
அத்தனை பேருக்குமாய் உன் அன்னை - பின்னாள்

மின்னடுப்பு வந்தாலும் என்னையும் நீ
பேணினாயே
என்னதான் நடந்ததோ உனக்கு

நேற்று அவன் நேர்த்தியாக நொருக்கும்போது
பார்த்துக் கொண்டு நின்றாயே - கொஞ்சமேனும்

பதறியதா உன் மனது ? - அன்றி
நினைவேதும் வந்ததுவா முன்னாளின்?

புதிதாகக் கட்டுதற்காய் இடித்தவர் இடித்தார் - புதுவிதத்தில்
பெரிதாகக் கட்டுவதில் குறியாக இருந்தபோதும்

இடித்துரைத்துச் சொல்லுகிறாய் "அள்ளிப்போ
வடிவில்லை கற்கள் முற்றத்தில்" என

வேதனையாய் இருந்தது கேட்பதற்கு - அன்று
தேவதைபோல் உன் சிறுபெண்கள்

இடிமுழக்கம் வந்துவிட்டால் எம் கீழ்
ஓடிவந்து ஒளித்திடுவர்

அடுக்கடுக்காய் தட்டுக்கள் நாங்கள்
வெடுக்கென வந்த செல்களுக்கும்

பாதுகாப்புத் தந்ததையும் மறந்ததுவும்
பெரும் மன வலிதான் - ஆனாலும்

இன்றும் நீ பாவம் என்றுதான் சொல்லுகிறேன்
அன்று அவன் அள்ளும் போது தள்ளிவிடாது போயிருப்பின் - இன்று

எரிவாயு தீர்ந்துபோக அதன் விலையும் அதிகமாக
தூசு அடுப்பும் துணைக்கு இன்றி

மண்ணெண்ணையும் கடையில் இன்றி
மின்னடுப்பும் ஒழுங்கு இன்றி இருப்பதையும்

பறந்து வந்த மகளுக்கும் பிள்ளைகட்கும்
சமைப்பதுக்கு - நீ
பதறித் திரிவதையும் பார்ப்பதற்கு வாய்ப்பெனக்கு கிடைத்திராது

இன்றும் கூட வேறு வழியின்றி விறகடுப்பிற்காய்
இரண்டு கற்கள் எடுத்தபோதும் என்னை - நீ

தொட்டாயா? தொட்டவள் உன் பேத்தியே - தூரவிடம் தேடாமல்
தூக்கிவரும் என்னை இப்பவேனும் தொட்டுக்கொள்!

Carefirst Family Health Team

# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS
"Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1375 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 12, 2022

# ‘கனடாவில் ஒரு தமிழ் ஒலிபரப்புச் சாம்ராஜ்யத்தை உருவாக்கி வைத்துள்ளார் நடா இராஜ்குமார்’

## அன்பு அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீது புகழாரம்



தமிழோசை சினி மீடியா கலை நிகழ்ச்சிகளுக்காகவும் தான் எழுதிய “வானலைகளில் ஒரு வழிப்போக்கன்” என்ற நூலை வெளியீடு செய்யவும் ரொறன்ரோ மாநகர் வந்துள்ள, உலகத் தமிழ் மக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்ற அன்பு அறிவிப்பாளர் பி. எச் அப்துல் ஹமீது அவர்கள் ஆகஸ்ட் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை நடா ராஜ் குமார் அவர்களின் **EAST FM** இன் புதிய கலையகத்துக்கு விஜயம் செய்து கலையகத்தைப் பார்வையிட்டதுடன் தனது ஆசியையும், வாழ்த்துக்களையும் வழங்கினார் (உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)

# "மாவிலி மைந்தன்""" எனும் புனைபெயர் கொண்ட கவிஞர் சண்முகராஜாவின்"மனவெளி மேகங்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா



கனடாவில் “மாவிலி மைந்தன்““ எனும் புனைபெயரைத் தாங்கி கலை இலக்கியம் மற்றும் கவிதை இலக்கணம் ஆகிய துறைகளில் ஆர்வத்துடன் செயற்பட்டுவரும் கவிஞர் சண்முகராஜாவின் “மனவெளி மேகங்கள்“ கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த 06-08-2022 அன்று சனிக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள தமிழிசைக் கலாமன்றத்தில் நடைபெற்றது.

கவிஞர் சண்முகராஜா அவர்களின் புதல்வர் நீதன் சண்முகராஜா அவர்கள் அன்றை விழாவை தொகுத்து வழங்கினார்.

(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)

# IMHO-USA, Ratnam Foundation-UK அமைப்புக்களின் நிதிப்பங்களிப்பில் பூநகரி பிரதேச 1000 முன்பருவ பள்ளிச் சிறார்களுக்கான போசாக்குணவு வழங்கும் செயல்திட்டம்



தற்போது நாட்டில் நிலவும் மிக மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக முன்பள்ளிச் சிறார்களில் பெருமபாலானோர் போசாக்கு இன்றி பாதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களது வரவும் முன்பள்ளிகளில் குறைந்து செல்கின்றது என்ற ஆதங்கம் பலராலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டான சூழ்நிலையை கருத்தில் கொண்டு கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைவாக பூநகரி பிரதேசத்திலுள்ள 51 முன்பள்ளிகளில் பயின்று வரும் 1000 சிறார்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் செயற்பாடு மேற்படி **IMHO-USA** மற்றும் **Ratnam Foundation-UK** அமைப்புக்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

# கனடா வீணைமைந்தனை ‘யாழ்மைந்தன்’ ஆக உயர்த்திய அவரது பவள விழாக் கொண்டாட்டம்




ஆகஸ்ட் 7ம் நாள் ஞாயிறு மாலை கனடா வீணைமைந்தன் அவர்களின் வாழ்வில் ஒரு பொன்னாள். திரு நல்லூர் சண்முகப்பெருமானின் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய பெருந்திருவிழா ஆறாம் நாள் முருகப்பெருமான் ஆட்சிசெய்யும் திருத்தலத்துக்கு அண்மையில் அமையப்பெற்றுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் வீணைமைந்தன்-75 பவள விழா வெகு விமரிசையாக ஆரம்பமானது.யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் யாழ்.,லக்கிய வட்ட த்தலைவருமான சிரேஷ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கனார் தலைமையில் கலை இலக்கியப் படைப்பாளிகளும் கற்றறிந்த சான்றோரும் நிறைந்த அவையிலே இனிதாய் அமையப்பெற்றது (உள்ளே விபரமான கட்டுரை 29ம் பக்கத்தில்)

# கோத்தபாய எங்கு சென்றாலும் நீதிக்கான போராட்டம் தொடரும் ! — நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

இனப்படுகொலையாளியும், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியுமாகிய கோத்தபாய இராஜபக்ச எந்த நாட்டுக்கு சென்றாலும், உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் அவரை கைது செய்யக் கோரும் நீதிக்கான போராட்டம் தொடரும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது. (உள்ளே விபரமான செய்தி 4 ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker

ALLSTATE'S
2022 NATIONAL CHAMPION AWARD WINNER!
RONALD ANTON
Allstate Trusted Advisor and Agent
GET A FREE QUOTE
FOR AN EXCLUSIVE DISCOUNT, PLEASE CALL:
416.846.6479
Allstate.
You're in good hands.